



# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com






CHENNAI | Volume- 3 | Issue:202 | 06-02-2026 | வெள்ளிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

06.02.2026 தை 23
வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் 6.36

திதி:
இன்று அதிகாலை
3.11 வரை சதுர்த்தி
பின்பு பஞ்சமி.

நட்சத்திரம்:
இன்று அதிகாலை
1.41 வரை உத்திரம்
பின்பு அஸ்தம்

யோகம் :
இன்று அதிகாலை
2.44 வரை
சுகர்மம் பின்பு திருதி

கரணம் :
இன்று அதிகாலை
3.11 வரை பாலவம்
பின்பு மாலை 3.37 வரை
கௌலவம் பின்பு தைதுலம்.

அமிர்தாதி யோகம் :
இன்று அதிகாலை
1.41 வரை யோகம்
சரியில்லை பின்பு காலை
6.35 வரை சித்த யோகம்
பின்பு அமிர்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று அதிகாலை
1.41 வரை அவிட்டம்
பின்பு சதயம்

நல்ல நேரம்
காலை 9.00 – 10.00.
மாலை 4.30 – 5.30
இராகு காலம்
காலை 10.30 – 12.00.
எமகண்டம்
பிற்பகல் 3.00 – 4.30.

குளிகை
காலை 7.30 – 9.00.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# “வளர்ந்த இந்தியாவை நோக்கி நாடு வேகமாக பயணிக்கிறது”

## மாநிலங்களவையில் பிரதமர் மோடி பேச்சு

**புதுடெல்லி, பிப்.6:**

இந்தியா பிரகாசமான எதிர்காலத்தைக் கொண்டிருக்கிறது என்றும், வளர்ந்த இந்தியாவை நோக்கி நாடு வேகமாக பயணிக்கிறது என்றும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பட்ஜெட் கூட்டத்தொடரை முன்னிட்டு கடந்த ஜனவரி 28-ம் தேதி, நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உரை நிகழ்த்தினார். அவரது உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது மக்களவையில் பிரதமர் மோடி உரை நிகழ்த்துவதை தவிர்த்துவிட்டார். இதையடுத்து, பிரதமர் மோடியின் பதில் உரை இல்லாமல் குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மக்களவையில் இன்று நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், இன்று மாநிலங்களவையில் நடத்தப்பட்ட விவாதத்தில் பங்கேற்று பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். அப்போது அவர் பேசியது: “குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தனது உரையில், நடுத்தர வர்க்கம், கீழ் நடுத்தர வர்க்கம், ஏழைகள், கிராமங்கள், விவசாயிகள், பெண்கள், அறிவியல், தொழில்நுட்பம், விவசாயம் உள்ளிட்ட அனைத்து விஷயங்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

மேலும், இந்தியாவின் முன்னேற்றத்துக்கான ஒருங்கிணைந்த குரலை நாடாளுமன்றத்தில் எதிரொலித்துள்ளார்.

நாட்டின் இளைஞர்கள் இந்தியாவின் திறனை எவ்வாறு முன்னேற்றுகிறார்கள் என்பதை அவர் விரிவாக விவாதித்துள்ளார். ஒவ்வொரு பிரிவின் திறனையும் அவர் எடுத்துரைத்துள்ளார். இந்தியாவின் பிரகாசமான எதிர்காலத்தின் மீது அவர் நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளார். இது நம் அனைவருக்கும் ஊக்கமளிக்கிறது.

21-ஆம் நூற்றாண்டின் முதல் காலாண்டு முடிந்துவிட்டது, ஆனால் இந்த இரண்டாவது காலாண்டு கடந்த நூற்றாண்டில் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தின் இரண்டாவது காலாண்டைப் போலவே தீர்க்கமானது. இந்த இரண்டாவது காலாண்டும் அதே அளவுக்கு சக்திவாய்ந்ததாகவும், வளர்ந்த இந்தியாவை உருவாக்குவதை நோக்கி அதே வேகத்தில் முன்னேறும் என்பதையும் நான் தெளிவாகக் காண்கிறேன்.

இன்று, நாட்டின் ஒவ்வொரு நபரும் ஒரு முக்கியமான மைல்கல்லை எட்டியுள்ளதாக உணர்கிறார்கள். இப்போது நாம் நிறுத்தவோ அல்லது திரும்பிப் பார்க்கவோ கூடாது. நாம் வேகமாக முன்னேறி, நமது இலக்குகளை அடைந்தாக வேண்டும். நாம் அந்த திசையில் நகர்கிறோம்.



உலகின் முக்கியப் பொருளாதாரங்களில், இந்தியா இன்று குறிப்பிடத்தக்க உயர் வளர்ச்சியைப் பெற்று வருகிறது. விரைவான வளர்ச்சியும் குறைவான பணவீக்கமும் கொண்ட இந்த அரிய கலவையானது, நமது பொருளாதாரத்தின் வலிமைக்கும் மீள்தன்மைக்கும் ஒரு சான்றாகும்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, இந்தியா 'பலவீனமான ஐந்து' பொருளாதார நாடுகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. சுதந்திரம் பெற்ற நேரத்தில், நாம் உலகின் 6-வது பெரிய பொருளாதாரமாக இருந்தோம். இருப்பினும், இடைப்பட்ட ஆண்டுகளில் ஏற்பட்ட தவறான நிர்வாகம் காரணமாக, நமது தரம் 11வது இடத்துக்குச் சரிந்தது. இப்போது, நாம் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாறுவதற்கான பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், உலகின் மிகவும் வளமான நாடுகள் கூட வயதாகி வருகின்றன. அவற்றின் மக்கள் தொகை நாம் முதியவர்கள் என்று அறியும் வயதை எட்டியுள்ளது. நமது நாடு வளர்ச்சியின் புதிய உயரங்களை எட்டுகிறது. அதே நேரத்தில், நமது நாடு நாளுக்கு நாள் இளமையாகி வருகிறது. இது இளம் மக்கள்தொகை கொண்ட நாடு.

இன்று, உலகம் ஒரு புதிய உலக ஒழுங்கை நோக்கி வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கிறது. தற்போதைய சூழ்நிலைகளையும் நிலவரங்களையும் அரசியல் சார்பின்றி நாம் பகுப்பாய்வு செய்யும்போது, இந்தியாவின் மீது நாட்டம் அதிகரித்து வருவதை தெளிவாகக் காண முடிகிறது. உலகின் நண்பனாகவும், உறவினனாகவும் திகழ்வதோடு, இன்று இந்தியா பல நாடுகளுக்கு ஒரு நம்பகமான பங்காளியாக உருவெடுத்துள்ளது.

இந்தியா மீதான உலகத்தின் ஈர்ப்பு அதிகரித்து வருவதால், இந்தியாவின் திறமையின் முக்கியத்துவத்தையும் அது அங்கீகரித்து வருகிறது. கனவுகள், உறுதி, வலிமை ஆகியவற்றைக் கொண்ட உலகின் மிக முக்கியமான இளம் திறமையாளர்களை நாம் கொண்டுள்ளோம். சக்தியின் ஆசிர்வாதம் நம்முடன் உள்ளது. இன்று உலகில் உருவாகி வரும் சவால்களுக்கு தீர்வுகளை வழங்கும் நாடாக இந்தியா உள்ளது.

உலகெங்கிலும் உள்ள பல நாடுகளுடன் இந்தியா வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகிறது. சமீபத்தில் நாங்கள் ஒன்பது ஒப்பந்தங்களை இறுதி செய்துள்ளோம். இவற்றில், 'அனைத்து ஒப்பந்தங்களுக்கும் தாய்' என்று அடிக்கடி குறிப்பிடப்படும் மிக முக்கியமான ஒப்பந்தமான, ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 உறுப்பு நாடுகளுடனான ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது.

உலகின் முக்கிய பொருளாதாரங்களில் இந்தியாவின் வளர்ச்சி இன்று மிக அதிகமாக உள்ளது. இந்தியா சுதந்திரம் பெற்றபோது, நாம் உலகின் ஆறாவது பெரிய பொருளாதாரமாக இருந்தோம். ஆனால் இவர்கள் (எதிர்க்கட்சி வரிசையில் உள்ள காங்கிரஸை சுட்டிக்காட்டிப் பேசினார்) நமது பொருளாதாரத்தில் பெரும் அழிவை ஏற்படுத்தி, அதை 11-வது இடத்திற்குத் தள்ளியுள்ளனர். இன்று, நாம் மூன்றாவது இடத்தில் உள்ள பொருளாதாரமாக மாறுவதை நோக்கி வேகமாக நகர்கிறோம். இன்று, இந்தியா அனைத்து துறைகளிலும் நம்பிக்கையான இந்தியாவாக உள்ளது.

'சீர்திருத்தம், செயல்பாடு மற்றும் மாற்றம்' என்ற கொள்கையுடன் நாம் முன்னேறியுள்ளோம். நாடு இப்போது சீர்திருத்தப் பாதையில் வேகமாகப் பயணித்துக்கொண்டிருக்கிறது. எங்கள் முயற்சிகள் உற்பத்தித் துறையை வலுப்படுத்துவதிலும், நமது தொழில்முனைவோருக்கு ஆதரவளிப்பதிலும் கவனம் செலுத்தியுள்ளன. இந்தியா இப்போது உலக அரங்கில் போட்டியிடத் தயாராக உள்ளது என்று நான் நம்பிக்கையுடன் கூற முடியும்” என்று பிரதமர் மோடி பேசினார்.

# ரூ.34,000 ஆயிரம் கோடி மதிப்பிலான 15 தொழில் முதலீடு

**சென்னை, பிப்.6:**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று சென்னை, தலைமைச் செயலகத்தில், நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்கள் கலந்து கொண்ட பிறகு செய்தியாளர்களை சந்தித்து பேசியதாவது:-

இன்றைய அமைச்சரவையில், ஏறத்தாழ 15 முதலீட்டு திட்டங்களுக்கு முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பாக ஒட்டுமொத்தமாக 34,237.39 கோடி ரூபாய்க்கான முதலீடு, 55,096 நபர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கக்கூடிய ஒரு அற்புதமான பல திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியிருக்கிறது நமது அமைச்சரவை.

இத்திட்டங்கள் மாநிலத்தின் பரவலான வளர்ச்சிக்கு உறுதி செய்யும் விதமாகவும், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி, கரூர், திருப்பூர், ராமநாதபுரம், தூத்துக்குடி உள்ளிட்ட மாவட்டங்களில் அமைக்கப்பட உள்ளன.

இதில் மிக முக்கியமான ஒரு திட்டம் வருகின்ற 13-ஆம் தேதி அதற்கான அறிவிப்பு வெளிவரும். 12-ஆம் தேதி உங்களுக்கு நன்றாக தெரியும். கன்வெர்ஷன் கான்க்ளேவ். இதுவரைக்கும் எந்த அரசாங்கமும் நடத்தாத ஒரு கன்வெர்ஷன் கான்க்ளேவ் நடத்த இருக்கிறோம். அன்றும் பல அறிவிப்புகள் வரவிருக்கின்றன.

குறிப்பாக, இதில் கெயின்ஸ் சர்க்யூட் லிமிடெட் என்னும் மின்னணுவியல் நிறுவனம், அதாவது பிரிண்டட் சர்க்யூட் போர்ட்ஸ், பிசிபிஸ், கேமரா மாடியூல்ஸ், லேமினேட்ஸ் இதையெல்லாம் செய்கின்ற கேமரா மாடியூல்ஸ் எல்லாம் இப்போது மிகவும் முக்கியமான தேவை மேம்பட்ட உற்பத்தி.



அடுத்து, ஜான்சன் எலெக்ட்ரிக் -வாகன மின்னணு உப பாகங்கள், ஆக்சுவேட்டர்ஸ், பிஎல்டிசி மோட்டார்ஸ், பவர் கூலிங் மோட்டார்ஸ் இதையெல்லாம் உற்பத்தி செய்கின்ற ஒரு நிறுவனம். எவர்வேன் கோத்தாரி ஃபுட்வேர் - இவர்கள் ஏறத்தாழ 25,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க உள்ளார்கள். அடுத்ததாக, தமிழ்நாட்டிற்கு அதிதாஸ் பிராண்டை கொண்டு வர இருக்கிறோம்.

சென்னைராதாஇன்ஜினியரிங் இதுவும் மிகவும் முக்கியமான ஒரு இன்வெஸ்ட்மென்ட். ஷிப் பில்டிங்கில் உங்களுக்கே நன்றாக தெரியும். ப்ளூ எக்கனாமி அடுத்த கட்டத்திற்கு கொண்டு சேர்க்கவேண்டும். தமிழ்நாட்டின் முழுமையான கோர்ஸ் நல்லபடியாக உபயோகப்படுத்த வேண்டும். அங்கே இருக்கின்ற நம்முடைய மீனவ நண்பர்களுக்கு மிகப்பெரிய ஒரு வாழ்வாதாரத்தை வழங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு ஷிப் பில்டிங்கில் ஒரு பெரிய முன்னெடுப்பு நடந்து கொண்டிருக்கிறது. அந்த விதத்தில் நம்முடைய சென்னை ராதா இன்ஜினியரிங் ஷிப் ஹல்ஸ் செய்கின்ற ஒரு திட்டத்தில் அவர்கள் இறங்கி இருக்கிறார்கள். அதற்கான ஒப்புதலும் இன்று கிடைத்திருக்கிறது.

அதேபோல, ஜோனஸ் என்ற ஒரு ஏரோஸ்பேஸ் அண்ட் டிபன்ஸில் (A&D) ரெடார், ரெடார் சிஸ்டம், ஆர்டிலரி ஷெல்ஸ், மிசைல் சப் சிஸ்டம்ஸ் இதையெல்லாம் செய்யப் போகிறார்கள். இது ஒரு மிகப்பெரிய ஒரு முன்னெடுப்பு. அதற்கான ஒப்புதலும் இன்று கிடைத்திருக்கிறது.

யசாக்கி இந்தியா பிரைவேட் லிமிடெட் - வாகன உபபாகங்கள், வயரிங் ஹார்னஸ், பஸ் ஸ்பார்ஸ் இதெல்லாம் செய்கின்ற நிறுவனம். அதையடுத்து, ஹுண்டாய் ஏற்கனவே இருக்கின்ற சில நிறுவனங்களுக்கான அந்த விரிவாக்கத்திற்காகவும் (expansions) இன்றைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

ஜெட்சால் எனும் ஒரு நிறுவனம் அவர்கள் சோலார் செல் உற்பத்தி செய்வதற்கு தூத்துக்குடிக்கு வந்திருக்கிறார்கள்.

எனவே, தமிழ்நாட்டில் பரவலாக்கப்பட்ட வளர்ச்சியை தொடர்ந்து உறுதி செய்யப்பட்டு, இந்தியாவின் நம்பர்-1 மாநிலம் தமிழ்நாடுதான் என்பதை தொடர்ந்து உறுதி செய்யும் இந்த வேலையை திராவிட நாயகன் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்.

அந்த வகையில், தொழில் துறையில், இன்று ஏறத்தாழ 34,000 கோடி ரூபாய்க்கான முதலீடுகள் 55,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வரவிருக்கின்றன. அதற்கான ஒப்புதல் இன்றைக்கு நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் மூலம் எங்களுக்கு கிடைத்திருக்கிறது. இதுதான் திராவிட நாயகன், திராவிட மாடல் அரசின் வேகம். இது தொடரும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# சென்னை - ஜல்பைகுரி ரயில் தடம் புரண்டது!

**சென்னை, பிப்.6:**

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து மேற்கு வங்கத்தின் நியூ ஜல்பைகுரி ரயில் நிலையத்தை நோக்கி புதன்கிழமை காலை அதிவிரைவு ரயில் (எண் 22611) புறப்பட்டுச் சென்றது.

இந்த ரயில் இன்று காலை 8.51 மணியளவில் ஒடிஸா மாநிலத்தின் ஜாகபுரா ரயில் நிலையத்தை கடந்து செல்லும்போது, தண்டவாளத்தில் இருந்து தடம் புரண்டது.

ரயிலின் ஒரு குளிர்சாதன பெட்டியும், இரண்டு முன்பதிவில்லா பெட்டியும் தண்டவாளத்தைவிட்டு விலகியதால் உடனடியாக ரயில் நிறுத்தப்பட்டது. ரயிலில் பயணித்த யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும், அனைவரும் பத்திரமாக இருப்பதாகவும் முதல்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தமிழக தேர்தல்: பிப். 11-ல் துணைத் தேர்தல் ஆணையர் வருகிறார்!

**புதுடெல்லி, பிப்.6:**

தமிழகத்தில் சட்டபேரவைத் தேர்தல் விரைவில் அறிவிக்கப்படவுள்ள நிலையில் இந்திய தலைமை தேர்தல் ஆணையத்தின் துணை தேர்தல் ஆணையர் வருகிற பிப். 11 ஆம் தேதி தமிழகம் வரவிருக்கிறார்.

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் பணிகள் கடந்த நவ. 4 ஆம் தேதி தொடங்கிய நிலையில் ஜன. 30 வரை நடைபெற்றது.


வருகிற பிப். 17 ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியாக உள்ளது. பிப்ரவரி இறுதியில் பேரவைத் தேர்தல் குறித்த அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் துணை தேர்தல் ஆணையர் பானு பிரகாஷ் வருகிற பிப். 11 ஆம் தேதி தமிழகம் வரவிருக்கிறார்.

எஸ்ஐஆர் இறுதிப் பணிகள், தேர்தல் முன்னேற்பாடுகள், வாக்குப்பதிவு இயந்திரங்கள் சோதனை உள்ளிட்டவை குறித்து ஆய்வு செய்யவும் தேர்தல் குறித்து தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரியைச் சந்தித்து ஆலோசனை மேற்கொள்ளவும் வரவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.







## திருக்குறள் குறள்-522

**விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா
ஆக்கம் பலவுந் தரும்**



அன்பு நீங்காத சுற்றம் ஒருவனுக்குக் கிடைத்தால், அது மேன்மேலும் வளர்ச்சி குறையாத ஆக்கம் பலவற்றையும் அவனுக்குக் கொடுக்கும்.

## சிந்திக்க ஒரு நொடி



கடல் அலைகள் போல்
கவலைகள்
வந்து கொண்டுதான்
இருக்கும் அதனுடன்
சென்றால் நீ
நோயாளி
அதை விலக்கி
வைத்தால் நீ அறிவாளி

**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

## கலைவாணர் அரங்கில் கைவினைப் பொருட்கள் கண்காட்சி



கலைவாணர் அரங்கில் கைவினைப் பொருட்கள் கண்காட்சியை முதல்வர் ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். அமைச்சர்கள் நேரு,அன்பரசன், சேகர்பாபு,மேயர் பிரியா உடன் உள்ளனர்.

## பாட்டாளி மக்கள் சமத்துவ திருமணம்

**செங்கல்பட்டு, பிப்.06:**



மேல்மருவத்தூர் அருகே பாட்டாளி மக்கள் சமத்துவ திருமணம் ஆன்மிக மக்கள் தொண்டு இயக்க தலைவர் கோ.ப.அன்பழகன் தலைமையில் நடைபெற்றது.

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே உள்ள சித்தாமூர் ஒன்றியம் சிறுகருணை கிராமத்தில் வசித்து வரும் பாட்டாளி மக்கள் நரிக்குறவர் தம்பதியான வரலட்சுமி மாறன் ஆகியோருக்கு வேல்மருவத்தூர் ஆன்மீக மக்கள் தொண்டு இயக்க தலைவர் கோ.ப.அன்பழகன் தலைமையில் இலவச திருமண விழா தமிழ் பாரம்பரிய முறைப்படி சீர் வரிசை வழங்கி திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார்.

முன்னதாக ஆன்மீக மக்கள் தொண்டு இயக்கம் சார்பில் முகூர்த்த மேடையில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு திருமணத்திற்கு வருகை தந்த செவ்வாடை தொண்டர்களுக்கு அட்சதை வழங்கினர்.

அதன் பின்னர் வண்ண மலர்கள் அட்சதை தூவி மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வில் இரும்புலி ஊராட்சி மன்ற தலைவர் சூர்யாகலா மன்மதன், விழாவிற்கு உண்டான அனைத்து ஏற்பாடுகளும் ஆன்மிக மக்கள் தொண்டு இயக்க இயக்குனர் ஜி.கே.சதீஷ்குமார், சுந்தரம், சிவகுமார் லிங்கநாதன் கண்ணன் குமரன் ஆகியோர் செய்திருந்தனர்

விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

## தமிழ்நாடு இபேப்பர் பண்பலை தெய்வம் இதழ் தமிழா டிவி சார்பில் சங்ஹட ஹர சதுர்த்தி அபிஷேகம்!!



**நாகப்பட்டினம், பிப்.06:**

நாகப்பட்டினம் மாவட்டம் ஆழியூர் அருள்மிகு ஸ்ரீவீர சக்தி விநாயகர் கோயிலில் தமிழ்நாடு இபேப்பர் பண்பலை மற்றும் தெய்வம் இதழ் தமிழாடிவி சார்பில் சங்ஹட ஹர சதுர்த்தி அபிஷேகம் ஆராதனை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.. முன்னதாக.. திரவியம் மஞ்சள் பொடி பால் இளநீர் பஞ்சாமிர்தம் சந்தனம் அபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.. வாசகர்கள் பெயரில் சங்கல்பம் செய்யப் பட்டு கடன் நிவர்த்தி குடும்ப ஷேமம் அஷ்ட ஐஸ்வர்யம் கிடைக்கப் பெற அர்ச்சனை செய்யப்பட்டது... மோதகம் அவல் பொரி புளி சாதம் வெண் பொங்கல் சுண்டல் கேசரி போன்றவை நிவேதனம் செய்து அனைவருக்கும் பிரசாதம் கொடுக்கப்பட்டது..ஆலய பூசாரி.திருவாளர்கள். நாகராஜன் மற்றும் சம்பத் ராகவ் பட்டாச்சார்யார் பட்டதாரி ஆசிரியர் திரு ஆர் மணிவண்ணன் போன்றோர் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்து இருந்தார்கள்!!

## மாற்றுத்திறனாளிகளுக்கு நல திட்ட உதவிகள் வழங்கும் விழா



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக நடைபெற்ற அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தின விழாவில் கலந்து கொண்டு மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ. வ.வேலு அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி அவர்கள், உயர்திரு. மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ் இ. ஆ.ப. அவர்கள், உயர்திரு நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ. சு. தி. சரவணன் அவர்கள், மு. பெ. கிரி அவர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## மாற்றுத் திறனாளி பயனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்



காஞ்சிபுரத்தில் நடந்த விழாவில் மாற்றுத் திறனாளி பயனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை அமைச்சர் காந்தி, கலெக்டர் கலைச்செல்வி, எம்எல்ஏக்கள் சுந்தர், எழிலரசன் வழங்கினர்.

## மாநில நிர்வாகிகளுக்கான ஆலோசனைக் கூட்டம்



சேலத்தில் பாஜக மையக்குழு உறுப்பினர்கள் மற்றும் மாநில நிர்வாகிகளுக்கான ஆலோசனைக் கூட்டத்தில் மாநிலத் தலைவர் நயினார்நாகேந்திரன் ஆலோசனை நடத்தினார்.

## தமிழ்நாடு தலைகுனியாது பொதுக்கூட்டம்



பெரியபாளையத்தில் நடந்த தமிழ்நாடு தலைகுனியாது பொதுக்கூட்டத்தில் திமுக எம்.பி. ஜெகத்ரட்சகன் பேசினார். அவருக்கு திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் முருகன் சிலை வழங்கப்பட்டது.

## ஓ.பன்னீர்செல்வம் 2வது நாளாக தரிசனம்



முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் நேற்று திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் 2வது நாளாக தரிசனம் செய்தார்.

## விழுப்புரம் மாவட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

**விழுப்புரம், பிப்.06:**



விழுப்புரம் மாவட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடந்தது.

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் சிப்காட் மருந்தியல் பூங்கா அருகே நடைபெற்ற அரசு விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு உங்களிடம் ஸ்டாலின் பத்தாயிரம் முகாம்களில் பெறப்பட்ட மனுக்கள் மீது தீர்வு காணப்பட்ட பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார். இந்நிகழ்வில் செஞ்சி, மேல்மலையனூர், வல்லம் உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் தொண்டர்கள் பொதுமக்கள் உற்சாக வரவேற்ப்பு அளித்தனர்.

**அகரம் ராமதாஸ்
செய்தியாளர்**

## பணியாளர்களுக்கு நல வாரிய உறுப்பினர் அட்டை



காஞ்சிபுரம் மாவட்டத்தில் கிறிஸ்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள், பணியாளர்களுக்கு நல வாரிய உறுப்பினர் அட்டைகளை வாரியத் தலைவர் விஜிலாசத்யானந்த் வழங்கினார். உடன் கலெக்டர் கலைச்செல்வி உள்ளார்.

## சமூக நல அமைப்புகள் கோரிக்கை



சென்னை அண்ணா அறிவாலயத்தில், நேற்று இரண்டாவது நாளாக திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவின் தலைவர் கனிமொழி எம்.பி., மற்றும் உறுப்பினர்கள் பல்வேறு சமூக நல அமைப்புகளை சார்ந்தவர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்தனர்.

## செவிலியர்கள் போராட்டம்



சிதம்பரம் அண்ணாமலைநகரில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை செவிலியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## மாதாந்திர கருணை ஓய்வூதியம்



பால் உற்பத்தியாளர்கள், நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு மாதாந்திர கருணை ஓய்வூதியத்தை முதல்வர் ஸ்டாலின் நேற்று வழங்கினார்.உடன் அமைச்சர் மனோ தங்கராஜ், தலைமைச் செயலாளர் முருகானந்தம், பால்வளத்துறை செயலாளர் சுப்பையன், இயக்குநர் ஜான்லூயிஸ்,பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் இணை மேலாண்மை இயக்குநர் கவிதா உள்ளனர்.

## விமான கலசங்களுக்கு கும்பாபிஷேகம்



திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் மூலவர் பிரதிஷ்டை தின வருஷாபிஷேகத்தை முன்னிட்டு விமான கலசங்களுக்கு நேற்று கும்பாபிஷேகம் நடந்தது.

## இரவில் தீபம் ஏற்றி போராட்டம்



குமரியில் சிவாலய ஓட்டத்தின்போது விரதம் இருக்கும் பக்தர்களுக்காக 12 சிவாலயங்களில் அடிப்படை வசதிகள் கோரி திக்குறிச்சி மகாதேவர் கோயில் செல்லும் இணைப்பு பாலத்தில் பக்தர்கள் இரவில் தீபம் ஏற்றி போராட்டம் நடத்தினர்.

## நகை திருட்டுப் புகாரில் உண்மையில்லை: அஜித்குமார் மரணம் காவல் கொலையே!

**மதுரை, பிப்.6:**

மடப்புரம் கோவில் காவலாளி அஜித்குமார் கொலை வழக்கில் நிகிதா கொடுத்த நகை திருட்டுப் புகார் உண்மையில்லை என்று நீதிமன்றத்தில் சிபிஐ தகவல் தெரிவித்துள்ளது. மடப்புரம் கோவில் காவலாளி அஜித்குமார், கடந்த 2025 ஜூன் 28 அன்று திருப்புவனம் காவல்நிலைய திருட்டு வழக்கு விசாரணையின் போது, தனிப்படை காவலர்கள் கடுமையாகத் தாக்கியதில் உயிரிழந்தார். இந்த வழக்கு கொலை வழக்காக மாற்றப்பட்டு தற்போது சிபிஐ விசாரணை மேற்கொண்டு வருகிறது. இந்த வழக்கில் சிறையில் உள்ள காவலர்களுக்கு ஜாமீன் வழங்கக் கோரிய வழக்கு, சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளையில் புதனன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, சிபிஐ பதில் மனு தாக்கல் செய்தது. அதில், ‘கொலை செய்யப்பட்ட அஜித்குமார் மீது நிகிதா என்பவர் கொடுத்த புகாரில் உண்மை இல்லை. அஜித்குமாரின் மரணம் காவல் மரணம் என்பது உறுதியாகி இருக்கிறது. டிஎஸ்பி, காவல் ஆய்வாளர், தலைமைக் காவலர், தனிப்படைக் காவலர்கள் என 10 பேருக்குமே தொடர்பு உள்ளது’ என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதையடுத்து நீதிபதி ஸ்ரீமதி, “ஏதுமில்லாத விஷயத் திற்கு ஒருவரை இப்படி அடித்திருக்கிறீர்கள், மனமே பதறு கிறது. ஒன்றுமே இல்லாத வழக்கிற்கு ஒருவரை அடித்தே கொலை செய்துவிட்டனர். அஜித்குமார் மரண வழக்கு முடியும் வரை யாராக இருந்தாலும் சிறையிலேயே இருக்கட்டும். காவல்துறை யினருக்கு பாடம் புகட்ட வேண்டும்” என்று கூறி இந்த வழக்கு தொடர்பான நிலை அறிக்கையை தாக்கல் செய்ய சிபிஐ, டிஎஸ்பி-க்கு உத்தரவிட்டு வழக்கு விசார ணையை பிப். 16 ஆம் தேதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

## துணை வேந்தர்கள் நியமனம்: உயர் நீதிமன்றத் தடை ரத்து!

**சென்னை, பிப்.6:**

தமிழக பல்கலைக்கழ கங்களுக்கு துணை வேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்கி இயற்றப்பட்ட சட்டப் பிரிவுக்கு சென்னை உயர் நீதிமன்றம் விதித்த தடையை உச்ச நீதிமன்றம் புதன்கிழமை ரத்து செய்துள்ளது.

## பட்டமளிப்பு விழா; அமைச்சர் புறக்கணிப்பு!

**சென்னை, பிப்.6:**

அண்ணா பல்கலைக்கழகத்தில் புதன்கிழமை 46-ஆவது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. தமிழ்நாட் டின் உயர்கல்வி வளர்ச்சிக்கு எதிரான ஆளுநர், இவ் விழாவில் கலந்துகொள்வதால், அவருக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், உயர்கல்வித்துறை அமைச் சர் கோவி. செழியன் பட்ட மளிப்பு விழாவைப் புறக் கணித்தா

## அதிகாரிகள் எச்சரிக்கை!

**சென்னை, பிப்.6:**

சென்னை யில் ஆன்லைனில் ஐஸ் க்ரீம் ஆர்டர் செய்து சாப் பிட்ட மாணவிகளுக்கு உடல்நலக்குறைவு ஏற்பட் டதைத் தொடர்ந்து, ஆன் லைன் நிறுவனங்கள் காலாவதியான உணவுப் பொருட்களை விற்பதாக புகார் எழுந்துள்ளது. இதையடுத்து காலா வதியான பொருட்களை விற்கும் நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உணவு பாதுகாப்புத்துறை உத்தர விட்டுள்ளது.

## 2-ஆம் கட்ட தேர்தல் வாக்குறுதி; எடப்பாடி பழனிசாமி அறிவித்தார்!

**சென்னை, பிப்.6:**

தமிழக சட்டமன்றத் தேர்தல் நெருங்கிவரும் நிலையில், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, தமது இரண்டாம் கட்ட தேர்தல் வாக்குறுதிகளை அறிவித்துள்ளார். கடந்த சில வாரங்களுக்கு முன்பு முதல் கட்டமாக 5 வாக்குறுதிகளை அறிவித்திருந்த அவர், இரண்டாம் கட்டத்தில், சிறுபான்மையினர், மகளிருக்கு வட்டி இல்லாக் கடன் வழங்கப்படும், ஜல்லிக்கட்டு நடத்த ரூ. 5 லட்சம் மானியம் அளிக்கப்படும், ஆண்டுக்கு மூன்று சிலிண்டர்கள் இலவசமாக வழங்கப்படும் என்றும் கூறியுள்ளார். மாணவர்களின் கல்விக்கடன் ரத்து செய்யப்படும், ஜல்லிக்கட்டில் உயிரிழப்போருக்கு ரூ.10 லட்சமும், காயமடைந்தோருக்கு ரூ. 2 லட்சமும் வழங்கப்படும். முதியோர், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற பெண்களுக்கான மாத உதவித் தொகை ரூ. 2000 ஆக உயர்த்தப்படும், மாற்றுத் திறனாளிகளின் கூட்டுறவு வங்கிக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்றும் வாக்குறுதி அளித்துள்ளார்.

# தமிழகத்தில் புற்றுநோய் பாதிப்பு ஒரு லட்சத்தைத் தாண்டியது! சென்னை முதலிடம்...




**சென்னை, பிப்.6:**

தமிழகத்தில் கடந்த ஆண்டு புற்றுநோய் பாதித்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைக் கடந்துள்ளதாக மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் புற்றுநோய் பாதிப்பு குறித்து மத்திய சுகாதாரத்துறை மற்றும் குடும்ப நல அமைச்சகம் நாடாளுமன்றத்தில் அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

அதன்படி, தமிழகத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு புற்றுநோய் பாதிப்பு முதல்முறையாக ஓராண்டில் ஒரு லட்சத்தைக் கடந்துள்ளது.

2025 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் 1,00,097 பேர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெண்கள் 53,542 பேர், ஆண்கள் 46,555 பேர்.

பாதிப்பு கடந்த 2020-ல் 68,750, 2021-ல் 76,968 ஆகவும், 2022-ல் 89,265 ஆகவும், 2023-ல் 92,816 ஆகவும், 2024-ல் 96,486 ஆகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

பெண்கள் அதிகமாக மார்பக புற்றுநோய், கருப்பைப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆண்கள், வாய்ப்புற்றுநோய், பெருங்குடல் மற்றும் வயிற்றுப் புற்றுநோய்களால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

அதிகபட்சமாகசென்னையில் 8,505 பேருக்கு புற்றுநோய் பாதிப்பு உறுதியாகியுள்ளது. அடுத்து காஞ்சிபுரத்தில் 7,295 பேருக்கும் வேலூரில் 6,525 பேருக்கும் உறுதியாகியுள்ளது.

புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு மற்றும் நோய் கண்டறிதலையும் அதற்கான சிகிச்சை முறைகளையும் தீவிரப்படுத்த வேண்டும் என்று சுகாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழகத்தில் 14 வயதுடைய பள்ளி மாணவிகளுக்கு கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி செலுத்தும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# புற்றுநோய் மரபணு தரவு தளம்: சென்னை ஐஐடி வெளியிட்டது

**சென்னை, பிப்.6:**

புற்றுநோயால் பாதிக்கப்பட்டோரின் மரபணுக்களுக்கு ஏற்றவாறு மருந்துகளைப் பரிந்துரைக்கும் வகையில் புதிய தரவு தளத்தை சென்னை ஐஐடி அறிமுகப்படுத்தியுள்ளது.

புற்றுநோய் விழிப்புணர்வு, கண்டறிதல், சிகிச்சை முறைகளை ஊக்குவிக்கும் விதமாகவும் ஆண்டுதோறும் பிப்ரவரி 4-ஆம் தேதி ‘உலக புற்றுநோய் தினம்’ அனுசரிக்கப்படுகிறது. இந்த நிலையில், சென்னை ஐஐடி வளாகத்தில், இந்தியாவிலேயே முதல்முறையாக புற்றுநோய் மரபணு தரவு தள தகவல்களை இயக்குநர் வி.காமகோடி புதன்கிழமை வெளியிட்டார்.

தொடர்ந்து ஐஐடி இயக்குநர் வி.காமகோடி, உயிரி தொழில்நுட்பத்துறை பேராசிரியர் எஸ்.மகாலிங்கம் ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியது:

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ஐசிஎம்ஆர்) தெரிவித்து வந்தது. தேசிய புற்றுநோய் பதிவேட்டுத் திட்டத்தின்படி நாட்டில் ஒன்பது பேரில் ஒருவருக்கு புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கிறது. ஆண்டுதோறும் புற்றுநோய் பாதிப்பு 12.8 சதவீதம் அதிகரித்து வருகிறது.

இந்தியப் புற்றுநோய்களிலிருந்து பெறப்படும் குறிப்பிட்ட மரபணு மாறுபாடுகள், மருந்து மேம்பாட்டிற்காகப் போதுமான அளவுகோல் சேகரிக்கப்பட்டு பட்டியலிடப்படவில்லை. இந்த இடைவெளியை நிரப்புவதற்காக, சென்னை ஐஐடி 2020 -ஆம் ஆண்டில் ‘பாரத் புற்றுநோய் மரபணு திட்ட’ மையத்தைத் தொடங்கியது.

பாரத் புற்றுநோய் மரபணு திட்டத்துக்கு ஹூண்டாய் மோட்டார் இந்தியா தனது பெரு நிறுவன சமூகப் பொறுப்புத் திட்டத்துடன் ஆதரவை வழங்கியது. அதன்படி, நாடு முழுவதும் சேகரிக்கப்பட்ட லுகேமியா, பெருங்குடல் மற்றும் கணையப் புற்றுநோய் நோயாளிகளின் மாதிரிகளிலிருந்து முழு மரபணு வரிசை முறைப்படுத்தும் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. தற்போது பாரத் புற்றுநோய் மரபணு வரைபடத்தை இந்திய சர்வேதேச ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மருத்துவர்கள் பொதுவாக அணுகும் வகையில் க்ஷஸ்ரீஞ்ஹ.ண்ண்றம்.ஹஸ்ரீ.ண்ய் என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், இந்த மையம் தீவிரமாக பரிசோதனை, தடுப்பூசி முகாம்களையும் நடத்துகிறது. பின்தங்கிய பகுதிகளுக்கு சுகாதார சேவையை விரிவுபடுத்துவதற்காக நடமாடும் மருத்துவப் பிரிவுகளும் உள்ளன என்றனர்.

# தேமுதிக கூட்டணி உரிய நேரத்தில் அறிவிக்கப்படும்: பிரேமலதா விஜயகாந்த்



**சென்னை, பிப்.6:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தேமுதிக கூட்டணி குறித்து உரிய நேரத்தில் அறிவிக்கப்படும் என அந்தக் கட்சியின் பொதுச் செயலர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சென்னை கோயம்பேடில் உள்ள தேமுதிக தலைமை அலுவலகத்தில் அவர் செய்தியாளர்களிடம் புதன்கிழமை கூறியதாவது:

தேமுதிக சார்பில் தமிழகம் முழுவதும் பூத் கமிட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. வரும் சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்ள தேமுதிக தயாராகவுள்ளது.

தேசிய, மாநில என அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களும், தேமுதிகவுடன் கூட்டணி நிலைப்பாட்டுடன் பழகி வருகின்றனர்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் தேதி இன்னும் அறிவிக்கப்படவில்லை. இந்தச் சூழலில், கூட்டணி அமைப்பதில் அவசரப்பட தேமுதிக விரும்பவில்லை. எனவே, தேமுதிகவின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு நிதானமாக சிந்தித்தே கூட்டணி அமைக்கப்படும். அப்படி, தேமுதிகவின் கூட்டணி நிலைப்பாடு உரிய நேரத்தில் அறிவிக்கப்படும் என்றார் அவர்.

# ஓட்டையும், நாட்டையும் விற்கவே மாட்டேன்: மாநிலங்களவையில் கமல்ஹாசன் எம்.பி. பேச்சு

**புதுடெல்லி, பிப்.6:**

டெல்லி நாடாளுமன்ற மாநிலங்களவையில் மக்கள் நீதி மய்யம் தலைவர், கமல்ஹாசன் எம்.பி. முதல் முறையாக பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

மாநிலங்களவையில் பேசுவதை நான் கௌரவமாக கருதுகிறேன். என் சகோதரர் தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி. மக்களுக்காக பேசுவதற்கு பலர் மன்றத்துக்கு பல வழிகள் திறந்துள்ளது. எனக்கான வழி திரையுலகம் மூலம் திறந்துள்ளது. பரமக்குடியில் பிறந்த குழந்தை திரையுலகம் மூலமாக தமிழ் மக்களுக்கு அறிமுகமானது.

நான் எனது மொழியை ஆசிரியர்கள் வாயிலாக கற்றுக்கொண்டேன். அந்த ஆசிரியர்களில் ஒருவர் முன்னாள் முதல்-அமைச்சர் அண்ணாதுரை. எங்கள் மொழிக்கு எதிரான எந்த விதமான ஆக்கிரமிப்புகள் நடந்தாலும் அதை நெஞ்சை நிமிர்த்தி எதிர்கொள்ள அவர் எங்களுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்.

1967-ல் எனது கருத்து உருவாக்கத்தில் வழிகாட்டியாக அவர் அமைந்தார். அவர் வழிகாட்டிய மையம் என்ற கொள்கையை தான் நான் கையில் வைத்திருக்கிறேன். அவர் உரையாற்றிய இதே அவையில் இருந்து நானும் பேசுகிறேன். நான் எனது மனதில் மையம் கொண்ட புயலில் இருந்து வரும் வார்த்தைகளை பயன்படுத்தி பேசுகிறேன். இந்த வார்த்தைகள் உங்களில் சிலருக்கு காயத்தை கொடுக்கலாம். நான் கடவுளை நோக்கி கை கூப்ப



போவதில்லை. எனது பகுத்தறிவு மூளை, கடவுள் என்பதை பல ஆண்டுகளுக்கு முன்பாகவே அப்புறப்படுத்திவிட்டது.

பிரியசகோதரி பவதிபிச்சாந்தேகி என்று தெலுங்கில் இசைபாடி வந்த அந்த மாமனிதர், இசைமேதை தியாகராஜன். அவர் பிக்சாபாத்திரத்தில் இருந்து எடுத்த சில்லறைகள் நவீன காலத்திற்கு உதவாது என்று தெரிந்தவர்கள் நீங்கள். நீங்கள் வெள்ளைக்காரக் கல்வி கற்றது கண்டிப்பாய் கற்பூர புத்திதான். அது காற்றோடு போய் பல ஆண்டுகளாய் ஆகிவிட்டன. அதன் பிறகு உங்கள் பிச்சைப்பாத்திரம் உருமாற்றப்பட்டது.

பிச்சைக்குவளை பெரும் உண்டியலானது. அந்த உண்டியலை உடைத்து நிதி திரட்ட உதவுவோர் இன்று தமிழை, தமிழரை பார்த்து என்ன சொல்கிறீர்கள். தமிழ் பிச்சை எடுக்கக்கூட உதவாதா. ஓரளவு உண்மைதான். ஒரு தெற்கத்தி அறிவுரை தந்தாய். தமக்கென உங்கள் நிதியை திரட்ட ஆங்கிலத்தில், இந்தியில் பிச்சை எடுக்கலாமே. தமிழ் பிச்சை எடுக்க உதவாது, திருடவும் உதவாது. தமிழன் பிச்சை எடுக்க மாட்டான், அதுவும் உங்கள் பிச்சையை ஏற்கவே மாட்டான்.

தங்கச்சி ஓட்டையும், நாட்டையும் இந்த கமல்ஹாசன் விற்கவே மாட்டேன். உங்கள் சாபங்களில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. உங்களுக்கு இருக்கக்கூடும் என்ற நம்பிக்கையில் நீங்கள் உணர என் திட்டத்தை சாபமாய் போடுகிறேன். கருணையுடன் நீங்களே ஏற்பீர். உங்கள் இஷ்ட தெய்வங்களை வேண்டிக்கொள்ளுங்கள்.

பகுந்தறிந்த தமிழ்ச்சித்தன் கூற்று இது. உம் வினை உம்மைச் சுடுக. என்றும் எங்கள் நாடு நீடூடி வாழும். வந்தீர், வென்றீர், செல்வீர். இது உலக நியதி, அரசியல் நியதியும் கூட. வீழ்க வளமுடன், தமிழ் என்றும் வாழும் நலமுடன். அவை கண்டடைந்த தலைவர் கூட்டத்திற்கு வணக்கம். சென்றும் வருவேன், நாளை எமதே, உங்கள் கமல்ஹாசன். ஜெய்ஹிந்த்.

இவ்வாறு அவர் கூறினார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu” என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

## பசி எடுக்கலையா? செரிமானப் பிரச்னையா?

நாம் அன்றாட உணவுவகைகளில் உருளைக்கிழங்கு, சேப்பங்கிழங்கு, சேனைக்கிழங்கு, கருணைக்கிழங்கு, பனங்கிழங்கு, சர்க்கரை வள்ளிக்கிழங்கு, இஞ்சி போன்ற பல்வேறு கிழங்குகளை உணவில் சேர்த்து வருகிறோம்.

இதில் ஒவ்வொன்றிலும் பலவித மருத்துவ குணங்களும் அடங்கி உள்ளன.

அவை மட்டுமல்ல ஏனைய கிழங்கு வகைகளிலும் பலவிதமான விட்டமின் சத்துகள் நிறைந்துள்ளன. அவற்றில் முள்ளங்கி கிழங்கையும் (RADISH HEALTH BENEFITS) சேர்த்துக்கொள்ளலாம். பலரும் விரும்பி சாப்பிடும் கிழங்கு வகைகளில் முள்ளங்கி கிழங்கையும் சேர்த்துக் கொள்ளலாம். இந்த கிழங்கானது குத்துச்செடி வகையைச்சேர்ந்தது.



முள்ளங்கி கிழங்குகளில் வெள்ளை முள்ளங்கி, சிவப்பு முள்ளங்கி, மஞ்சள் முள்ளங்கி என மூன்று வகைகள் உள்ளன.

முள்ளங்கி கிழங்கில் கால்சியம் சத்தும், விட்டமின் சத்துகளும் உள்ளன. இது வயிற்றில் பல தொல்லைகளை குணப்படுத்த வல்லது. இது பசியை அதிகமாக்குவதோடு பசி உணர்வைத் தூண்டக் கூடியது.

அதோடு மலச்சிக்கலையும் போக்கக்கூடிய ஆற்றல் கொண்டது. வெள்ளை முள்ளங்கி மற்ற கிழங்குகளைவிட குளிர்ச்சித்தன்மை நிறைந்தது. இதனால் மூல நோய் உள்ளவர்களும், உடல் உஷ்ணம் உள்ளவர்களும் இதை உணவில் அடிக்கடி சேர்த்துக் கொள்ளலாம்.

தலைவலி, சுவாசக்கோளாறு, வயிற்றில் எரிச்சல் உள்ளவர்கள் முள்ளங்கியைப் பயன்படுத்தலாம். வாய்வுத் தொல்லையையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டது.

சிறுநீரில் சர்க்கரையின் அளவையும் கட்டுப்படுத்தும் குணம் கொண்டது. வெள்ளை முள்ளங்கியைப்போல சிவப்பு முள்ளங்கியிலும் மருத்துவ குணங்கள் (RADISH HEALTH BENEFITS) நிறையவே உள்ளன.

வெள்ளை முள்ளங்கியில் இருப்பது போல காரத்தன்மை அதிகம் இருக்காது. சிவப்பு முள்ளங்கியிலும் குடலுக்கு வலிமை தரும் சத்துக்கள் நிறைய உள்ளன.

மஞ்சள் முள்ளங்கியை காரட் முள்ளங்கி என சொல்வது வழக்கம். இதை அப்படியே பச்சையாகவும் சாப்பிடலாம். கண்கள் தொடர்பான நோய்கள் குணமாகும். பற்களால் கடித்து சாப்பிடுவதால் பற்களுக்கு உறுதி ஏற்படும். சாப்பிட்ட உணவு எளிதில் சீரணமாகும் குணம் உள்ளது.

கர்ப்பமான தாய்மார்கள் சாப்பிடுவதால் எலும்புகள் உறுதியாக இருக்கும். சிறு குழந்தைகளுக்கும் இதை கொடுப்பதால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாகும்.

ஆக, முள்ளங்கியில் சகல மருத்துவ குணங்களும் நிறைந்துள்ளதால் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

ஆக, இயற்கை உணவுகளை புறந்தள்ளாமல் அடிக்கடி உணவில் சேர்த்து ஆரோக்கியமான வாழ்க்கை வாழலாமல்லவா!

## ஹெச்.ராஜாவிடம் பழனிசாமி நலம் விசாரிப்பு



**சென்னை, பிப்.6:**

பாஜக மூத்த தலைவரும் தேசிய செயற்குழு உறுப்பினருமான ஹெச்.ராஜா(68), பக்கவாத பாதிப்புக்காக ஆயிரம் விளக்கு அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட பலர் மருத்துவமனைக்குச் சென்று ஹெச்.ராஜாவை சந்தித்து நலம் விசாரித்தனர். இந் நிலையில், அதிமுக பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான பழனிசாமி, மருத்துவமனையில் ஹெச்.ராஜாவை நேற்று சந்தித்து உடல்நலம் விசாரித்தார்.

## டிக்கெட் பரிசோதகர்கள் சோதித்தபோது மின்சார ரயிலில் இருந்து குதித்த நபர்

**பொன்னேரி, பிப்.6:**

சென்னை-கும்மிடிப்பூண்டி ரயில்வே மார்க்கத்தில் நேற்று காலை சென்னையிலிருந்து, கும்மிடிப்பூண்டி நோக்கி மின்சார ரயில் சென்று கொண்டிருந்தது. அந்த ரயில், திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் அருகே நந்தியம்பாக்கம் ரயில் நிலையத்தில் நின்ற போது, தனேஷ்குமார், ஹேமந்த், கணேஷ் ஆகியோர் அடங்கிய டிக்கெட் பரிசோதகர்கள் குழுவினர் ஏறினர். ரயிலின் முதல் வகுப்புப் பெட்டியில் ஒரு டிக்கெட் பரிசோதகர், பயணச்சீட்டுச் சரிபார்ப்பில் ஈடுபட்டிருந்தபோது, உரிய பயணச்சீட்டு இல்லாமல் ஒரு நபர் பயணம் செய்தது தெரிய வந்தது. அவரிடம் டிக்கெட் பரிசோதகர், அபராதத் தொகையை வசூலிக்க முயன்றபோது, அவர் அபராதம் செலுத்த மறுத்ததால், இருவருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இந்நிலையில், ரயில் அத்திப்பட்டு ரயில் நிலையத்தை அடைந்தபோது, அந்த நபர் ரயிலில் இருந்து குதித்து காயமடைந்தார்.

இதுகுறித்து, தகவலறிந்த எண்ணூர் ரயில்வே பாதுகாப்பு படையினர், சம்பந்தப்பட்ட நபரை மீட்டு, சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

மேலும், சில பயணிகள், டிக்கெட் பரிசோதகர்கள்தான் அந்த நபரை ரயிலில் இருந்து தள்ளிவிட்டதாகத் தவறாக எண்ணி, அவர்களைத் தாக்க முயன்றனர். பணியில் இருந்த எண்ணூர் ரயில்வே பாதுகாப்பு படை காவலர் ரவி, உடனடியாக டிக்கெட் பரிசோதகர்களை முன்பதிவு அலுவலகத்துக்குள் பாதுகாப்பாக அழைத்துச் சென்றார். ரயில்வே பாதுகாப்பு படை போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# காணிப்பாக்கம் விநாயகரை அருகில் தரிசிக்கலாம்: தேவஸ்தானம் புதிய திட்டம்

**சித்தூர், பிப்.6:**





தமிழக எல்லையில் ஆந்திர மாநிலம், சித்தூர் அருகே காணிப்பாக்கம் எனும் ஊரில் பிரசித்தி பெற்ற சுயம்பு வரசித்தி விநாயகர் கோயில் உள்ளது.

இந்தக் கோயிலுக்கு தமிழகம், கர்நாடகம், ஆந்திரா, தெலங்கானா ஆகிய மாநிலங்களில் இருந்து தினமும் சுமார் 30 ஆயிரம் பக்தர்கள் வரை வருகின்றனர். ஆயிரம் ஆண்டுகள் பழமையான இக்கோயில் தற்போது விரிவாக்கம் செய்யப்பட்டு, பல்வேறு வளர்ச்சிப் பணிகளும் நடைபெற்று வருகிறது.

இங்கு ஆண்டுதோறும் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு பிரம்மோற்சவம் வெகு சிறப்பாக நடத்தப்படுகிறது. இக்கோயிலில் அதிகாலை முதல் இரவு ஏகாந்த சேவை வரை பக்தர்கள் திரண்டு வந்து சுவாமியை தரிசித்து விட்டு செல்வதால், பக்தர்களுக்கு வசதியாக சுவாமியை கருவறை அருகே சென்று தரிசிக்கும் முறையை கோயில் தேவஸ்தானம் அமல்படுத்தி உள்ளது. இதற்கு ஒருவருக்கு தலா ரூ.500 கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

காலை 10 மணியில் இருந்து 11 மணி வரையிலும் மதியம் 3 மணியில் இருந்து 4 மணி வரையிலும் இதற்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

காணிப்பாக்கம் தேவஸ்தான நிர்வாக அதிகாரி பி.கிஷோர், முதல் டிக்கெட்டை பெற்றுக்கொண்டு தனது குடும்பத்தாருடன் சுவாமி தரிசனம் செய்து இத்திட்டத்தை தொடங்கி வைத்தார். இத்திட்டம் தொடங்கப்பட்ட முதல் நாளிலேயே 438 பக்தர்கள் தலா ரூ.500 கட்டணம் செலுத்தி சுவாமியை வழிபட்டனர்.

# பழநி தைப்பூசத் திருவிழாவில் 'திருஊடல்' வைபவம்

**பழநி, பிப்.6:**

திண்டுக்கல் மாவட்டம் பழநி தைப்பூசத் திருவிழா நிறைவாக இன்று புதன்கிழமை (பிப்.4) காலை திருஊடல் வைபவம் நடைபெற்றது. இரவு தெப்பத்தேர் உற்சவம் மற்றும் கொடியிறக்குதல் நடைபெற உள்ளது.

பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் உப கோயிலான பெரியநாயகியம்மன் கோயிலில் தைப்பூசத் திருவிழா ஜன.26-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

தினமும் வெள்ளி ஆட்டுக்கிடா, காமதேனு, தந்தப் பல்லக்கு, தங்க மயில் உள்ளிட்ட வாகனங்களில் சுவாமி வீதியுலா நடைபெற்றது. விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக ஜன.31-ல் திருக்கல்யாணம், பிப்.1-ம் தேதி தைப்பூசத்தன்று தேரோட்டம் கோலாகலமாக நடைபெற்றது.



விழாவின் 10-ம் நாளான புதன்கிழமை (பிப்.4) காலை 10 மணிக்கு வள்ளி சமேத முத்துக்குமாரசுவாமி புதுச்சேரி சப்பரத்திலும், தெய்வானை பல்லக்கு சப்பரத்திலும் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

திருஊடல் வைபவம்: வள்ளியை திருமணம் செய்துக் கொண்ட முத்துக்குமார சுவாமி, தெய்வானையை சமாதானப்படுத்தும் 'திருஊடல்' வைபவம் நடைபெற்றது. அப்போது, முத்துக்குமார சுவாமி வள்ளியை திருமணம் செய்ததை அறிந்து கோபம் அடைந்து கோயில் நடையை சாத்திக் கொண்டார்.

சுவாமி வள்ளியுடன் கோயிலுக்கு வெளியே நின்றுக் கொண்டு, வீரபாகுவை தெய்வானையிடம் சமாதானப் பேச்சு வார்த்தைக்கு அனுப்பி சமாதானப்படுத்தினார்.

அதற்கான தூதுப் பாடல்களை திருஊடல் ஓதுவார் சிவநாகராஜன் பாடினார். சமாதானமடைந்த தெய்வானை கோயில் நடையை திறந்து சுவாமிக்கு வழிவிட கோயிலுக்குள் நுழைந்த முத்துக்குமார சுவாமி வள்ளி, தெய்வானை சமேதராக பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

திருவிழாவின் நிறைவாக இரவு 8 மணிக்கு மேல் கோயிலை ஒட்டியுள்ள தெப்பத்தில் தெப்ப உற்சவம் நடைபெற்றது. இதில் அலங்கரிக்கப்பட்ட தெப்பத்தில் வள்ளி, தெய்வானையுடன் முத்துக்குமாரசுவாமி வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார். தொடர்ந்து, இரவு 11 மணிக்கு கொடி இறக்குதலுடன் திருவிழா நிறைவு பெற்றது.

# மார்ச் 8-ல் சமயபுரம் கோயிலில் பூச்சொரிதல் விழா

**திருச்சி, பிப்.6:**



சமயபுரம் மாரியம்மன் கோயிலில் முதல் பூச்சொரிதல் விழா மார்ச் 8-ம் தேதி நடைபெற இருப்பதால், பக்தர்களின் சிரமம் மற்றும் போக்குவரத்து நெரிசலைக் கருத்தில் கொண்டு, அதே பகுதியில் அன்றைய தினம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த திமுக மாநில மாநாடு தேதி மாற்றப்பட வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது.

திருச்சி சமயபுரம் மாரியம்மன் கோயிலில் ஆண்டுதோறும் மாசி மாத கடைசி ஞாயிறு முதல் பங்குனி மாத கடைசி ஞாயிறு வரை ஒவ்வொரு வாரமும் பூச்சொரிதல் விழா விமரிசையாக நடைபெறும்.

அப்போது, திருச்சி மற்றும் அண்டை மாவட்டங்களைச் சேர்ந்த பொதுமக்கள் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட டிராக்டர் உள்ளிட்ட வாகனங்களில் தாரை தப்பட்டைகளுடன் ஊர்வலமாக ஏராளமான மலர்களை எடுத்துவந்து விடிய விடிய அம்மனுக்கு சாற்றி வழிபாடு நடத்துவது வழக்கம். இதில், முதல் வாரம் நடைபெறும் பூச்சொரிதல் விழா மிகவும் விமரிசையாக நடைபெறும். அன்றைய தினம் விழாவுக்கு பக்தர்கள் அதிக எண்ணிக்கையில் வருவார்கள் என்பதால் பக்தர்கள் இடையூறின்றி கோயிலுக்கு செல்ல வசதியாக திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் திருச்சி - பெரம்பலூர் இடையே போக்குவரத்து மாற்றி அமைக்கப்படும்.



வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

## திருச்செந்தூர் கோவிலில் ஓ.பன்னீர்செல்வம் சாமி தரிசனம்



**திருச்செந்தூர், பிப்.6:**

முன்னாள் முதலமைச்சரும், அ.தி.மு.க. உரிமை மீட்பு குழு தலைவருமான ஓ.பன்னீர்செல்வம் நேற்று மாலை திருச்செந்தூர் சுப்பிரமணியசாமி கோவிலுக்கு வந்தார். அங்கு அவர் சுவாமி மூலவர், சண்முகர், வள்ளி, தெய்வானை தட்சணாமூர்த்தி சன்னதிகளில் சுவாமி தரிசனம் செய்தார். பின்னர் அங்குள்ள தனியார் விடுதியில் தங்கினார். ஓ.பன்னீர் செல்வம் திருச்செந்தூர் வருகையை அறிந்ததும் அவரது ஆதரவாளர்கள் ஏராளமானோர் கோவில் வளாகத்தில் குவிந்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. இந்த நிலையில், 2-வது நாளாக இன்று காலை திருச்செந்தூர் கோவிலில் ஓ.பன்னீர் செல்வம் சாமி தரிசனம் செய்தார்.

## திருப்பூரில் சட்டவிரோதமாக தங்கியிருந்த வங்கதேச பெண்கள் உள்பட 9 பேர் கைது

**திருப்பூர், பிப்.6:**

திருப்பூரில் உள்ள பனியன் உள்பட பல்வேறு நிறுவனங்களில், உரிய ஆவணங்கள் இன்றி சட்டவிரோதமாக தங்கியிருந்து பணிபுரிந்து வருகின்றனர். இவர்களை கண்டறிந்து கைது செய்ய வேண்டும் என்று போலீஸ் கமிஷனர் ராஜேந்திரன் உத்தரவிட்டார்.


இதையடுத்து கியூ பிரிவு போலீசார் தீவிர கண்காணிப்பு மற்றும் ரோந்துப் பணியில் ஈடுபட்டு திருப்பூரில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் வங்க தேசத்தினரை கைது செய்து வருகின்றனர். அதன்படி நல்லூர் முஜியாபுரம் பகுதியில் உள்ள பனியன் நிறுவனங்களில், வங்கதேசத்தினர் தங்கியிருந்து வேலை செய்து வருவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

அதன்பேரில் போலீசார் சம்பந்தப்பட்ட பகுதியில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர். அப்போது, வங்க தேசத்தை சேர்ந்த சைபுல் இஸ்லாம் (வயது 26), ரஹதுல்லா (28), மோரியம் (27), ஷாஹ்ரியாலம் (28), தோஹமினா ஆக்டர் (29) மற்றும் 2 பெண்கள் என 9 பேரை போலீசார் கைது செய்தனர். அவர்கள் முறையாக ஆவணங்கள் இல்லாமல் சட்டவிரோதமாக தங்கியிருந்து பனியன் நிறுவனங்களில் வேலை செய்து வந்ததும் தெரியவந்தது. மேலும் அவர்களிடம் இருந்த போலி ஆதார் கார்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது.

# காது மெழுகு ஒன்றே போதும்; புற்றுநோயைக் கண்டுபிடிக்க இனி ஸ்கேன் தேவையில்லை... !

நாம் அனைவரும் குளித்து முடித்தவுடன் அல்லது காதில் லேசான அரிப்பு ஏற்பட்டவுடன் முதலில் தேடுவது பட்ஸ் அல்லது ஒரு சிறிய குச்சியையே ஆகும். காதுக்குள் இருக்கும் மெழுகு போன்ற பொருளை ஒரு தேவையற்ற அழுக்காகவும், அருவருப்பான விஷயமாகவுமே நாம் காலம் காலமாகப் பார்த்து வருகிறோம். அதைச் சுத்தம் செய்து வெளியேற்றிவிட்டால் தான் நமக்கு நிம்மதி.

ஆனால், நாம் குப்பை என்று நினைத்துத் தூக்கி எறியும் அந்தப் பிசுபிசுப்பான பொருளில் நம் உயிரைக் காக்கும் மாபெரும் மருத்துவத் தகவல்கள் மறைந்திருக்கின்றன என்பது பலருக்கும் தெரியாத உண்மையாகும்.




ரத்தப் பரிசோதனை மற்றும் ஸ்கேனிங் முறைகளுக்கு மாற்றாக, காது மெழுகை வைத்தே பல கொடிய நோய்களைக் கண்டறிய முடியும் என்று பிரேசில் நாட்டு விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளனர்.

### வலி இல்லாத நவீன பரிசோதனை!

வழக்கமாகச் சர்க்கரை நோய் அல்லது புற்றுநோய் போன்ற பாதிப்புகளைக் கண்டறிய ஊசி போட்டு ரத்தம் எடுப்பார்கள் அல்லது திசுக்களை வெட்டி எடுத்துப் பரிசோதனை செய்வார்கள். இவை இரண்டுமே வலி தரக்கூடியவை. ஆனால் பிரேசிலில் உள்ள கோயாஸ் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் 'செருமெனோகிராம்' என்ற ஒரு புதிய முறையை அறிமுகப்படுத்தியுள்ளனர். காதில் சுரக்கும் மெழுகைச் சேகரித்துப் பரிசோதிப்பதன் மூலம் நோய்களைத் துல்லியமாகக் கணிக்க முடியும். இது மிகவும் எளிமையானது மட்டுமல்லாமல், நோயாளிக்கு எந்தவித வலியையும் தராத ஒரு சிறந்த முறையாகும்.

### உடல் காட்டும் எச்சரிக்கை!

நம் காதில் சுரக்கும் அந்த மெழுகிற்கு அறிவியல் மொழியில் 'செருமன்' என்று பெயர். இது காதின் உட்புறத்தைப் பாதுகாப்பதற்காகச் சுரக்கும் ஒரு திரவம். ஆனால் இதில் நம் உடலின் ஒட்டுமொத்த ஆரோக்கிய நிலையும் பதிவாகி இருக்கும். குறிப்பாக அல்சைமர் எனப்படும் ஞாபக மறதி நோய், இதயக் கோளாறுகள், டைப் 2 நீரிழிவு நோய் மற்றும் பல்வேறு வகையான புற்றுநோய்களுக்கான அறிகுறிகளை இந்த மெழுகில் உள்ள வேதிப்பொருட்கள் காட்டிக் கொடுத்துவிடும். ரத்தத்தில் கலந்திருக்கும் சர்க்கரை அளவைக் காட்டிலும், காது மெழுகில் உள்ள குளுக்கோஸ் அளவு மிகவும் துல்லியமான தகவல்களைத் தருவதாக ஆய்வுகள் கூறுகின்றன. அனைத்து மனிதர்களுக்கும் காது மெழுகு ஒரே மாதிரி இருப்பதில்லை. நாம் வாழும் இடத்தைப் பொறுத்தும், நம் முன்னோர்களின் மரபணுவைப் பொறுத்தும் இது மாறுபடும். உதாரணத்திற்கு, ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் வசிப்பவர்களுக்கு இந்த மெழுகு ஈரம் மிகுந்ததாகவும், மஞ்சள் அல்லது பழுப்பு நிறத்திலும் இருக்கும். ஆனால் ஆசிய நாடுகளில், குறிப்பாகச் சீனா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் உள்ள மக்களுக்கு இது உலர்ந்ததாகவும், சாம்பல் நிறத்திலும் காணப்படும்.




### எளிய தீர்வு!

சில அரிய வகை மரபணு நோய்களைக் கண்டறியச் செய்யப்படும் சோதனைகள் மிகவும் செலவு பிடிக்கும் ஒன்றாக இருக்கின்றன. ஆனால் காது மெழுகு பரிசோதனை மிகவும் மலிவானது. ஏழை எளிய மக்களும் எளிதில் செய்துகொள்ளக்கூடிய வகையில் இது அமையும். உடலில் கட்டி வருவதற்கு முன்பே, இந்த மெழுகு பரிசோதனை மூலம் புற்றுநோயின் அறிகுறிகளைக் கண்டறிந்துவிட முடியும் என்பது இதன் மிகப்பெரிய வெற்றியாகும்.

அறிவியல் தொழில்நுட்பம் வளர வளர, மருத்துவம் எளிமையாகிக்கொண்டே வருகிறது. எனவே இனி காது மெழுகை வெறும் அழுக்காகப் பார்க்காமல், அது நம் உடல்நலத்தைப் பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடியாகப் பார்ப்பதே புத்திசாலித்தனம்.

# "கருணை முகடு"



"மாரன்"
அந்தப் பெயரைக் கேட்டாலே ஊரில் எல்லோரும் பயந்து நடுங்குவர்.
தெருவில் அவன் நடந்து வந்தால் கதவுகள் தானாக மூடப்படும்.
குழந்தைகளை இழுத்துக் கொண்டு வீட்டிற்குள் ஓடுவார்கள்.
"அவன் நல்லவன் கிடையாது..
ஒண்ணாம் நெம்பர் அயோக்கியன்" என்று வசை பாடாத வாயே இல்லை.
ஒரு கொலை வழக்கிற்காக நீண்ட காலமாய் சிறையில் இருந்தவன் தற்போது ஜாமீனில் வெளியே வந்திருந்தான்.
ஒரு கொட்டும் மழை இரவில் கடுமையான மின்தடை.
ஊரே இருளில் மூழ்கிக் கிடந்தது.
அந்த இருட்டைக் கிழித்துக் கொண்டு ஒரு பெண்ணின் உச்சஸ்தாய் அலறல்.
நாலாவது வீட்டிலிருக்கும் கோமதியின் பிரசவ வேதனைக் கத்தல்தான் அது.
போன் சிக்னல் இல்லாத காரணத்தால் ஆம்புலன்ஸை அழைக்க முடியவில்லை.
அக்கம் பக்கத்தார் யாரும் உதவ வரவில்லை.
வெளியூர் சென்றிருக்கும் அவள் கணவனுக்கும் தகவல் சொல்லவும் வழியில்லை.
அந்த நேரம், இருளில் ஒரு உருவம்.
மாரன்.
அந்த வீட்டின் முன் நின்றான். நிதானமாய் உள்ளே சென்றான்.
அலறும் பெண்ணைத் தூக்கிச் சுமந்து கொண்டு கொட்டும் மழையில் ஓடினான்.
மண்ணில் வழுக்கி விழப் போனவன் சுதாரித்து நின்று, மீண்டும் ஓடினான்.
மூன்று கிலோ மீட்டர்.
காட்டு வழி கடந்து, தோப்பு வழி நடந்து, அந்த மருத்துவமனை வாசலைத் தொட்டதும் மயங்கி விழுந்தான்.
பதறிக் கொண்டு வந்த மருத்துவமனை சிப்பந்திகள் கோமதியைத் தூக்கி ஸ்ட்ரக்சரில் போட்டு பிரசவ வார்டு நோக்கிப் பறந்தனர்.

காலை.
குழந்தையின் அழுகுரல் மருத்துவமனைக்குள்ளிருந்து கேட்டது.
பெண் உயிருடன். குழந்தையும் உயிருடன். மாரன்?
கைகளில் விலங்கிடப்பட்டு போலீஸாரால் அழைத்துச் செல்லப்பட, விஷயம் கேள்விப்பட்டு கோமதியே தள்ளாட்டமாய் வந்தாள். "ஏன்?...எதுக்கு?" கேட்டாள்.
"பழைய கேஸ் சம்மந்தமா கொஞ்சம் விசாரிக்கணும்" என்றார்கள்.
அப் பெண் மாரனின் முகத்தை பார்த்தாள் சற்றும் பயமில்லாமல்.
அவள் வாய் அவளையுமறியாமல் சொன்னது, "இவன் முகம்தான் கரடுமுரடு! .. ஆனா மனசு... கருணை முகடு!.. அந்த மனசுதான் எங்களை காப்பாத்துச்சு."
ஊர் மௌனமானது.
மாரன் திரும்பிப் பார்த்தான்.
அவன் முகத்தில் எந்த மாற்றமும் இல்லை.
ஆனால்—
அந்த நாளுக்குப் பிறகு ஊர் மாரனைப் பார்த்த விதம் மாறியி ருந்தது.



-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# "திருப்பம்"



கோவிந்தன் குறுக்கும், நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார் .ஒரே பதட்டமா இருக்கு. கடவுளே!! எல்லாம் நல்லபடியாக முடியும். நீ தான்பா காப்பாத்தணும். கோவிந்தா ,கோவிந்தா நீ ஏன்டா இவ்வளவு டென்ஷனா இருக்க? உன் மருமகளுக்கு தானே குழந்தை பிறக்க போகுது. ஏற்கனவே நீ ஹார்ட் பேஷண்ட் நீ கொஞ்சம் அமைதியா இரு என்றாள் அம்மா. உன் அளவுக்கு எனக்கு தைரியம் இல்லம்மா, அதுவும் இல்லாம கல்யாணம் ஆகி 7 வருஷம் கழிச்சு இப்பதான் குழந்தை பிறக்க போகிறது என்று நினைத்துக் கொண்டே சந்தோஷமா இருக்கும்போது, திடீர்னு !!வாசப்படி தடுக்கி கீழே விழுந்துட்டான்னு நியூஸ் வந்தவுடன், ரொம்ப பயமாயிடுச்சு மா .அதான் ஒரே பதட்டமா இருக்குது. கவலைப்படாதே, பகவான் எல்லாத்தையும் பாத்துப்பான். நீ சாமி கிட்ட வேண்டிக்கோ; எல்லாம் சரியா நடக்கும் .ரூம் கதவை திறந்து கொண்டு நர்ஸ் வெளியே வந்து இந்த மருந்து அவசரமா வாங்கிட்டு வாங்க என்று கூறினாள். வசந்த் எங்க போனான்? போன் சிக்னல் கிடைக்கவில்லை என்று வெளியே போனான் .அவசரமா யார் கிட்டயோ பேசணும்னு, சொல்லிட்டு போனான். சரி, நானே போய் இந்த மருந்தை வாங்கிட்டு வரேன் . அம்மா நீ இங்கேயே இரு. பாத்துக்கோ, நான் போய் மருந்து வாங்கிட்டு வந்துடறேன் .அவன் வெளியே சென்றவுடன் குவா .....குவா.... சத்தம்! மீண்டும் கதவை திறக்கும் சத்தம் வெளியே வந்த நர்ஸ், பாட்டிமா ....உங்களுக்கு கொள்ளுப்பேத்தி பிறந்து இருக்கு. அப்படியா ,ரொம்ப சந்தோஷம்!!! தாயும், சேயும் நல்லா இருக்காங்க தானே? நல்லா இருக்காங்க, பாட்டி என்று சொல்லிவிட்டு ,உள்ளே சென்று விட்டால் நர்ஸ். பாட்டி..... பாட்டி .....அப்பா எங்கே? என்று கேட்டுக் கொண்டே வந்தான் வசந்த். நீ எங்கடா போன ?அப்பா மருந்து வாங்க போயிருக்காரு. டேய்.,.. உனக்கு பெண் குழந்தை பிறந்திருக்குடா!! நீ அப்பா ஆயிட்ட ! இப்பதான் நர்ஸ் வந்து சொல்லிட்டு போனாங்க. அப்படியா? பாட்டி... தேங்க்ஸ் .. காட்.. என்று கத்தினான் வசந்த். டேய், வசந்த் நான் ரெஸ்ட் ரூம் போகணும்டா எனக்கு கொஞ்சம் வழி சொல்லேன். சரி ..சரி.. வா, நானே கூட்டிட்டு போறேன். எப்படி இருந்தாலும் இப்ப குழந்தையை பார்க்க முடியாது .கொஞ்ச நேரம் ஆகும்னு சொல்லிட்டாங்க. அதனால அதுக்குள்ள போயிட்டு வந்துடலாம். மருந்தை வாங்கிக் கொண்டு வந்த கோவிந்தன் கதவை தட்டினான். உள்ளே இருந்து அந்த நர்ஸ் என்ன சார் ? என்றாள் . இந்தாங்க மருந்து சரியா இருக்கான்னு பாத்துக்கோங்க . சரி.. இங்க இருந்த எங்க அம்மா, எங்க போனாங்க? தெரியல சார். உங்களுக்கு பேரன் பிறந்து இருக்கான் சார். அப்படியா ?எப்பமா? இப்பதான் சார் அஞ்சு நிமிஷம் ஆச்சு. அப்படியா? ரொம்ப சந்தோஷம், கடவுளே நீ காப்பாத்திட்ட!! குழந்தையும், அம்மாவும் நல்லா இருக்காங்களாமா? நல்லா இருக்காங்க சார். ஒரு மணி நேரம் கழிச்சு வார்டுக்கு மாத்திடுவோம் அப்ப நீங்க வந்து பார்க்கலாம் .சரி.. மா. கோவிந்தா, கோவிந்தா எனக்கு கொள்ளுப்பேத்தி பிறந்திருக்குடா தெரியுமா? இல்லம்மா கொள்ளு பேரன் பிறந்திருக்கான்.வசந்த் உங்க பாட்டிக்கு காது சரியா கேட்கல, வயசு ஆயிடுச்சு இல்லையா? என்ன குழப்புறீங்க? இரண்டு பேரும் சும்மா இருங்க. சிஸ்டர் நீங்களே சொல்லுங்க சார் இரண்டுமே கரெக்ட் .உங்களுக்கு ரெட்டை குழந்தை பிறந்திருக்கு .பையன் ஒன்னு ,பொண்ணு ஒன்னு .ஓகே.. ஓகே.. டிவிங்சா, குழந்தைங்க ரெண்டு பேரும் நல்லா இருக்காங்க தானே? மூணு பேருமே நல்லா இருக்காங்க சார் ,என்று கூறிவிட்டு நர்ஸ் உள்ளே சென்று விட்டாள் .வசந்த் உனக்கு தெரியுமா? ஏன்டா என்கிட்ட முன்னாடியே சொல்லல நீ ஹார்ட் பேஷண்ட் அதனால அதிர்ச்சியா எதுவும் சொல்ல கூடாதுன்னு டாக்டர் சொன்னதுனால நான் சொல்லல. மீனா வயித்துல இருப்பது ரெட்டை குழந்தை தான்னு தெரிஞ்சுதுனா இன்னும் நீங்க ரொம்ப பயப்படுவீங்க. அதனால்தான், சொல்லல .ஆனா பாட்டி ,தைரியசாலி... என்று சொல்லிக்கொண்டே திரும்பினான் வசந்த். என்னது... ரெட்டை குழந்தை ,பிறந்திருக்கா? என்று மயங்கி விழுந்தாள் பாட்டி.



எம்.எல்.பிரபா
ஆதம்பாக்கம், சென்னை.

# ஆன்மிக களஞ்சியம்

# பூசலார் நாயனார் வரலாறு

தொடர்-47



-சிவ.முத்து லட்சுமணன்
போச்சம்பள்ளி



பூசலார் நாயனார்

பூசலார் நாயனார் என்பவர் தொண்டை நாட்டில் திருநின்றவூரில் மறையவர் குலத்திலே தோன்றியவர் பூசலார் என்னும் பெருந்தகையார். இவர் சிவனடியாராகிய அன்பர்க்கு ஏற்றபணி செய்தலே பிறவிப்பயன் எனக் கொண்டு பொருள்தேடி அடியார்க்கு அளித்து வந்தார். சிவபெருமானுக்குத் திருக்கோயில் அமைத்துப் பணிசெய்ய விரும்பிய இவர் தம்மிடத்துப் பொருள் இல்லாமையால் அதற்குரிய பொருளை வருந்தித் தேடியும் பெற இயலாதவராயினர். இந்நிலையில் மனத்திலே சிவபெருமானுக்குத் திருக்கோயில் அமைக்க எண்ணினார். மனத்தின்கண் சிறிதுசிறிதாகப் பெரும்பொருள் சேர்த்தார். திருப்பணிக்கு வேண்டிய கல் மரம் முதலிய சாதனங்களையும் பணிசெய்தற்குரிய தச்சர் முதலிய பணியாளர்களையும் மனத்தில் தேடிக்கொண்டார். நல்ல நாள் பார்த்துத் திருக்கோயிற் பணியைத் தம் மனத்துள்ளே தொடங்கி இரவும் துயிலாமல் அடிப்படை முதல் உபானம் முதலிய வரிசைகளை அமைத்து உரிய அளவுப்படி விமானமும் சிகரமும் அமைத்து அதன்மேல் தூபியும் நட்டனர். சுதைவேலை முடித்து அக்கோயிலினுள்ளே கிணறு திருக்குளம், மதில் முதலான எல்லாம் வகுத்தமைத்து இவ்வாறு தம்மனத்தில் உருவாகிய திருக்கோயிலுள்ளே சிவபெருமானை எழுந்தருளச் செய்வதற்கேற்ற நல்லநாளும் வேளையும் நிச்சயித்தார்.

இவரது திருப்பணி இவ்வாறு நிகழ்ந்து கொண்டிருக்கும் நிலையில், காடவர்கோனாகிய வேந்தர்பெருமான் காஞ்சி நகரத்திலே இறைவனுக்குத் திருக்கற்றளி அமைத்துத் தன் பெரிய பொருள் முழுவதையும் அத்திருக்கோயிற் பூசனைக்கென்று வகுத்துத் தான் அமைத்த கற்றளியிலே சிவபெருமானை எழுந்தருளுவிப்பதற்குப் பூசலார் அகத்தில் வகுத்த அந்த நாளையே குறித்தார். பூசலாரது அன்பின் திறத்தை உலகத்தார்க்கு அறிவிக்கத் திருவுளங் கொண்ட சிவபெருமான், அந்நாளின் முதல் நள்ளிரவில் காடவர் கோமான் முன் கனவில் எழுந்தருளி நின்றவூர்ப்பூசல் அன்பன் நெடிதுநாள் நினைந்து செய்த நன்மை மிக்க ஆலயத்துள் நாளை நாம் புகுவோம்; நீ இங்கு செய்யத்துணிந்த தாபனத்தினை நாளைய தினத்தில் வைத்துக் கொள்ளாது பின்னர் மற்றொரு நாளில் செய்வாயாக' என்று பணித்தருளி மறைந்தருளினார். பல்லவர்கோன், துயிலுணர்ந்தெழுந்து இறைவர் உளமுவக்கும் வண்ணம் பெரியதிருக்கோயிலை அமைத்த பெருந்தகையாரைச் சென்று காணவிரும்பித் திருநின்றவூரை அடைந்தான். அங்கு அருகணைந்தவர்களை நோக்கி, 'பூசலார் அமைத்த கோயில் எங்கே உள்ளது?' என்று கேட்டார். அதுகேட்ட நின்றவூர் மக்கள், 'பூசலார் இவ்வூரிற் கோயில் எதுவும் கட்டவில்லை' என்றனர். மன்னன் அவ்வூர் மறையவர்களை அழைத்து 'பூசலார் யார்' எனக்கேட்டறிந்து, ஆசில் வேதியராகிய அவர் இருக்குமிடத்திற்குத் தானே சென்று அவரை வணங்கி, 'தேவரீர் அமைத்த திருக்கோயில் யாது? அக்கோயிலில் சிவபெருமானை எழுந்தருளச் செய்யும் நாள் இந்த நாள் என்று இறைவர் தெரிவித்தருளத் தெரிந்து உம்மைக்கண்டு பணிதற்கு வந்தேன்' என்றார். பூசலார், அரசன் உரைகேட்டு மருண்டு, 'இறைவர் என்னையும் பொருளாக அருள்செய்தாராயின் அக்கோயிலின் பெருமை எத்தகையது? என்று தமக்குள்ளேயே சிந்தித்துத் தாம் மனத்தால் முயன்று செய்த திருக்கோயிலின் அமைப்பினை மன்னனுக்கு விளங்க எடுத்துரைத்தார். அரசன் அதிசயித்துப் பூசலாரை நிலமுற்றத் தாழ்ந்து வணங்கித் தனது நகருக்குச் சென்றான்.

பூசலார் நாயனார் தாம் கட்டிய மனக்கோயிலிலே குறித்த நற்பொழுதில் சிவபெருமானைத் தாபித்துப் பூசனைகள் எல்லாம் பெருஞ்சிறப்புடன் பலநாட்கள் பேணிச் செய்திருந்து சிவபெருமான் திருவடிநீழலையடைந்தார்.

1. இறைவர் மகிழ்ந்துறைதற்கான கோயிலமைத்தல் சிறந்த சிவபணி.
2. பெருஞ்செல்வம் கொண்டு அமைக்கும் 'கற்றளி' (கருங்கற்கோயில்) யை விட, பெருகிய அன்பினோடும் நினைப்பினால் எடுக்கும் ஆலயம் சிவபெருமானுக்கு உவப்பானது.

என்பதை பூசலார் வரலாறு உணர்த்துகிறது.

தொடரும்...

# பரம்பிக்குளம் வனத்தில் உள்ள கன்னிமாரா தேக்கின் மீதான தீராக் காதல்

பழங்குடி சமூகத்தின் சுற்றுச்சூழல் நம்பிக்கை.

தமிழ்நாடு -கேரளா வன எல்லைகளை இணைக்கும் ஒரு அற்புதக்காடு. பரம்பிக்குளம் வனம். கேரள எல்லையில் இருந்தாலும் நீலகிரியின் தொடர்ச்சியாக உள்ளது. அங்கு இருக்கும் பழங்குடியின மக்களின் உதவியோடு சுற்றுலா சென்று வருவது வாடிக்கையாகவே இன்றளவும் உள்ளது.

அடர்ந்த காட்டினுல் செல்வது அவ்வளவு சுலபமல்ல வன விலங்குகளும் அங்கு இருக்கின்றன என்றாலும், கேரள எல்லைக்குள் பாதுகாப்பிற்கு பழங்குடியின மக்கள் உத்தரவாத்துடன் உதவுதல் என்பது அசாத்தியமானது. இங்கு தேக்கு மரங்கள் சக்தி வாய்ந்ததாகவும், தெய்வீகத் தன்மை கொண்டதாகவும், வன தேவதை ஆவியாகவும் உலா வருவதாகவும் நம்புகின்றனர்.




தேக்கு மரங்கள் பல தலைமுறைகளைக் கடந்து வெட்டப்படாமல் கன்னியாகவே உள்ளது பல நூற்றாண்டுகளைக் கடந்து உயரமாகவும் வலுவாகவும் உள்ளது பல்வேறு காலகட்டங்களில் புயல், மழை, வெள்ள பாதிப்பிற்கு ஆளாகாமல் எவ்வித சேதாரம் இன்றி மாபெரும் ஆதாரமாக இன்றும் பல பருவ காலங்களைக் கடந்து நிலைத்து நிற்கின்றன.

அதிசயத்தக்க அந்த இடத்தில் செல்லும்போதும் மரத்தை தொடும் போதும் ஆசீர்வதிப்பான உணர்வும், பாதுகாப்பான உணர்வும், தெய்வீக அருளும் நம்மை சூழ்ந்து ஆனந்தத்தை அள்ளித் தருகிறது. மாசற்ற மரங்களின் தூய்மையான புனித காதலால் நாம் வசப்படுகிறோம்.

உலகின் பழமையான தேக்கு மரங்களில் ஒன்றாக அறியப்படும் மாபெரும் தேக்காக கன்னிமாரா தேக்கு உள்ளது அங்கு இருக்கும் மற்ற மரங்களும் அப்படியாகவே வளர்ந்து வருகிறது. யாரும் வெட்டுவதுமில்லை எடுப்பதும் இல்லை சிறு குச்சிகளை கூட பொறுக்குவதும் இல்லை. நீண்டகால பாரம்பரிய பரம்பிக்குளம் கன்னிமாரா காடுகள் கன்னிமாரா தேக்கு நம்பிக்கையால் காலத்தால் வளர்க்கப்படுகிறது காதர் ,மலசார் பழங்குடியின சமூகத்தின் தாயகமாக இருந்த நிலையில் சக்தி வாய்ந்த ஆன்மா இங்கு இருப்பதாக நம்பி இயற்கையுடன் இணைந்து இன்னும் அவர்களின் வாரிசுகள் நம்பிக்கையோடு வாழ்கிறார்கள்.

மரங்களைச் சுற்றிய அமைதி மொழி மனதிற்கு இடம் அளிக்கிறது காதில் இனிமையான புரிதலை செலுத்தி சிந்தனையை சீராக்கப்படுவதாக உணர முடிகிறது. மரங்களின் மீது காதல் கொள்ள முடிகிறது.

பிரிட்டிஷ் கால இந்தியாவில் தேக்கு மரம் பிரவுன் கோல்டு என அழைக்கப்பட்டு வனங்கள் வெட்டப்பட்டன. பழங்குடிகளின் வாழிடமான கன்னிமாரா காட்டிக் கொடுக்கப்படவில்லை பாதுகாக்கப்பட்டது .நம்பிக்கையால் பாதுகாப்பாக இன்றளவும் மதிப்பிற்குரியதாகவே இருப்பது வியப்பில்லை .இயற்கைக்கும், சுற்றுச்சூழலுக்கும் ஆபத்து ஏற்படாமல் பாதுகாத்து வரும் தலைமுறைகளிடத்தில் அடையாளப்படுத்துவது அனைவரின் கடமையாகும். உலகின் மிக பழமையான மரமாக அங்கீகரித்து கன்னிமாரா தேக்கு மரம் நமது இந்திய அரசாங்கத்தால் 1994-95இல் மகா விருச்சிக புரஷ்கார் விருது பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



தமிழ்ச்செம்மல்
-எறும்பூர் கை.செல்வகுமார்.
எழுத்தாளர் - ஆய்வாளர், தலைவர், செய்யாறு வட்ட முத்தமிழ்ச் சங்கம், செய்யாறு.

# தினம் ஒரு தலைவர்கள் ஆலன் ஆக்டேவியன் ஹியூம் வரலாறு

ஆலன் ஆக்டேவியன் ஹியூம் (6 சூன் 1829 31 சூலை 1912), இங்கிலாந்தின் கென்ட் நகரில் ஜோசப் - மரியா தம்பதியின் எட்டாவது குழந்தையாக ஆலன் ஆக்டேவியன் ஹியூம் பிறந்தார். தந்தை ஜோசப் ஹியூம் இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் ஒரு தீவிர உறுப்பினராக இருந்தவர். கல்லூரிப் படிப்பை முடித்ததும் ஆலன் ஓர் ஐ.சி.எஸ். அதிகாரியாகத் தேர்வு பெற்று இந்தியாவில் 1850-ல் உத்தரப் பிரதேசத்தில் பணியைத் தொடங்கினார். இந்தியாவில் காங்கிரஸ் கட்சியைத் துவக்கக் காரணமானவர்களில் இவரும் ஒருவர். எட்டாவா நகரில் 1856-ல் ஓர் ஆங்கிலப் பள்ளிக்கூடத்தை ஆலன் தொடங்கினார். ஆலன் ஆற்றிய பணியைப் போற்றும் வகையில் பிற்காலத்தில் அந்தப்பகுதி "ஹியூம் கஞ்ஜ்' என்று வழங்கப்பட்டு அது மருவி தற்பொழுது "ஹோம் கஞ்ஜ்' என அழைக்கப்படுகிறது.

1857-ல் சிப்பாய்க் கலகத்துக்குப் பிறகு ஆங்கில மேலதிகாரிகளின் 1859 ஜனவரி சுற்றறிக்கையின்படி இந்திய மாணவர்களுக்குக் கல்வி தரும் திட்டத்தை உடனடியாக நிறுத்திவிட வேண்டும் என்று மாவட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது. அந்தச் சுற்றறிக்கைக்குப் பதிலாக 1859 மார்ச் 30-ம் தேதியிட்ட கடிதத்தில் ஆலன் பின்வரும் கருத்தை வலியுறுத்தினார்: ""இந்திய மாணவர்களுக்குக் கல்வி தரும் முயற்சி அதிகமாக வேண்டும் என்று இதற்கு முன் கிழக்கு இந்தியக் கம்பெனியின் இயக்குநர்கள் போட்ட உத்தரவு உள்ளது.

அதன்படி தொடர்ந்து கல்வி அறிவைப் பரப்புவது நல்லது. கல்வி அறிவு மூலம் மக்களுக்கு அரசாங்கத்தின் மீது நம்பிக்கை ஏற்பட்டால்தான் அது அரசுக்கு நன்மை பயக்கும். அறியாமையில் மக்களை அடக்கி வைப்பதால் கடைசியில் எதற்கும் அடங்காத ஆவேசம் மக்களுக்கு ஏற்பட்டு எதிர்ப்படும் எல்லாக் கட்டுப்பாடுகளையும் அவர்கள் உடைத்தெறிந்துவிடுவார்கள் என்பதற்கு வரலாற்றில் பல சான்றுகள் இருக்கின்றன.

மக்களுடைய முன்னேற்றத்தில் அக்கறை காட்டி அவர்களுடைய மதிப்பையும், நம்பிக்கையையும் பெறுவதில்தான் அரசாங்கம் செயல்பட வேண்டும் என்று நான் முழுமையாக நம்புகிறேன்.

ஆங்கில அரசாங்கம் மேற்கொண்ட பற்பல சீர்கேடான நடவடிக்கைகளை ஆலன் வலுவாக எதிர்த்தார். எடுத்துக்காட்டாக, மதுக்கடைகளை ஆங்காங்கு விரிவுபடுத்தி அதனால் கிடைக்கும் ஏராளமான வருவாயை அரசாங்கம் ஆண்டுதோறும் பெருக்கிக் கொள்வதை ஆலன் கண்டித்தார். அதனால், குடிப்பழக்கத்துக்கு அடிமையான ஏழைகளின் குடும்பங்கள் படும் துன்பங்களைத் தவிர்க்கும் வகையில் அரசாங்கம் தனது வரி வசூலை மட்டும் கவனித்துக் கொண்டிராமல் மக்களின் நலன்களையும் கவனிக்க வேண்டும் என்று 1860 மே மாதத்தில் ஆலன் எழுதிய அறிவிப்பில் தெரிவித்திருந்தார்.



ஆலன் தந்த ஆலோசனைகளையும், முற்போக்கான திட்டங்களையும் அப்பொழுது இருந்த ஆங்கில மேலதிகாரிகள் பலர் புறக்கணித்தாலும், வைஸ்ராய் பதவிக்கு வந்த மேயோ பிரபு, ரிப்பன் பிரபு போன்றோர் ஆலனின் ஆலோசனைகளை வரவேற்றார்கள். விவசாயத் துறையை மேம்படுத்த ஆலன் அளித்த ஆய்வறிக்கைகளைப் பார்த்த மேயோ பிரபு, அவற்றை நிறைவேற்ற ஆலன்தான் பொருத்தமானவர் என்று முடிவெடுத்து 1870-ல் ஆங்கில அரசின் வைஸ்ராய் தலைமையகத்தில் விவசாயம், வருவாய், வணிகம் உள்ளிட்ட துறையில் செயலாளராக ஆலன் நியமிக்கப்பட்டார்.

1876-ல் வைஸ்ராயாக வந்த லிட்டன் பிரபுவுடன் ஆலனால் பல பிரச்னைகளில் ஒத்துப்போக இயலவில்லை. குறிப்பாக, வெளிநாட்டு வணிக ஒப்பந்தங்களில் இந்தியாவுக்கு ஏற்படவிருந்த பெரும் இழப்புகளை ஆலன் சுட்டிக்காட்டினார்.

மேலும், 1876-78-ல் பெரும் பஞ்சம் ஏற்பட்டு ஒரு கோடி மக்கள் மாண்டனர். அதற்கான தீர்வு ஆலன் தந்த பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. இவை லிட்டன் பிரபுவுக்குப் பிடிக்கவில்லை. உடனே, ஆலன் செயலாளர் பணியிலிருந்து பதவியிறக்கம் செய்யப்பட்டு அப்பொழுது இருந்த வடமேற்கு மாகாணத்தின் (தற்கால உத்தரப்பிரதேசம்) வருவாய்த் துறை வாரியத்தின் இளநிலை உறுப்பினராக அனுப்பப்பட்டார். அப்பொழுது இருந்த பத்திரிகைகள் அனைத்தும் கடுமையான முறையில் மிக நேர்மையான ஓர் அதிகாரி ஆட்சியாளர்களால் மிக மோசமாக நடத்தப்பட்டார் என்று கண்டித்தன.

1882 ஜனவரி முதல் நாளில் தமது அரசாங்கப் பதவியை ஆலன் துறந்துவிட்டார். அதன் பிறகு இந்திய மக்களுக்குத் தாம் செய்ய வேண்டிய கடமை ஒன்று அவருக்கு இருந்தது. அது, ஆங்கில அரசாங்கம் இந்தியர்களுக்குச் செய்து வரும் அநீதிகளை வெளிப்படுத்தித் தக்க முன்னேற்றத்தைத் தர வேண்டும் என்பதை வலியுறுத்த இங்கிலாந்து சென்று, அங்கு இந்தியா பற்றிய ஓர் அமைப்பை உண்டாக்க அவர் திட்டமிட்டார். ஆனால், வில்லியம் வெட்டர்பர்ன் போன்று இருந்த நண்பர்கள் இங்கிலாந்துக்குச் செல்வதைவிட இந்தியாவிலேயே இந்திய மக்களுக்காக ஓர் அமைப்பை உருவாக்குவது நல்லது என்று ஆலோசனை கூறினார்கள். இந்தியாவின் உரிமைகளை நிலைநாட்டவும், இந்தியாவை முன்னேற்றப் பாதையில் நடத்திச் செல்லவும் தக்கதொரு அமைப்பை உருவாக்க ஆலன் எடுத்த முதல் முயற்சி, கோல்கத்தா பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகளுக்கு 1883, மார்ச் 1-ல் சிறந்ததொரு வெளிப்படையான வேண்டுகோளை வெளியிட்டார்.

# திருச்செந்தூர் முருகன் கோவிலில் மகன்களுக்கு மொட்டை போட்ட சிவகார்த்திகேயன்



சுதா கொங்கரா இயக்கத்தில் சிவகார்த்திகேயன், ஜெயம் ரவி, அதர்வா, ஸ்ரீலீலா ஆகியோர் நடிப்பில், பொங்கலை முன்னிட்டு கடந்த ஜனவரியில் வெளியான படம் பராசக்தி. ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைத்திருந்த இப்படத்தை டான் பிக்சர்ஸ் சார்பில் ஆகாஷ் பாஸ்கரன் தயாரித்திருந்தார். பேசில் ஜோசப், ராணா டக்குபதி, சேத்தன் போன்றோரும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தனர்.

மொழி திணிப்பை அடிப்படையாக கொண்டு உருவான இப்படம் விமர்சனரீதியாகவும், வசூல்ரீதியாகவும் நல்ல வரவேற்பைப் பெற்றது. ரூ.100 கோடிக்கும் மேல் வசூலானது. இந்நிலையில் பராசக்தி படம் வரும் பிப்.7ஆம் தேதி ஜீ5 ஓ.டி.டி. தளத்தில் வெளியாக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சிவகார்த்திகேயன் தனது குடும்பத்தினருடன் திருச்செந்தூர் முருகன் கோவிலில் சாமி தரிசனம் செய்தார். அப்போது அவரது 2 மகன்களுக்கும் மொட்டை போட்டுள்ளார். இது தொடர்பான புகைப்படத்தை அவரது மனைவி ஆர்த்தி தனது இன்ஸ்டா பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.



தென்னிந்திய அளவில் சென்சேஷனல் நடிகையாக வலம் வருபவர் ருக்மிணி வசந்த். இவர் நடிப்பில் கடைசியாக வெளிவந்த காந்தாரா சாப்டர் 1 படம் மாபெரும் அளவில் வெற்றிபெற்றது.

இதை தொடர்ந்து டாக்சிக் படம் மார்ச் மாதம் வெளிவரவிருக்கிறது. இப்படத்தில் முதல் முறையாக யாஷ் உடன் இணைந்து ருக்மிணி நடித்திருக்கிறார். இப்படம் பெரிதும் எதிர்பார்ப்பை உண்டாக்கியுள்ளது.

இந்நிலையில், நடிகை ருக்மிணி வசந்தின் லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்கள் தற்போது வெளியாகியுள்ளது. இ

# “கூலி” படம் பிடிக்குமா..?” மனம்திறந்த சௌந்தர்யா



படத்தில் 'டி-ஏஜிங்' பகுதி எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

லோகேஷ் கனகராஜ் மீது எனக்கு மிகுந்த மரியாதை உண்டு.

இயக்குநர் லோகேஷ் கனகராஜ் மற்றும் நடிகர் ரஜினிகாந்த் கூட்டணியில் உருவாகி கடந்த ஆண்டு வெளியான திரைப்படம் "கூலி". பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் வெளியான நிலையில், கூலி படத்திற்கு ரசிகர்கள் மத்தியில் கலவையான விமர்சனங்களே வந்தது. எனினும், கடந்த ஆண்டு தமிழ் திரையுலகில் அதிக வசூல் செய்த படங்களின் பட்டியலில் கூலி இரண்டாவது இடம் பிடித்தது.

இந்த நிலையில் கூலி படம் குறித்த கேள்விக்கு தயாரிப்பாளரும், நடிகர் ரஜினியின் மகளுமான சௌந்தர்யா ரஜினிகாந்த் மனம்திறந்து பதிலளித்துள்ளார். சௌந்தர்யா ரஜினிகாந்த் தயாரிப்பில் உருவாகி இருக்கும் "வித் லவ்" திரைப்படம் நாளை (பிப். 6) வெளியாக இருக்கிறது. இதையொட்டி தனியார் செய்தியாளருக்கு சௌந்தர்யா ரஜினிகாந்த் அளித்த பேட்டியில் "கூலி" படம் பற்றி பேசியுள்ளார்.

உங்களுக்கு கூலி படம் பிடித்ததா என்ற கேள்விக்கு பதிலளித்த சௌந்தர்யா ரஜினிகாந்த், "படத்தின் கடைசி 10 நிமிடங்கள் அதாவது 'டி-ஏஜிங்' பகுதி எனக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆனால் தலைவர் ரஜினிகாந்தின் ரசிகன் என்ற முறையில், அவரை இன்னும் அதிகமாக பார்க்க விரும்பினேன். எனக்குப் படம் பிடித்திருந்தது, ஆனால் இது அப்பாவின் மிகவும் பிடித்த படங்களின் பட்டியலில் இல்லை."

"என் கருத்துப்படி, இப்போதெல்லாம் மக்கள் அதிகப்படியான வன்முறையை விரும்புவதில்லை என நினைக்கிறேன். 'கூலி' படம் பற்றி நான் மேலும் விரிவாக பேச விரும்பவில்லை, ஏனென்றால் பல நல்ல படங்களைக் கொடுத்த லோகேஷ் கனகராஜ் மீது எனக்கு மிகுந்த மரியாதை உண்டு," என்றார்.

விஜய் டிவியின் பாண்டியன் ஸ்டோர்ஸ் சீரியல் மூலமாக பிரபலம் ஆனவர் காவ்யா அறிவுமணி. அவர் தற்போது சீரியல்களில் நடிப்பதை நிறுத்திவிட்டு படங்களில் மட்டுமே கவனம் செலுத்தி வருகிறார். காவ்யா சீரியலில் ஹோம்லியாக தான் நடித்தார் என்றாலும் படங்களில் நடிக்க தொடங்கிய பிறகு கிளாமர் ஆகவும் புகைப்படங்கள் வெளியிட்டு வருகிறார். தற்போது சேலையில் அழகிய லுக்கில் அவர் எடுத்த போட்டோஷூட் ஸ்டில்களை வெளியிட்டு இருக்கிறார்.



# விஜய் ஆண்டனியின் புதிய Vibe மெட்டீரியல்... பூக்கி படத்தின் அடுத்தப் பாடல் வெளியீடு




விஜய் ஆண்டனி தற்போது பூக்கி என்ற படத்தை தயாரித்துள்ளார். இதில் விஜய் ஆண்டனியின் அக்கா மகனும், சில படங்களில் உதவி இயக்குநராகவும் பணியாற்றிய அஜய் தீஷன் கதாநாயகனாக நடித்துள்ளார். சலீம் படத்தில் ஒளிப்பதிவாளராக பணியாற்றிய கணேஷ் சந்திரா 'பூக்கி' படத்தை இயக்குகிறார்.

இந்தப் படத்தில் நடிகை தனுஷா கதாநாயகியாக நடித்துள்ளார். மேலும் பாண்டியராஜன், சுனில், இந்துமதி மணிகண்டன், விவேக் பிரசன்னா, பிளாக் பாண்டி, ஆதித்யா கதிர், பிரியங்கா ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். விஜய் ஆண்டனியும் இதில் நடித்துள்ளார். 2K தலைமுறை காதலர்களின் ரிலேஷன்ஷிப் பிரச்சினைகளை மையமாக வைத்து கலக்கலான காமெடியுடன், பரபரப்பான திரைக்கதையில், இப்படம் உருவாகி உள்ளது. இந்தப் படத்தில் இடம்பெற்றுள்ள 'புடிக்கலே புடிக்கலே' பாடல் தற்போது வெளியாகி உள்ளது. விஜய் ஆண்டனி இசையமைக்கும் இந்தப் படம் பிப்ரவரி 13ஆம் தேதி வெளியாக இருக்கிறது.

# அஜித் சந்தித்த பின்னணி... சிலம்பரசன் கூறிய முக்கிய தகவல்..!



நடிகர் சிலம்பரசன் தற்போது இயக்குநர் வெற்றி மாறன் இயக்கத்தில் உருவாகும் "அரசன்" திரைப்படத்தில் நடித்து வருகிறார். இதைத் தொடர்ந்து இவர் இயக்குநர் அஸ்வத் மாரிமுத்து இயக்கும் படத்தில் நடிக்க இருப்பதாக கூறப்படுகிறது.

முன்னதாக நடிகர் சிலம்பரசன் துபாயில் வைத்து நடிகர் அஜித் குமாரை சந்தித்து இருந்தார். சிலம்பரசன் – அஜித் குமார் சந்திப்பு தொடர்பான புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் அதிகம் பகிரப்பட்டது. சமீபத்தில் தனது பிறந்த நாளை கொண்டாடிய நடிகர் சிலம்பரசன் துபாயில் வைத்து நடிகர் அஜித் குமாரை சந்தித்தது பற்றி மனம் திறந்துள்ளார்.


இது குறித்து பேசிய சிலம்பரசன், "நான் ஒரு நகைக்கடை திறப்பு விழாவுக்காக துபாய் சென்றிருந்தேன். அஜித் குமாரின் பந்தயப் பயிற்சி செய்யும் இடம் வழியிலேயே இருந்தது. நான் அவரை நீண்ட நாட்களாக சந்திக்க திட்டமிட்டிருந்தேன், இப்போது சரியான வாய்ப்பு கிடைத்தது. அதே நேரத்தில், பந்தயத்தின் போது அவரை தொந்தரவு செய்ய நான் விரும்பவில்லை. அதனால், நான் வரலாமா என்று அவரிடம் கேட்டேன். AK வரச் சம்மதித்து என்னை சந்தித்தார். என்னை சந்தித்த பிறகு AK மிகவும் மகிழ்ச்சியடைந்தார், மேலும் தனது பந்தயம் குறித்து மிக விரிவாக பகிர்ந்துகொண்டார். நானும் மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன்," என தெரிவித்தார்.

# “வித் லவ்” படத்தின் புதிய போஸ்டர் வெளியீடு

சௌந்தர்யா ரஜினிகாந்த் தயாரிப்பில், அறிமுக இயக்குநர் மதன் இயக்கத்தில் அபிஷன் ஜீவிந்த், அனஸ்வரா ராஜன் நடித்துள்ள படம் 'வித் லவ்'. இப்படத்தின் மூலம் அபிஷன் கதாநாயகனாக அறிமுகமாகிறார். அபிஷன் ஜீவிந்த் முன்னதாக தமிழில் வெளியாகி பெரும் வெற்றி பெற்ற "டூரிஸ்ட் ஃபேமிலி" படத்தின் இயக்குநர் ஆவார்.

காதல் கதையை மையமாக கொண்டு எடுக்கப்பட்டு இருக்கும் "வித் லவ்" படத்தில் காவ்யா அனில், ஹரிஷ்குமார், சச்சின் நாச்சியப்பன், தேனி முருகன், ஆர்.ஜே. ஆனந்தி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்தப் படத்திற்கு ஷான் ரோல்டன் இசையமைத்துள்ளார்.

படத்தின் டீசர், டிரெய்லர், பாடல்கள் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றநிலையில், படம் நாளை (பிப். 6) வெளியாக இருக்கிறது. மேலும், இந்தப் படத்தின் விசேஷ பிரீமியர் காட்சி சமீபத்தில் திரையிடப்பட்டது. இந்த காட்சியில் படத்தை பார்த்தவர்கள் படம் நன்றாக இருப்பதாக தெரிவித்துள்ளனர். இந்நிலையில் "வித் லவ்" திரைப்படத்தின் புதிய போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது.



# ‘டைம் மெஷின் கிடைத்தால்...’ பிரதமர் மோடியை சீண்டிய நடிகர் கிஷோர்




கடந்த 2007-ம் ஆண்டு வெற்றிமாறன் இயக்கிய 'பொல்லாதவன்' படத்தில் வில்லன் கதாபாத்திரல் நடித்து தமிழ் சினிமாவிற்குள் அறிமுகமானவர் நடிகர் கிஷோர். இப்படத்தை தொடர்ந்து 'ஜெயம் கொண்டான்', 'வெண்ணிலா கபடிக்குழு', 'விடுதலை', 'வேட்டையன்', 'பொன்னியின் செல்வன்' உள்ளிட்ட படங்களில் நடித்து பிரபலமானார்.

இதை தொடர்ந்து தற்போது இயக்குநர் தீரவ் இயக்கத்தில் உருவாகியுள்ள 'மெல்லிசை' படத்தில் கதாநாயகனாக நடித்துள்ளார். இப்படத்தை 'வெப்பம் குளிர் மழை' படத்தைத் தயாரித்த ஹேஷ்டேக் எப்டிஎப்எஸ் புரொடக்ஷன்ஸ் தயாரித்துள்ளது. இதில் தனன்யா, சுபத்ரா ராபர்ட், ஜார்ஜ் மரியன், ஹரிஷ் உத்தமன், ஜஸ்வந்த் மண்டன் உள்பட பலர் நடித்துள்ளனர்.

பல படங்களில் வில்லனாகவும், குணசித்திர கதாபாத்திரங்களிலும் நடித்து தனக்கென ரசிகர் பட்டாளத்தை கொண்ட நடிகர் கிஷோர் தற்போது பிரதமர் மோடி குறித்து பேசியுள்ள கருத்துக்கள் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளன.

நடிகர் கிஷோர் சமீபத்தில் அளித்த பேட்டியில், "வாழ்க்கையில் பின்னால் போகும் வாய்ப்பு இருந்தால் 2014ஆம் ஆண்டுக்கு சென்று பிரதமரை மாற்றிவிடுவேன். இந்தியாவே மாறியிருக்கும். நாடு இப்போது ஆபத்தான நிலைமையில் இருக்கிறது. வெறுப்புணர்வு நாட்டில் அதிகம் இருக்கிறது. இப்படியே போனால் இதை மாற்றுவதற்கு பல வருடங்கள் ஆகிவிடும். வெறுப்புணர்வை முதலீடாக வைத்து ஆட்சிக்கு வருபவர்கள் ரொம்ப ஆபத்தானவர்கள். அன்பு இல்லை என்றால் இங்கே எதுவுமே இருக்காது," என்று கூறியுள்ளார்.



# அபோகலிப்டோ பட நடிகர் மரணம்



ஹாலிவுட்டில் 2006-ம் ஆண்டு வெளியான 'அபோகலிப்டோ' படத்தை அவ்வளவு எளிதில் யாரும் மறந்துவிட முடியாது. அந்த படத்தில் 'மிடில் ஐ' என்ற கதாபாத்திரத்தில் நடித்து மிரட்டியவர், ஜெரார்டோ டராசெனா. அதில் கதாநாயகனை காடு, மலை என துரத்திச் சென்று கொல்லத்துடிக்கும் கதாபாத்திரத்தில் மிரட்டலான நடிப்பைக் கொடுத்தார்.

இதுதவிர 'நார்கோஸ்', 'குயின் ஆப் தி சவுத்', 'தி வயலின்', 'சர்வைவிங் மை குயின்செனரா', 'டெக்சாஸ் ரைசிங்', 'டையாபிளாரோ' போன்ற பல படங்களில் நடித்து அசத்தியுள்ளார்.

கடந்த சில மாதங்களாகவே உடல்நலக்குறைவு காரணமாக அவதிப்பட்டு வந்த ஜெரார்டோ டராசெனா மெக்சிகோவில் நேற்று மரணம் அடைந்தார். அவருக்கு வயது 55. அவரது மரணத்துக்கு நுரையீரல் புற்றுநோய் காரணம் என்று கூறப்படுகிறது.

ஜெரார்டோ டராசெனா மறைவுக்கு திரையுலகினரும், ரசிகர்களும் இரங்கல் தெரிவித்து வருகிறார்கள்.

கயாடு லோஹர் தற்போது தமிழ் சினிமாவில் இளசுகளை அதிகம் கவர்ந்த ஹீரோயின்களில் ஒருவர். டிராகன் படத்தின் மூலம் பிரபலம் ஆன அவருக்கு தற்போது தெலுங்கு, மலையாளம் போன்ற மற்ற சினிமா துறைகளிலும் வாய்ப்புகள் குவிந்திருந்தது.

படுபிஸியாக அவர் படங்களில் நடித்து வரும் நிலையில் தற்போது கயாடு லோஹர் ப்ரோமோஷன் நிகழ்ச்சி ஒன்றிற்கு சேலையில் அழகாக வந்திருந்தார்.

அந்த சேலையில் அவர் அழகாக போஸ் கொடுத்திருக்கும் புகைப்படங்கள் தற்போது ரசிகர்களை கவர்ந்து வருகிறது.

# தூய்மை பணியாளர் பத்மாவின் பாதம் தொட்டு... நடிகர் பார்த்திபன் நெகிழ்ச்சி செயல்

குப்பையில் கிடந்த 45 சவரன் நகையை நேர்மையுடன் ஒப்படைத்த தூய்மைப் பணியாள் பத்மாவின் செயலை பாராட்டி, அவருக்கு பாதணி அணிவித்து பாத பூஜை செய்து நடிகர் பார்த்திபன் கௌரவப்படுத்தினார். இது தொடர்பாக நடிகர் பார்த்திபன் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

தங்கத்தின் மதிப்பு ஏற ஏற, மனிதத்தின் மரியாதை குறைந்துகொண்டே போய், ஒரு கிராம் ஒரு லட்ச ரூபாயை நெருங்கும்போது, லட்சக்கணக்கான உயிர்கள் கொல்லப்படுவது உறுதியாகிவிடும்.

வருடத்தில் 360 நாளாவது உழைக்கும் துப்புரவு பணியாளர் திருமதி பத்மா அவர்கள், குப்பையில் கிடந்த 360 கிராம் நகையை உரியவரிடம் சேர்ப்பித்து, அந்த ஒரு செயலின் மூலம் உலகமகா உன்னத மனுஷியாக அவதாரம் எடுத்திருக்கிறார்.

என்னை Chief Guest-ஆக அழைத்த எத்திராஜ் கல்லூரிக்கு, நான் வெறும் Guest-ஆகவும் Chief-ஆக திருமதி பத்மாவை அழைத்துச் சென்று, பாதணி அணிவித்து, பாத பூஜை செய்து, புடவை போர்த்தி, 'உலக அழகி' என்ற கிரீடம் சூட்டி நான் பேரழகன் ஆனேன்... என்று கூறியுள்ளார்.








# திருமணம் எப்போது?- திகைப்பூட்டும் பதில்



ராஷ்மிகா கையில் இருக்கும் நிச்சய மோதிரம் இதை உறுதி செய்துள்ளது.

எப்போது தான் இவர்கள் திருமணம் நடக்கும்? என்று எதிர்பார்த்த நிலையில், கடந்த ஆண்டு ஐதராபாத்தில் விஜய் தேவரகொண்டா - ராஷ்மிகா திருமண நிச்சயதார்த்தம் ரகசியமாக நடந்து முடிந்தது. காதலை எப்படி சொல்லாமல் மறைத்து வந்தார்களோ, அதேபோல திருமண நிச்சயதார்த்தம் குறித்தும் இதுவரை இருவருமே வெளிப்படையாக சொல்லவில்லை. ஆனாலும் ராஷ்மிகா கையில் இருக்கும் நிச்சய மோதிரம் இதை உறுதி செய்துள்ளது.

இதற்கிடையில் விஜய் தேவரகொண்டா - ராஷ்மிகா திருமணம் வருகிற 26-ந்தேதி ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள உதய்பூர் அரண்மனையில் நடக்க இருப்பதாக கூறப்படுகிறது.

இந்தநிலையில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட ராஷ்மிகாவிடம், 'உதய்பூரில் வருகிற 26-ந்தேதி திருமணமா?' என்று கேட்கப்பட்டது. இதற்கு அப்படியெல்லாம் இல்லையே... என்று பதிலளித்துள்ளார் ராஷ்மிகா.

ராஷ்மிகாவின் இந்த திகைப்பூட்டும் பதிலால் மறுபடியும் ரசிகர்களிடையே குழப்பம் ஏற்பட்டுள்ளது.

# “பெத்தி” புதிய ரிலீஸ் தேதி அறிவிப்பு



ராம் சரண்- இயக்குனர் சங்கர் கூட்டணியில் வெளியான 'கேம் சேஞ்சர்' திரைப்படம் மக்களிடையே போதிய வரவேற்பை பெறவில்லை.

இந்த படத்தை தொடர்ந்து இயக்குநர் புச்சி பாபு இயக்கத்தில் 'பெத்தி' படத்தில் ராம் சரண் நடித்து வருகிறார்.

இப்படத்தை ரித்தி சினிமாஸ் மற்றும் மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் இணைந்து தயாரிக்கிறது.

இப்படத்திற்கு ஏ.ஆர். ரகுமான் இசையமைக்கிறார்.

இப்படத்தில் ராம் சரணுக்கு ஜோடியாக ஜான்வி கபூர் நடித்து வருகிறார். இப்படத்தின் பர்ஸ்ட் சிங்கிள் சிகிரி பாடலின் லிரிக்கள் வீடியோ உள்பட பாடல்கள் வெளியானது.

இந்நிலையில், 'பெத்தி' திரைப்படம் வரும் ஏப்ரல் 30ம் தேதி வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

இப்படம் மார்ச் 27ம் தேதி வெளியாகும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், புதிய வெளியீட்டுத் தேதியை படக்குழு அறிவித்தது.

பிக் பாஸ் ஷோவில் கலந்துகொண்டு பிரபலம் ஆனவர் சௌந்தர்யா. அவர் அந்த ஷோவுக்கு பிறகு அவர் குக் வித் கோமாளி நிகழ்ச்சியில் கோமாளியாக கலந்துகொண்டு வருகிறார். வித்தியாசமான அவரது குரல் ரசிகர்களை கவர்ந்த ஒன்று. சமீபத்தில் சௌந்தர்யா சென்னையில் சொந்தமாக ஒரு புது வீடு வாங்கி இருந்தார்.அதற்கு அவருக்கு வாழ்த்துக்களும் குவிந்தது. இந்நிலையில அவர் தாவணியில் அழகிய போஸ் கொடுத்து இருக்கும் ஸ்டில்களை வெளியிட்டு இருக்கிறார்.




1. அதிகமாக யோசிப்பதே
நிறுத்தினாலே பாதி மகிழ்ச்சி
தானாக வந்து விடும்.

2.முட்டாள்களை திருத்த
முயற்சி செய்யாதீர்கள்
ஏனென்றால் அவர்கள்
அறிவாளி என்ற திமிரில்
இருப்பார்கள்

3.சுவைகள் ஆயிரம்
ஆனால் நாக்கு ஒன்று
கஷ்டங்கள் ஆயிரம்
ஆனால் வாழ்க்கை
ஒன்று அதை நாம்
சிரித்து பழகி விட்டால்
அது நம்மை ரசிக்க
தொடங்கிவிடும்

4.சொல்லிவிட்டு வருவது
பிறப்பு சொல்லாமல் வருவது
இறப்பு இடைப்பட்ட காலத்தில்
சிரித்துக் கண்டே வாழ்வது
மனிதனின் சிறப்பு

5. எல்லா மனிதர்களும்
கண்ணாடியை
போலத்தான்
உடையாத வரை
ஒரு முகம்
உடைந்து வட்டால்
பல முகங்கள்



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



**அம்மாவின் மௌனம்**

அம்மாவாக நான்
வாழும் போது
உணர்கிறேன் அவள்
மௌனத்தை...

என் பிள்ளையின்
கண்ணீர் துடைக்கும்
போது
நினைவில் வந்தன
அவள் விரல்கள்...

என் சோர்வை
சிரிப்பில் மறைக்கும் போது
புரிந்துகொண்டேன்
அவள் வாழ்வை...

உள்ளம் சுமந்த ஆசைகளும்,
பெருகி வழிந்த அன்பும்
சொல்லாமல் சுமந்த வலியும்...

கடந்த அம்மாவின்
மௌனமாக உலகத்தை
நானும் சத்தமில்லாமல்
கற்று கொண்டேன்

அவள் மௌனத்தின் மொழி
தினசரி வாழ்வில் இணைய,

அவள் தியாகத்தின் சுவடு
என் நிழலோடு இணங்க,

குழந்தையின் மூச்சில் கூட
அவள் நினைவு கலந்திருக்க,
'அம்மா' என்ற சொல்
அம்மாவான பின் விளங்கிட,

அன்பை வார்த்தையாக்காத
அவள் உலகின்
ரகசியம்
வரமாகப் பெற்ற
மகள்களுக்கு மட்டுமே
தெரியும் அதிசயம்.



**நா.பத்மாவதி**
கொரட்டூர்

## சமுதாயம்

சமுதாயம் நம் சுவாசம்
மற்றும் சாயல். ஒருவர்
மற்றொருவரின் கை
கோர்த்து நடந்தால் வழிகள்
தடங்காட்டியாய் உதவும்.
பிரிந்தால் நாம் செல்லும்
பாதைகளில் முள் குத்தும்.
உரிமை பேசும் நாவுக்கு
பொறுப்பு துணை நிற்கும்.
வேறுபாட்டில் ஒற்றுமை
அதன் வலிமை.
கண்ணீர் துடைக்கும்
கரமே மனித நேயம்.
அநீதியைக் கேள்வி கேட்கும்
குரலே சக்தி. கல்வி ஒளி
விளக்காகி
இருளை
விரட்டும்.
சமுதாயத்தின்
ஒற்றுமையில்
நமக்கு நல்ல
பலன் கிட்டும்.



**உ.மு.ந.ராசன் கலாமணி**
கோயம்புத்தூர்.

## அதிர்ஷ்டசாலிகள் !

நீங்கள் குடி புகுந்த வீட்டின்
அருகில் பேருந்து நிலையம்
இருக்கிறதா நீங்கள் ஐம்பது
சதவிகித அதிர்ஷ்டசாலிகள்!

ஷாப்பிங் மால் இருக்கிறதா
அறுபது சதவிகித
அதிர்ஷ்டசாலிகள் !
பள்ளிக்கூடம் , நூலகம்,
கோவில் இருக்கிறதா
எழுபது சதவிகித
அதிர்ஷ்டசாலிகள் !

நல்ல காற்றோட்டமான
பூங்கா, நடைபயிற்சி
மைதானம் இருக்கிறதா
எண்பது சதவிகித
அதிர்ஷ்டசாலிகள்!
மருத்துவமனை அருகிலேயே
இருந்தால் தொண்ணூறு
சதவிகித அதிர்ஷடசாலிகள்!

இது எதுவுமே இல்லை ஒரு
டாஸ்மார்க் கடை மட்டுமே
இருக்கிறதா ! நீங்கள் 100%
அதிர்ஷ்டசாலிகள் ஏனெனில்
டாஸ்மார்க் கடை இருந்தால்
மேற்கூறிய
அனைத்தும்
உடனடியாக
உங்கள்
வீட்டருகே
வந்துவிடும் !



**தினேஷ்**,கோவை

## வஞ்சம் செய்வாரோடு!

வெள்ளைக் கொடியோடு
வந்தவர்களைச் சுட்ட
வஞ்சகர்களை மன்னிக்க
மனம் வரவில்லை!

மனிதாபிமானமற்ற
செயல் புரிந்திட்ட மனித
மிருகங்களை மன்னிக்க
விரும்பவில்லை!

தமிழ் இனத்தையே
கூண்டோடு அழித்திட்ட
தரமற்ற மனிதர்களை
மன்னிக்க ஒப்பவில்லை!

நம்ப வைத்து கழுத்தை
அறுத்த கதையாக நம்பி
வந்தவர்களை மோசம்
செய்தனர்!

போரில்லாப் பகுதி என்று
அறிவித்து விட்டு
போர் புரிந்து கொன்றனர்
வந்தரவர்களை!

முதியவர் பெண்கள்
குழந்தைகள் என்று பாராமல்
மூர்க்கத்தனமாக கொன்று
குவித்து மகிழ்ந்தனர்!

ஏன்? என்று கேட்க
நாதி இல்லாமல்
போனது
இந்த உலகமே
வேடிக்கைப் பார்த்தது!

தமிழினம் அல்லாமல்
வேறுஇனம் அழிந்திருந்தால்
தரணியில் பொங்கி எழுந்து
இருப்பார்கள்!

மனிதாபிமானமற்ற முறையில்
ஒரே நாளில்
மனிதர்களைக் கொன்று
குவித்தனர் கொடூரர்கள்!

ஐ.நா. மன்றமும்
ஆண்டுக்கணக்கில்
விசாரிக்கின்றது
அவர்களை வஞ்சகர்களை
கைது கூட செய்யவில்லை!

இந்த நூற்றாண்டின்
மிகப்பெரிய அவலம்
இலங்கையில் நடத்த முடிந்தது
சோகம்!

நீரு பூத்த நெருப்பாக பூத்தே
உள்ளது நெஞ்சத்தில்
வஞ்சகர்களின் வஞ்சம்!

மறந்திட நினைத்தாலும்
மறக்க முடியவில்லை
மனதின் ஓரத்தில் வந்து
தூக்கம் கலைக்கிறது.

குற்றவாளிகளுக்கு
தூக்குத் தண்டனை
தராவிட்டாலும்
குறைந்தபட்சம்
கைதாவது செய்யுங்கள்!



**கவிஞர்
இரா. இரவி**

## மானம் பெரிதென------!

அறுசீர் மண்டிலம்.

தன்மானங்கொண்டான் தமிழன்
தன்னுயிரை ஈவான் தமிழன்
நன்மனம் பெற்றோன் தமிழன்
நலம்பிறர்க்குச் செய்வான் தமிழன்!
அன்பொன்றே கொண்டான்
தமிழன்
அச்சத்தைக் கொள்ளான்.தமிழன்
பொன்மனமே பெற்றோன் தமிழன்
பொலிவான குணத்தோன்
தமிழன்!

மற்றவர்க்காய் உழைப்பான் தமிழன்
மாண்போடு தழைப்பான் தமிழன்
பற்றோடு உழைப்பான் தமிழன்
பாசத்தில் திகழ்வான் தமிழன்!
நற்றமிழால் உயர்வான் தமிழன்
நாடாளும் தகுதியோன் தமிழன்
உற்றதுயர் தீர்ப்பான் தமிழன்
ஊருக்கும் உதவுவான் தமிழன்!

**முனைவர்
இராம.வேதநாயகம்.**

## பொறுமை

ஒரு மரத்தின்
ஒரே கிளையில்
இரண்டு காய்கள்
காய்க்கிறது

ஒன்று விரைவில்
பழுக்கிறது !
மற்றொன்று தன்
நேரத்தை எதிர்பார்த்து
காத்திருக்கிறது !

அதன் அர்த்தம் !
பிறர் வெற்றி
அடைந்தால் !
நாம் தோல்வி
அடைந்ததாக

எண்ணக்கூடாது !
நம்முடைய தருணம்
வரும் வரை !
பொறுமையாக
காத்திருப்போம்!

**ம.இந்திராணி**,திருச்சி



குழந்தைப் பாடல்!

## பட்டுப்பாப்பா!

பட்டுப் பாப்பா பட்டுப் பாப்பா
பாட்டுப் பாடலாம்
சுட்டிப் பாப்பா சுட்டிப் பாப்பா
சேர்ந்து ஆடலாம்!

குட்டிப் பாப்பா குட்டிப் பாப்பா
கூர்ந்து படிக்கலாம்
சிட்டுப் பாப்பா சிட்டுப் பாப்பா
சீராய்ப் பயிலலாம்!

எங்கப் பாப்பா எங்கப் பாப்பா
இசையில் கூடலாம்
தங்கப் பாப்பா தங்கப் பாப்பா
தகவாய்ப் பாடலாம்!

சிங்கப் பாப்பா சிங்கப் பாப்பா
சேர்ந்து ஆடலாம்
பொங்கும் பொங்கும் பாப்பா
பொலிவாய்ப் படிக்கலாம்!

---------------------

குழந்தைப் பாடல்!

## கொக்கு!

ஒற்றைக் காலில் நிற்கிறாய்
உணவுக் காகப் பார்க்கிறாய்
வற்றாக் குளத்தில் வாழ்கிறாய்



வயலில் எங்கும் சூழ்கிறாய்!
மீனை தவளை உண்கிறாய்
மிதக்கும் நீரைக் காண்கிறாய்
காண அழகைத் தருகிறாய்
கருத்தாய் இரையைப்
பெறுகிறாய்!

எலியைக் கூடப் பிடிக்கிறாய்
ஏற்ற உணவாய் அடைகிறாய்
வலசை நன்கே போகிறாய்
வரிசை காட்டி மகிழ்கிறாய்!

**முனைவர்
இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



பல வருடங்களாய்
தூசி படிந்திருக்கும்
பரணியில் கிடக்கும்
எனது டைரியில் இன்னும்
உன் பெயரும், நம் காதலும்
பிரகாசமாய் தான்
ஜொலித்து
கொண்டிருக்கிறது.
நிச்சயம் வட்டியும்,
முதலுமாய்இரட்டிப்பாய்
திரும்ப தந்து
விடுகிறேன்

இப்போதைக்கு கொஞ்சம்
காபியும், கொஞ்சம் காதலும்
அரை கோப்பையாவது
தந்துவிடு!!

திரும்ப பெறாத கடனொன்று
வேண்டும் உன் காதலை
காலம் முழுதும் தந்துவிடு!!

உன் மூச்சில் திறந்த
ஜன்னல் வாடைக்காற்றின்
சில்மிஷங்களெல்லாம்
போர்வை அணைப்பின்
பெருங்காதல் தான்.
மழைக்காலத்தில் அருந்தும்
தீர்த்த தேநீரில் இன்னும்
மிச்சமிருக்கிறது ஏழடுக்களை
தேக்கி வைக்க காத்திருக்கும்
அட்டையின் குளிர்கால
காமத்தை போல!

ஒரு முடிவில்லா
நெடுந்தூர பயணம்
உன் தோள் சாய்ந்து
போக வேண்டுமடி!!



**லி.நௌஷாத் கான்**



**கவியரசு கண்ணதாசன்**

எட்டாம் வகுப்பு வரை மட்டுமே படித்து
எட்டாத உயரம் உயரந்தவன் நீ

கவியரசு பட்டத்திற்கு முற்றிலும்
குவலயத்தில் பொருத்தமானவன் நீ

நான் நிரந்தரமானவன் என்று அறிவித்து
நிரந்தரமாக மக்கள் மனதில் நிலைத்தவன் நீ

உன் பாடல் ஒலிக்காத வானொலி இல்லை உலகில்
உன் பாடல் ஒலிக்காத வானொலி வானொலியே இல்லை

ஆறிலிருந்து அறுபது வரை அனைத்து வயதினரும்

அன்போடு ரசிக்கும் பாடல் உன் பாடல்

எனக்குப் பிடித்த மதம் தாமதம் என்றுரைத்து
சினம் கொண்ட அவையைச் சிரிக்க வைத்தவன் நீ

படைத்தவன் யார் ?என்பது முக்கியம் அல்ல
படைப்பைப் பாருங்கள் என்று அறிவுறுத்தியவன் நீ

உனக்கு இணையான ஒரு கவிஞன்
உனக்கு அடுத்து யாருமில்லை என்பதே உண்மை

உனக்கு நிகர் நீ மட்டுமே தான்
உன்னை விஞ்சிட எவருமில்லை உலகில்

தொகைக் குறிப்பிடாதக் காசோலைத் தந்தபோதும்
தொகைக் குறிப்பிட ஆசைப் படாதவன் நீ

பணத்திற்காக ஏங்கும இந்த உலகில்
பணத்திற்காக ஏங்காத நல்லவன் நீ

செருக்கோடு இருந்த திரை உலகில் பலரின்



செருக்கை அகற்றிய கவிஞன் நீ

கண்ணதாசனே உன் இயற்ப பெயர் முத்தையா
கற்கண்டென நீ வடித்த பாடல்கள் தமிழின் சொத்து ஐயா

எங்கு நீ கற்றாய் இத்தனை வித்தை
இனிய பாடல்கள் பதிந்து மனதில் விதையாக

காலத்தால் அழியாத கல்வெட்டு வரிகளை
காற்றினில் விதைத்த சகல கல வல்லவன் நீ

நீ குடித்து விட்டு எழுதியதாக அறியாதவர்கள் உளறினார்
நீ குடித்து விட்டு எதையும் எழுத வில்லை அறிந்தவர்கள் சொன்னார்கள்

மகாத்மா காந்தியடிகளின் சத்திய சோதனைப் போல
மன வாசம் வீசும் ரகசியம் இல்லா வனவாசம் படைத்தாய்

அத்திப் பூத்தது போல அதிசயமாகப் பூத்த கவிஞன்
அன்பில் குழந்தைப் போல உள்ளம் கொண்டவன் நீ

வானில் இருந்து வந்த தேவ தூதன் நன் என்று
சொல்லாதவன் மண்ணில் இருந்து பிறந்து
மண்மக்களுக்காக் பாடியவன் நீ'

மதுக் குடிக்க உரிமம் கேட்டு நீ விண்ணப்பித்த போது
மறுத்தார் கக்கன்ஜி தமிழ் வாழ வேண்டும் என்பதற்காக

மது மட்டும் நீ குடிக்காமல் வாழ்ந்து இருந்தால்
மதுர கவி இன்னும் பல்லாயிரம் பாடி இருப்பாய்

இயேசு காவியம் எழுதிய காலங்களில் நீ
மிகத் தூய்மையாக இருந்ததாகப் பேராயர் கூறினார்

முன் பாதியில் உனக்கு இணையான நாத்திகன் இல்லை
பின் பாதியில் உனக்கு இணையான ஆத்திகன் இல்லை

சிறு கூடல் பட்டி என்ற சிற்றூரில் பிறந்த நீ
சிகாகோ வரை புகழ் பலப் பெற்றாய்

உன் பாடல் இல்லை என்று பொய் உரைத்தப் போதும்
உன் பாடல் தான் என்று அறுதியிட்டார் மக்கள் திலகம்

உடலால் உலகை விட்டு மறைந்த போதும்
பாடலால் மக்கள் மனங்களில் வாழ்பவன் நீ

உலகம் உள்ளவரை தமிழ் மொழி நிலைக்கும்
தமிழ் மொழி உள்ளவரை உன் புகழ் நிலைக்கும்.

**கவிஞர் இரா .இரவி**

## கவியரசு என்றால் கண்ணதாசன் !

கவியரசு என்றால் கண்ணதாசன் !
கண்ணதாசன் என்றால் கவியரசு !

"ஆறு மனமே ஆறு " பாடலின் மூலம்
ஆறுதல் வழங்கிய கவியரசு நீ !

"வெற்றி பெற்ற மனிதரெல்லாம் " பாடலில்
தோற்றவருக்குத் தெம்பு தந்தவன் நீ !

"நான் மலரோடு தனியாக" பாடலில்
நல்ல காதலை சுகமாக வடித்தவன் நீ !

"மலர்களைப் போல் தங்கை" பாடலுக்கு
மயங்காத உள்ளம் இல்லை உலகில் !

"போனால் போகட்டும் போடா "பாட்டில்
புத்திப்புகட்டும் நிலையாமையைப் பாடினாய் !

"நான் சார்ந்த மதம் தாமதம் "என்று சொல்லி
நீ தாமதத்தையும் நகைச்சுவையாக்கியவன் !

சித்தர்கள் பாடல்களை எளிமைப் படுத்தி
சித்திரமாய் திரையில் தீட்டித் தந்தவன் நீ !

வாழ்வியல் கருத்துக்களை பாடல்களில்
வற்றாத ஜீவ நதியாக வார்த்தவன் நீ !

காதலின் வேதனையை பாட்டில்
கடவுளோடு ஒப்பிட்டுப் பாடியவன் நீ !

ஆங்கில இலக்கியம் படிக்காத நீ
ஆங்கில இலக்கியம் வென்றாய் பாட்டில் !

சங்க இலக்கியத்தை திரைப்பாடலில் வைத்தாய்
சாமானியருக்கும் புரிந்திட பாடல் படைத்தாய் !

கம்ப இராமாயண கருத்துக்களையும்
கனிச்சாறாக பாட்டில் பிழிந்தவன் நீ !

"படைப்பதனால் என் பெயர் இறைவன்" என்று
படைத்தாய் இறவாத பாடல்களை நீ !

எந்த நிலையிலும் மரணமில்லை என்று பாடி
இன்றும் எங்கள் மனங்களில் வாழ்கிறாய் நீ !

உனக்குப் பின் பாட்டெழுத யார் யாரோ வந்தனர்
உன் இடத்தை யாருமே எட்ட வில்லை !

கவியரசு என்றால் கண்ணதாசன் !
கண்ணதாசன் என்றால் கவியரசு !

**கவிஞர் இரா .இரவி .**

## வரலாற்றுத் தேடலா?

உலகத்தின் தோற்றத்தை
அறிய முற்பட்டேன்
ஆதித் தமிழனின்
அடையாளம்
காணத் துடித்தேன் . ...
பண்டைய இலக்கியமா ?
என்றார்கள் ...
தமிழ்கூறும் நல்லுலகின்
புலவர்களைப் படிக்க
ஆரம்பித்தேன்
சங்ககால இலக்கியமா ?
என வினா எழுப்பினர் !
காப்பிய மாந்தர்களையும்
புத்த கொள்கைகளையும்
படிக்க நாடினேன்....
சங்கம் மருவிய
இலக்கியமா ?
என பின்தொடர்ந்தனர் !
மூவேந்தர், முத்தமிழ்
எனப் படித்திருக்கும்
போதுவரலாற்றுத்
தேடலா?
எனக் குரலெழுப்பியபடி
வியந்தனர் !
மண்ணில் நல்ல
வண்ணம் வாழ
பாசுரங்கள் பாடும்போது
பக்தி இலக்கியமா ?
என்றார்கள் !
புதிய சிந்தனைகள்
விரிக்க
அறிவியல் கலைகளில்
ஆழ்ந்தேன்
நவீனத்துவமா ? வினா
எழுந்தது !
காலாவதியான
நவீனத்துவத்தை
வழியனுப்பி வைத்து
உலகளாவிய
அணுகுமுறையில்
பொதுச் சிந்தனைகளை
விதைத்து
புனைவுகளோடு
பயணிக்க....
பின் நவீனத்துவமா ?
இது பலரின்
கேள்விகளானது !
சுருங்கச் சொல்லி
விளங்கவைக்கும்
ஹைக்கூவையும் ,
தன்முனையும்
வாசித்து சுவாசிக்கையில்
தற்காலத்து கவிதை
மொழிகளா
என வினவினர் ....
எனது தேடல்களின்
விடிவெள்ளியாக....
இரண்டாயிரம்
ஆண்டுகளுக்கு முன்
பயணித்து தடம் பதித்த
திருக்குறளைத் தேடி
எடுத்தேன்...
அடடே...இது
மெய்யியலின்
கிளை வடிவம் தாங்கிய
உலகப் பொது மறை !!!!
முக்காலம்
உணர்த்துகின்ற முப்பால்
எனச் சொல்லியபடி ஒரு
பெரும் கூட்டம்
என் முன்னே கூடி
கைத்தட்டியது !



**கா.ந.கல்யாணசுந்தரம்**


## வேண்டுதல்கள் !



ஆலயத்தில் கடவுளிடம் என்னதான்
நம் வேண்டுதல்களை விழுந்து விழுந்து
வேண்டினாலும்....
அந்த வேண்டுதல்களுக்கு
எதிர்ப்பதமான முடிவுகளையே நமக்கு
பெரும்பாலும் தந்து விடுகிறது இயற்கை!

**எம்.பி.தினேஷ்.** கோவை



### பிரார்த்தனை

" பிரார்த்தனை என்பது
மகத்தானது அதுவும் பிறர்
வாழ பிரார்த்திப்பது
உயர்ந்தது ..."

ஒரு மனிதன் உயிர் பிழைக்க
உயிர் வாழ கோடி பேர்
பிரார்த்தனை செய்வது
என்பது உயர்ந்தது
மகத்தானது .... "

ஒன்று கூடி ஒரு மனதாக
பிரார்த்தனை செய்வது
பலவகை நன்மைகளை
தரக் கூடியது ..."

மனிதனுக்கு இறைவன்
கொடுத்த வரப்பிரசாதம்
பிரார்த்தனை .... "

ஏழ்மையில் பிரார்த்தனை
செய் பணம் வந்ததும்
பரிகாரம் செய் ..."


மனம் உருக மௌனமாய்
வேண்டுவதில் தான் ஆயிரம்
ஆயிரம் சுகம் உண்டு ..."

கேட்பவர் மனம் உணரும்
வகையில்
பணிவு பக்தி
கொண்டு
கையேந்தி
நின்றால்
பலனும்
கை நிறைய
உண்டு ..."



**ஆர். சீதாராமன், சீர்காழி**

---



### ஹைக்கூ...

போகி அன்றும்...
வெள்ளாவியை எரித்தபடி
சலவைக்காரன்!

சொல்லத் தெரியவில்லை
வாழத் தெரியாமல்
வாழ்ந்து முடித்ததையும்!

பசியில் கேட்கவில்லை
குருடனுக்கு கூடவே
காது இரண்டும்!

ஒரு வெகுமதிதான்
உண்மையில் திருமதி
இல்லையேல் ஏது நிம்மதி?

நெல்லறுக்க முடியாமல்
கலங்கிடும் விவசாயி
மனதை அறுத்தது தை

வாழ்வில் சறுக்கியவன்
ஏற முயற்சிக்கிறான்
வழுக்கு மரம்

அடக்க முடியவில்லை
அடங்காதவனை
ஆறடியிலும் போட

அறுசுவை உணவு
அம்மாவின் நினைவு நாளில்
சுடச்சுட அப்பாவுக்கு!

கை கழுவிய உறவு
கை கழுவினேன்
கல்யாண விருந்து சாப்பிட

நம் காதல் கதை
தோற்றாலும் அதைபற்றி
பல கற்பனை கதைகளில்
இன்னும் ஊர்!

**ஜெ.ம.புதுயுகம்**
பண்ணந்தூர்

---

### புரியாத புதிர்.!

'கருவின் பாலினத்தை
தெரிவித்தால் கடும்
நடவடிக்கை.'..... எச்சரித்து
பேட்டியளித்த அமைச்சர்...
செய்தியாளர்களிடம்
ஒலிவாங்கிகளை
அணைக்கச்சொல்லி..
குரலைத்தாழ்த்தி
கேட்டார்.."உங்க ரகசிய
கருத்துக்கணிப்புல எந்த
கட்சிக்குய்யா.. 'பிரகாசமான
வாய்ப்பு.!?'

**க.குமாரகுரு,**
மயிலாடுதுறை

---



மதில் மேல் பூனையின்
மனதில் பாலை எதிர்நோக்கி
வெளியில்
புறப்பட்ட
மனிதனின்
மனதில்சகுனம்.



**ஜயந்தி
சிவக்குமார்**
திருச்சி.

---

### வரலாற்றுத் தேடலா ?

உலகத்தின் தோற்றத்தை
அறிய முற்பட்டேன்
ஆதித் தமிழனின்
அடையாளம் காணத்
துடித்தேன் . ... பண்டைய
இலக்கியமா ? என்றார்கள் ...
தமிழ்கூறும் நல்லுலகின்
புலவர்களைப் படிக்க
ஆரம்பித்தேன்
சங்ககால இலக்கியமா ?
என வினா எழுப்பினர் !
காப்பிய மாந்தர்களையும்
புத்த கொள்கைகளையும்
படிக்க நாடினேன்....
சங்கம் மருவிய இலக்கியமா?
என பின்தொடர்ந்தனர் !
மூவேந்தர், முத்தமிழ் எனப்
படித்திருக்கும் போது
வரலாற்றுத் தேடலா ?
எனக் குரலெழுப்பியபடி
வியந்தனர் ! மண்ணில் நல்ல
வண்ணம் வாழ
பாசுரங்கள் பாடும்போது
பக்தி இலக்கியமா ?
என்றார்கள் ! புதிய
சிந்தனைகள் விரிக்க
அறிவியல் கலைகளில்
ஆழ்ந்தேன் நவீனத்துவமா ?
வினா எழுந்தது !
காலாவதியான
நவீனத்துவத்தை
வழியனுப்பி வைத்து
உலகளாவிய
அணுகுமுறையில்
பொதுச் சிந்தனைகளை
விதைத்து புனைவுகளோடு
பயணிக்க.... பின்
நவீனத்துவமா ? இது பலரின்
கேள்விகளானது !
சுருங்கச் சொல்லி
விளங்கவைக்கும்
ஹைக்கூவையும் ,
தன்முனையும் வாசித்து
சுவாசிக்கையில் தற்காலத்து
கவிதை மொழிகளா
என வினவினர் ....
எனது தேடல்களின்
விடிவெள்ளியாக....
இரண்டாயிரம்
ஆண்டுகளுக்கு முன்
பயணித்து தடம் பதித்த
திருக்குறளைத் தேடி
எடுத்தேன்... அடடே...
இது மெய்யியலின் கிளை
வடிவம் தாங்கிய உலகப்
பொது மறை!!!! முக்காலம்
உணர்த்துகின்ற முப்பால்
எனச்
சொல்லியபடி
ஒரு பெரும்
கூட்டம்
என் முன்னே
கூடி
கைத்தட்டியது!



**கா.ந.கல்யாணசுந்தரம்**

---

### எனை நனைத்த மழை !

வானில் இருந்து வரும் திரவ
அமுதம் மழை !
வயல்களைக் குளிர்வித்து
விளைவிக்கும் மழை !

துளித்துளியாக விழும்
பெருவெள்ளம் மழை !
துன்பம் மறக்க வைத்து
இன்பம் தரும் மழை !

கடலிலிருந்துப் பயணித்து
மேகமாகும் மழை !
கனிந்து மண்ணிற்கு வந்து
விழும் மழை !

வருடம் தோறும் சீராகப்
பெய்ய வேண்டும் மழை !
வளங்கள் பெரும் வளர்ச்சிப்
பெருக்கும் மழை !

மயில்கள் தொகை விரித்து
ஆடினால் மழை !
மண் செழிக்கும் மகசூல்
பெருக்கும் மழை !

வருமுன்னே ஆராய்ந்து
சொல்கின்றனர் மழை !
வஞ்சியர்கள் விரும்பி
மகிழ்ந்திடும் மழை !

அளவோடு பெய்தால்
நலமாக வாழவைக்கும் மழை!
அளவின்றிப் பெய்தால்
இன்னல் தரும் மழை !


புவி வெப்பமயமாதலைத்
தடுத்திடும் மழை !
புவியின் விளைச்சலை
வளர்த்திடும் மழை !

காதலர்களின் ஊடல் தீர்த்து
வைக்கும் மழை !
காதலர்களின் கூடல்
இணைத்து வைக்கும் மழை !

ஓரமாக ஒதுங்கி நின்ற எனை
நனைத்தது மழை !
உடன் இறங்கி மழையில்
நனைந்து மகிழ்ந்தேன் !

**கவிஞர் இரா .இரவி !**

---



படம் உதவி பாவலர் புதுவைத்
தமிழ்நெஞ்சன் !

### ஹைக்கூ !

பார்க்க மகிழ்ச்சி
விழிகளுக்கு குளிர்ச்சி
மரங்களின் மலர்ச்சி !

தெரிகின்றது
மரங்களில் தேவதை !

அறிந்திடுங்கள்
மரம் வளர்ப்பு அறம் வளர்ப்பு!

மழைக்கான வரவேற்பு
தோரணங்கள் மரங்கள் !

பாரக்கப் பசுமை
கண்களுக்குக் குளுமை
மனதிற்குள் மகிழ்ச்சி !

**கவிஞர் இரா .இரவி !**

---



குறள்வெண் செந்துறை!

### அழகு

இயற்கை அழகே
அழகன்றோ இனிமை தருமே
நலமாக வியப்பாய்க் காணும்
அழகன்றோ விளக்க முடியா
அழகன்றோ!

மகிழ்ச்சி கூட.அழகன்றோ
மனத்தின் அழகும்
அழகன்றோ! முகத்தின்
பொலிவும் அழகாகும்
முழுமை நிலவும் அழகாகும்!

**முனைவர்
இராம.வேதநாயகம்.**

---



படம் உதவி பாவலர்
புதுவைத் தமிழ்நெஞ்சன் !

### ஹைக்கூ !

வயலுக்குள் வீடு
வாசலில் தவமிருக்கும்
தென்றல் !

குடிசை வீடுதான்
குடியிருக்கின்றது
குதூகலம் !

யாராக இருந்தாலும்
தலை குனிந்தே நுழைய
வேண்டும்
பயிற்றுவிப்பு பணிவு !

கைக்கு எட்டும் தூரத்தில்
சமைக்க உதவும் காய்கள் !

மாட
மாளிகையில்
இல்லாத
இன்பம்
உண்டு
குடிசையில் !



**கவிஞர்
இரா .இரவி!**

---



பூட்டி வைக்கப்பட்ட
என் இதயத்தின் திறவுகோல்
உன் காதல் மட்டுமே என
அறிந்தும் அறியாதது போல்
கடக்கிறாய் எறும்பு ஊற
கல்லும் கூட தேயுமாம்
இதுவரை தேயவில்லை
மக்காத
உன் பிளாஸ்டிக் மனசு!

காதல் தரும் போது
அவள் தேவதை
காயங்களை தரும் போது
அவள் பிசாசு!

காயம் தந்த கடவுளின்
கால் பிடித்து வேண்டினேன்
துரோகம் தராத நிரந்தரமான
ஒன்றை தா என்றேன்.
தனிமையை பரிசளித்து
விட்டு சென்றான்!!

உன் சிறு புன்னகை போதும்
இந்த பெரும் வாழ்வை
கடக்க!!

மது தோற்றுப் போனது
உன் சிறு துளி
பார்வைக்கு முன்னால்!!

தொண்டைக்குழியில்
சிக்கித்தவிக்கும்
அந்த பொல்லாத காதலை
உன் கண் பார்த்து
சொல்லிட வேண்டும்!

ஏக்கத்தோடு உனைப்
பார்க்கும் என்னிடம்
என்ன வேண்டுமென்கிறாய்?
எப்படி சொல்வேனடி?
நிராயுதபாணியாய்
முழுவதுமாய் உன்னிடம்
சரணாங்கதியாகிட
வேண்டுமென்று!

மழையில் தோகை விரித்து
நடனமாடினால்தான்
மயிலழகு நீ
நடந்து
வந்தாலே
பேரழகு!!

உனக்காக
காத்திருப்பது
கூட ஒரு பெரும் சுகம்தான்!



**லி.நௌஷாத் கான்**

---

### "விரல் முறிந்த கவிஞன்"

முறிந்தது விரல் கடவுளே
நீ முறித்தது
என் நம்பிக்கையை!

என் விரல் என் சொல்லின்
இறக்கை என்பது
தெரியாதா உனக்கு?

என் எலும்பு உடைந்த ஓசை
உன் வானத்தில்
ஒலிக்கவில்லையா?
இல்லை நீ செவிடா?

விரல் முறிந்த கையால்
நான் எழுதுவேன் பக்தியை
அல்ல உன்னை எதிர்க்கும்
போராட்டத்தை!

எழுதும் ஒவ்வொரு
முயற்சியும்வலியாய்
முளைக்கும் போது
நீயெதற்கு கடவுளே?

என் இரத்தம் மையாகி
கவிதை பிறக்கும் போதே
நீ கண் மூடி இருப்பது ஏன்?

என் சப்தம் பிரார்த்தனை
அல்ல, இது சாபம்!
விரல் முறிந்த கவிஞன்
எரியும் சொல்!

இன்னும் எழுதுவேன்...
வலி என் பேனா
கோபம் என் மை அது
உன்னைச்
சாடும்
என் கடைசி
பிரார்த்தனை!



**முகில்
தினகரன்**
கோயமுத்தூர்

---



காற்றில் தவழ்ந்து வந்த
பாடலை உன் உதட்டில்
சிறைப் பிடிக்கிறாய்..
கவித்துவம் பெற
என் தவம் தொடங்குகிறேன்..

நதி உருட்டிச் செல்லும்
கூழாங்கற்கள்.. உன் நிறம்
அப்பிக் கொள்கிறது..
நீ எடுத்து மீண்டும்
நீரில் வீசியதும்.

அடுத்த நிமிடம் தான்
கடைசி என்பது போல
நீயும்.. நழுவ
விடாமல்
இறுக்கிப்
பிடித்தபடி
இந்த
நிமிடத்துடன்
நானும்..



**ரிஷபன்**

---

### ஊதாக்கண்ணீர்

அம்மா உன் பிரிவால்
என் கண்களில் வடிந்தது !
"இரத்தக்கண்ணீர்"

அம்மா என் கண்ணீரின் ஈரம்
என் சட்டைப்பையிலுள்ள
"பேனா"வை நனைத்தது !

அம்மா அப்போது என்
பேனாவும் கண்ணீர்
வடித்தது!
அதான் இந்த"வரிகள்"(மை)
ஊதாக்கண்ணீர்?

அம்மா உன் "கருவறையில்"
ஐம்பூதங்களின்
உணர்வுகளைக் கொடுத்து
சுமந்தாய்! "பத்துத்திங்கள் "

அம்மா இப்போது
ஐம்பூதங்களோடு நான்
வாழ்கிறேன் !


ஆனால் நீ இருப்பதோ
"கல்லறையில்"

அம்மா நீ
மீண்டும்
என்னைச்
சுமக்க!
நான்
காத்திருக்க
வேண்டுமோ !
"எத்தனைத்திங்கள்"



**G.A.கோவிந்தராஜ்
(எ)சுரேஷ்குமார்**
திருப்புவனம் புதூர்

---



### சிருங்காரம்

நீ சிணுங்கும் போதெல்லாம்
அழகிய சிருங்காரம் வந்து
ஒட்டிக் கொள்கிறதடி
அன்பே உனதழகில்!

### அதிகாரம்

எனது கவிதைகளில்
உட்கார்ந்து கொள்ளும்
அதிகாரத்தை உனக்கு மட்டும்
யார் கொடுத்ததடி? என்
இனிய உயிர்க்காதல் அன்பே!

### கேள்வி

உன்னை அமர வைக்க
என் இதயத்தைத் தவிர
வேறு எந்த இடமடி அழகாக
இருந்து விட முடியும்?
சொல்லடி என் ப்ரிய
அன்பே!

### தருணம்

உன் அன்பை உணரும்
தருணத்திலெல்லாம்
இறக்கைக் கட்டிக்
கொண்டு
பறக்கிறதடி அன்பே
என் காதல்!

### ரசம்

நீ எந்த ரசம் வைத்தாலும்
அதில் தவறாமல்
காதல் ரசத்தின் ருசி
இடம் பெற்று விடுகிறதடி
என் ஆருயிர் அன்பே!

### கவிதை

கோபத்திலிருக்கும் போதும்
கூட உன் கண்கள்
என்னிடம் கவிதை சொல்லத்
தவறுவதில்லை அன்பே!

### தெரியும்

என் கவிதைகளுக்கும் கூடத்
தெரிந்திருக்கிறது
பார் அன்பே கோபத்தில் கூட
நீ அழகு என்று!

### உண்மை

உன் கண்கள் சொல்லும்
கவிதைகளைப் போல்
என் கவிதைகள் அழகாய்
இருப்பதில்லை அன்பே!

### கவிதை

உன்னைப் பற்றி
என்ன எழுதினாலும்
அது கவிதையாகி
விடுகிறதே!
அது எப்படியடி என் இனிய
உயிர்க்காதல் அன்பே?!

### நடிப்பு

காதல் இல்லாதது போல்
நடிக்க உன்னால் மட்டும்
எப்படியடி முடிகின்றது?
என் ப்ரிய வசந்தமே!



**முத்து ஆனந்த்**
வேலூர்

---



### "ஓய்வு கிடைக்காத முதியவர்"

அவருடைய வயதினர்
ஓய்வின் நிழலில்
பேரன் பேத்திகளின்
சிரிப்பை எண்ணிச்
சிலிர்க்கிறார்கள்!

இவர் மட்டும் இன்று வரை
குடும்பச் சுமையின்
இடிதாங்கியாய்!

மகனில்லை...
மகளில்லை...
ஆதரவுக் கரமில்லை!

நோயாளி மனைவியின்
ஒவ்வொரு மூச்சும்
மருந்துகளின்
தாலாட்டில்!
உலவிடும் மருந்துச் சீட்டுகள்
ஊதியத்தை விட நீளமாய்..

ரிட்டையர்மெண்ட் என்பது
வயிற்று பசிக்கும்,
மருத்துவக் கட்டணத்திற்கும்,
இல்லாததால் உழைப்புச்
சிகிச்சை உன்னதமாகின்றது!

விரல்கள் நடுங்கினாலும்
வேலைக்கு போய்த்தான்
தீரணும்!

ஓய்வெடுக்க விழைந்தால்
வாழ்க்கை வண்டியின்
அச்சாணி கழன்று விடும்
முதியவரின் உழைப்பு
வாழ்வதற்காக அல்ல,
இன்னுமொரு நாள்
வாழ்க்கையை
வாழ்ந்து கொள்ள?

பிறவி முடியும் வரை
உழைக்கத்
தீர்ப்பளிக்கப்பட்டவன்
இறைவன் எழுதிய
தலைவிதியின்
ஈரமில்லா முடிவுரை!



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

---



### கணவன் - மனைவி.

உன் விழியில் நீர் வழிகிறது. என் விழியிலும் நீர் வழிகிறது.
எனக்கு விக்கல் வருகிறது. எனக்கும் விக்கல் வருகிறது.
இப்போது எனக்கு தேநீர் அருந்த வேண்டும் போல் இருக்கிறது.
எனக்கும்தான். இதோ தேநீர் போட்டு எடுத்து வருகிறேன்.
ஒரு மாற்றம் கருதி இன்று திரைப்படம் போக வேண்டும் போல்
இருக்கிறது. நானும் அதே தான் நினைத்தேன்.
வீட்டில் சாப்பிட்டு போர் அடித்து விட்டது.
இன்று உணவு விடுதியில் சாப்பிட வேண்டும்போல் இருக்கிறது.
எனக்கும்தான். அது எப்படி எனக்குத் தோன்றுகிறதே உனக்கும்
தோன்றுகிறது. இரவு படுக்கையில் படுத்திருக்கும் போது
நினைத்தான். வாழ்க்கையில் ஒரு பிடிப்பே இல்லை. இன்று நான்
விஷம் அருந்தி விட்டேன். நாளை காலையில் நான் உயிருடன்
இருக்க மாட்டேன். ஆனால் விஷயத்தை நான் உன்னிடம்
சொல்ல மாட்டேன். நீயும் சாகத் துணிவாய்.
நீ நீண்ட நாட்கள் உயிருடன் இருக்க வேண்டும் என்பதுதான்
எனது ஆசை என்று நினைத்தான் கணவன். அவள் படுக்கும்
போது நினைத்தாள்.எனக்கு வாழப்பிடிக்கவில்லை.
விஷமருந்தி விட்டேன். ஆனால் சொல்ல மாட்டேன்.
என்னை சாக விட மாட்டீர்கள். நீங்கள்
நீண்ட நாட்கள் உயிருடன் இருக்க வேண்டும்
என்பதுதான் என் ஆசை.
காலையில் கணவன் மனைவி இருவரும்
படுக்கையில் பிணமாகக் கிடந்தார்கள்.



**உ.மு.ந.ராசன் கலாமணி**
கோயம்புத்தூர்.







SATHLOKHAR
SYNERGYS E&C GLOBAL LIMITED
Enduring Relationships
EPC & Infra Turnkey Contractors
CIVIL | PEB | MEP | INTERIORS | SOLAR
NSE Listed Company

We are looking for enthusiastic and self driven Engineers to join our growing team.

**Vacancies**
Civil | PEB | MEP Engineers

**Qualification**
Diploma or BE in Civil, Mechanical & EEE, Any degree / +2 passed

**Experience**
only 0 to 3 years

**Apply Now**
hr@sathlokhar.com
Contact: 98408 96529
Build your career with a company committed to construction engineering excellence.





WANTED

**Job 1-SALES ENGINEER**
Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu

**Job 1-SALES ENGINEER**
Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu

ALP AEROFLEX INDIA PVT. LTD.
Contact details for Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com




தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E

**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI

**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE










UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD

உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்

அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்

5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971




just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com


WE'RE HIRING!
A Passionate Content Creator
94386 10756


CREATE YOUR PROFILE WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS



சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
அஜந்தா பாக்குடன் உங்கள் தீபாவளியை கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


ARG CONSTRUCTIONS
ARG
We Build Your
DREAM
HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


Just 499
Visite Our Website
JUST499.COM
All type Of your Website/App need at one place
Small Business website
E - commerce Website
Corporate Website
Enterprise website
Mobile App Development
contact us at
9337501889


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open
for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


999 SITE
ARE YOU
LOOKING FOR JOB
JOB
Websites
CONTACT/WHATSAPP-7789951009


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும்
ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
உள்ளூர் செய்திகள் முதல்
வெளிநாட்டு செய்திகள் வரை
துல்லியமாக தரும்
ஒரே நாளிதழ்
ஆனந்த பாஸ்கர்
www.anandabhaskar.com
தினம் தோறும்
உள்ளூர், உலக செய்திகள் வரை
தரும் தரமான
நாளிதழ்
பேப்பர்பாய்
www.paperboy.biz


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just 499
www.just499.com

முனீஸ்வர் துணை
RG
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.

GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.

Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருட்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

ADVERTISE WITH US!
CONTACT US
9337501889

THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
* Plots
* Flats
* House
* Villa
* Bungalows
* Farm Land
* Ware Houses
* Factory Sites
* Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget => We Show Your Home
Call:7871617005

Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009

WE'RE HIRING
TELECALLERS
SALARY STARTING FROM RS.20000/- ONWARDS
+91 7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION FACTORY
For Your
REAL ESTATE BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009

WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990

WANTED MALE/FEMALE
SALES ASSISTANT
PREFERABLE IN & AROUND ALANDUR
9962258000
Since 1953 SLJ
Sri Lakshmi Jewellery
ALANDUR, CHENNAI - 16.

WANTED
EXECUTIVES
Age Limit 40 Years
For Chennai, Tiruvallur, Chengalpattu
Attractive Salary Package, PF, ESI & Bonus with Allowances
999 BRAND
+91 893 999 7476
Email: 999lungies@kasz.in

WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/- & Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349


ஜூஸ் கடை
வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998

REQUIRED
Bank & Finance
LOAN CONSULTANCY
TELECALLER (F)
Age Below 30 | Fresh/Exp 2Yrs
Qual: +2 or Any Degree
Sal: 12 to 18K + Inc
West CIT Nagar, T.Nagar-35.
ct: 97907 88886

WANTED
Experienced candidate for Office Manager position.
Good salary offered.
Contact: 87544 55567
Email: requires2025@gmail.com



# பல்சுவை களஞ்சியம்




செம்மை மாந்தர்...மகளிர் தினத்தில் எனது அத்தை முதன்மை பெறுகிறார். பெரியம்மா, அண்ணி,அக்கா, ஆசிரியை, மருமகள், தங்கை, சித்தி, மாமி போன்ற உறவு முறைகள் ஏதோ ஒரு விதத்தில் இன்ஸ்பிரேஷன் ஆயிருக்கிறார்கள்.

ஆனால் என் கூடவே இருந்தவள் அத்தை. என் குழந்தைப் பருவம் முதல் அவளது முடிவு காலம் வரை எனக்கு ஏதோ ஒருவிதத்தில் பாடம் நடத்தியவள்.

அவளுக்கு இதனைக் காணிக்கையாக்குகிறேன்.

இது ஒரு கதை போலும், என் வாழ்நாளில் அவள் பயணப்பட்டதும் இதனில் இடம் பெறும்.

அவள் மேற்பார்வையில் பிறந்தவள் நான். எனக்கு அம்மாவை விட அவளிடம் வளர்ந்ததுதான் அதிகம். எனக்குப் பசி என்றாலும், அழுகை வந்தாலும், சந்தோஷமாக இருந்தாலும், மனது தேடுவது அவளைத் தான்.

ஒருசமயம் எனக்குக் காய்ச்சல். எல்லாரும் கல்யாணத்திற்குக் கிளம்பியாச்சு. மருத்துவர் என்னைப் பிரயாணம் பண்ணக் கூடாது, மாத்திரை, ஊசி இரண்டு நாட்களுக்குப் போட வேண்டும் என்றார். முதலாவதாக, நான் வரவில்லை என்றதோடு நிற்காமல், "கவலைப் படாமல் எல்லாரும் போய் வாருங்கள்!" என்று இன்முகத்தோடு அனுப்பி வைத்தாள். நான் காய்ச்சலில் இருந்து நார்மலுக்கு வரும் வரை, நான் என்ன சாப்பிட்டேனோ அதையே அவளும் சாப்பிட்டாள்.

சிவப்பானவள். ஒல்லியான உருவம். அதற்கேற்ற மாதியான உயரம். அவள் சிறிதாக ஸ்ரீசூர்ணம் இட்டுக் கொண்டிருப்பாள். எனக்கு விவரம் தெரிந்தவரை சட்டை(ரவிக்கை) போடாதவள். மரியாதைக்கு உரியவள். என் அப்பாவிற்கும் அவருக்கும் கிட்டதட்ட பதினாறு வயது வித்தியாசம்.

அவர் அம்மா இறக்கும்போது, என் அப்பாவுக்கும் அவருடைய தங்கைக்கும் கல்யாணம் ஆகவில்லையாம். இவள் அவர்களையே குழந்தைகளாகப் பாவித்து, அவர்களுக்காகவே வாழ்ந்ததாகச் சொல்வாள். காலையில் நான்கு மணி அலாரம் வேண்டாம். எழுந்துவிடுவாள். ஒரு சின்ன சப்தம் கேட்டாலும் விழித்துக் கொண்டு விடுவாள். சமையல் ஏழு ஊருக்கு மணக்கும். தின்கின்ற பொருளை, இவர்களுக்கு என எடுத்து வைத்துவிட்டால், அவர்களிடம் கொடுத்து ரகசியமாக, அவர்கள் தின்பதை ஆசையோடு பார்த்து ரசிப்பாள். எல்லாவிதமான பதார்த்தையும் ருசி பார்க்காமல் சமைப்பாள். ஒரு வில்லல் கூடத் தன் வாய்க்குப் போகாது. எனக்கும், இப்பழக்கம் பிடித்துத் தொற்றிக் கொண்டது. அரிசியில் அவரவர் பெயர் எழுதியிருக்கும் என்று ரொம்ப நாள் கழித்துப் புரிந்து கொண்டேன்.

ஒருமுறை என் தங்கைக்குக் காய்ச்சல் . அப்பொழுதெல்லாம் ஆசாரம்தான் பெரிதாக இருந்தது. அவள் ஆத்திற்கு வெளியில். காய்ச்சல் வேறு, தனியாக ஓர் அறையில், அனத்தல் சப்தம் பொறுக்க முடியாமல் அத்தை அவள் அருகில் சென்று மூன்று நாட்களும் அவள் கூடவே இருந்து தலைக்குப் பச்சைத்தண்ணீரில் குளித்து, ஆசாரத்தை வெறுத்த என் தங்கைக்கு அதனை எடுத்துரைத்து, ஆனாலும் அதனை உடைக்காமல், அவளை வீட்டிற்குள்ளோ,பெட்டில் படுக்கலாம் என்றோ, சலுகை காட்டாமல், தியாகச் செம்மல் தான் அவள். தானும் சாப்பிடாமல், என்ன செய்தாலும் தன் ஆச்சாரத்தில் இருந்து வழுவியதில்லை. தலைவலி என்று ஒரு நாள் கூடச் சொன்னதில்லை... சோர்விலாள் பெண்.. உண்மைதான்.

மதியம் இரண்டரை மணியிலிருந்து மூன்றரை மணி வரை தூங்கும் நேரம் அவளுக்கு. எனக்குப் பள்ளி விடுமுறை என்றால், அந்த நேரத்தில் அவளிடம் கேட்பேன், நீ இங்கேயே இருக்கிறாயே உனக்குக் கல்யாணம் ஆகிவிட்டது என்று அப்பா சொன்னாரே, அவர் எப்படி இருப்பார் உனக்கு அவரைப் பிடிக்குமா? நான்தான் நிறைய தடவை கேள்விகள் கேட்டிருக்கேனே தவிர, பதிலைச் சொன்னதாக ஞாபகமே இல்லை. எங்களுக்கு அத்தை மட்டுமே தெரியும். தன் அந்தரங்கத்தை யாரிடமும் வெளிக்காட்டியதில்லை. அதற்காக ஐயோ பாவம் வாங்கியதும் இல்லை. இது, என்னைச் சின்ன வயதில் பாதித்தது. இப்பவும் நானாக யாரிடமும் அவர்களைப் பற்றி கேட்கவும் மாட்டேன் என்னைப் பற்றிச் சொல்வதையும் விரும்ப மாட்டேன். எதற்காகவும் அடுத்தவர்கிட்டே ஐயோ பாவமாக நிற்க வைக்கவில்லை ஆண்டவன் என்னையும் .இறைவனுக்கு நன்றி



எல்லா குழந்தைகளும் வீட்டில் தான் பிரசவம். பெரியம்மா, அக்கா, பக்கத்துவீடு அத்தை இல்லாமல் நடக்காது. அவளை யாருமே தள்ளி நில்லு என்று சொன்னதே இல்லை . எல்லாரிடமும் அந்த அளவு அன்பு. கருப்பு,சிவப்பு, குண்டு, ஒல்லி,ஆண், பெண்,இப்படி எந்தக் குழந்தையாக இருந்தாலும் குழந்தையாகவே பாவிக்கும் அவளது மனநிலை.

எல்லாரிடத்திலும் கோபப்படாமல், என் வாழ்வில், நான் அன்புடையவளாக ஆக்கியது அவளது சுபாவம்.

ஒரு சமயம் அத்தை, தன் தங்கை, அக்காவைப் பற்றிக் கூறும் போது நம் பிறவி ஒருதடவைதான், வீம்பு, வீராப்பு வேண்டாம் என்பாள். எத்தனையோ உணவுசெரிக்கிறது, ஒரு வார்த்தை செரிக்காதா என்பாள். காரியம் பெரிதா வீரியம் பெரிதா, அதற்கு அவளே பதில் சொல்வாள் காரியம் தான். இது, எனக்கு மிகப் பெரும் வார்த்தைகளாய்ப் பட்டது. என் வாழ்வின் உச்சம் தொட்ட போது, என் அப்பாவின் சுமைகளை நெஞ்சில் சுமந்தேன். இறக்கி வைக்க உதவினேன்.

குழந்தைகளைப் பராமரிக்கும் அழகே தனி. மரணத்தையும், ஜனனத்தையும் சமமாகப் பார்த்தாள். மரணம் வந்த பின் அங்கு ஒரு ஜனனம் என்றால், மரணத்தின் வலியை வெளிக்காட்டாமல் ஜனித்த உயிருடன் உறவாடுவாள். எந்த ஒரு காரியத்தையும் பெரிதாகக் கொண்டாட மாட்டாள். மற்றவர் வாழ்க்கையை வெளியில் நின்று ரசிக்கும்ஒரு உன்னதமான உயிர் . அவள் மட்டும் அவர்களுக்குள் நிறைவாள். தனக்கென்று ஒரு வாரிசும் இல்லை. ஆனாலும் அவள் இறக்கும் வரை, அதைப் பற்றிய சிந்தனை இல்லை.

நாங்களும், அவளுக்கு கடைசி வரையிலும் செய்தோம். அவள் இறப்புக்கு மட்டும் சொந்தங்களே நூறு எட்டியது. அவ்வூரே வியந்தது.

புதிதாக வந்த மருமகள் ஆகட்டும், மருமகனாகட்டும் இவளது அன்பில் அகப்படாமல் தப்ப முடியாது. யாரிடமும் எதையும் எதிர்ப்பார்க்கமாட்டாள். ஆட்கள் சிலரைப் பிடிக்கவில்லை என்றாலும் கடமையைச் செய்யாமல் விட மாட்டாள். இவளிடமிருந்து எல்லாரும் கற்றார்கள் என்றாலும், கடைசி காலம் வரை என்னுடன் இருந்தாள். கடைசி இரண்டு வருடங்கள் அம்மா பராமரிப்பில், இறப்பதற்கு ஒரு வாரம் முன்பிலிருந்து நான் கூடவே இருந்தேன்.

பொறுமை, நம் வாழ்க்கையையே வெளிநின்று பார்த்தல், யாரிடமும் எதையும் எதிர்பாராதல், பெரிய காரியங்கள் நடக்கும் போது சின்ன சின்ன விவாதங்களைப் பெரிது படுத்தாமல்... இன்னும் எழுதுவதற்கு உண்டு.. அவளுடைய வீரம்.. ஒருமுறை ஒருவர் மரணம் அடைந்த போது பத்தாம் நாள் காரியம் ஆரம்பிக்க, இன்னொருவர், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், அது முடிந்தவுடன் இச்சாவைப் பற்றி சொன்னாராம்.

அவள் ஸ்ரீசூர்ணம் இடும் போதெல்லாம் ஒரு ரசம் போன கண்ணாடியை உபயோகிப்பாள். போட்டாவில் அழகாகத் தெரிவாள். ஒரு நாள் கண்ணாடி வைத்த பீரோ வாங்கி, அதனைப் பார்க்க அத்தையைக் கூப்பிட்டோம். அப்போது தன் முகத்தைப் பார்த்து, காலம் எத்தனை கோலங்களைக் கொடுத்துள்ளது. என் முகத்தில் தான் எத்தனை கோடுகள், கண்கள் உள்ளே போய், கிழடு தட்டி விட்டது என்றாள். அப்போது அவளுக்கு வயது எண்பது இருக்கும்.

அவள் ஒரு சாதனைப் பெண்மணியோ இல்லையோ.. எங்கள் உறவில் ... எத்தனையோ மனங்களில் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருக்கிறாள் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.. அவளது பெயர் அவளைப் போலவே பொன்னம்மாள்...

# மீம்ஸ்







# எனக்கு செல்லிடபேசி வேண்டாம்



சமீபத்தில் ஒரு பெற்றோரிம் பேசிக் கொண்டிருந்தேன். என் பையன் எப்போதும் வீட்டில் செல்லிடபேசி பார்கிறான். சமூக வலைதளம் ரீல் ஸ் என பார்கிறான் அவனை கட்டுபடுத்த முடியவில்லை. கொடுக்கவில்லை என்றால் அழுகிறான். பிடிங்கிக் கொண்டால் கோபித்துக் கொள்கிறான் என்ன செய்வதென்றே தெரியவில்லை என்றார்.

இது உங்கள் பிரச்சனை மட்டு மல்ல பெரும்பான வீடுகளில் இதுதான் நிலைமை. இதிலிருந்து மீட்பது அல்லது மடை மாற்றுவது அவசியம் தான்.

குழந்தைகளுக்கு விளையாட்டு எப்போதும் பிடித்தமானது. எனவே வீட்டிலும் சரி வீதியில் பள்ளிக்கூடத்தில் உடலியக் க விளையாட்டை விளையாட வேண்டும். கவனத்தை விளையாட்டில் செலுத்தினால் செல்லிட பேசி மீது கவனம் குறையும். வீட்டில் சதுரங்கம் கேரம் போன்ற விளையாட்டை பெற்றோருடன் விளையாடலாம்.

இன்னொன்று குழந்தைகள் பார்பதை அப்படியே செய்வார்கள். வீட்டில் பெற்றோரும் வீட்டில் உள்ளவர்களும் என்ன செய்கிறார்களோ அதை செய்வார்கள் . அதனால் அவர்கள் கண்ணுக்கு தெரியும்படி புத்தகங்களை பரப்பி வைக்க வேண்டும். முதலில் படங்களை பார்ப்பார்கள். பின்பு படிக்க தொடங்குவார்கள். புத்தத்தின் மீது கவனம் செலுத்தினால் செல்லிட பேசி கவனம் குறையும்.

சிறுவர்களை செய்தித்தாளும் படிக்க வைக்க வேண்டும் அப்போது அன்றாட நிகழ்வுகள் மீதும் அதில் வரும் சிறுவர் பகுதி பார்த்து அவர்களும் ஓவியம் கதை எழுத பழகுவார்கள் கவனத்தை திசை திருப்பலாம்.

அப்படியே அவர்களுக்கு மிதிவண்டி ஓட்டி கற்றுத்தர வேண்டும். அப்போது பள்ளியிலிருந்து வந்து விட்டால் மிதிவண்டி மீது கவனம் வரும். ஓட்டுவார்கள் உடற்பயிற்சியாகவும் இருக்கும்.

குழந்தைகளை அக்கம் பக்கம் வீட்டு குழந்தைகளிடம் சிறிது நேரம் விளையாட விடலாம் நொண்டி ஓடி விளையாட்டு தொடு விளையாட்டு விளையாடும் போது விட்டுக் கொடுத்தல் போட்டியிட்டு வெற்றி பெறுதல் போன்ற பண்பு மட்டுமல்ல செல்லிட பேசி மீது கவனம் குறையும்.

பெற்றார்களும் தொடர்ந்து உரையாட வேண்டும்.

அவர்களுக்கு இசை கலைகள் மீது விருப்பத்தை கொண்டு வர வேண்டும். படிப்பதிலும் தினந்தோறும் அவர்களுக்கு துணை புரிய வேண்டும். அவர்களின் கவனத்தை திசை திருப்ப வேண்டும்

குறிப்பாக விடுமுறை தினங்களில் விளையாட்டு மைதானம் நூலகங்களுக்கு அழைத்துக் சென்று கவனத்தை நல்ல பாதையில் கொண்டு சென்றால் நல்ல பாதையில் குழந்தைகள் செல்வார்கள். குழந்தைகள் நல்ல எண்ணங்களோடும் நல்ல பண்புகளோடும் வாழ்வதற்கான சூழலை ஆசிரியர்கள் பெற்றோர்கள் சமூகம் என அனைவரும் இணைந்து ஏற்படுத்தினால் மிச்சிறந்த மனிதர்கள் . உருவாகுவார்கள். அனைவரும் இணைத்து சிறுவர்களை நல்லவர்களாக உருவாக்குவோம்.


# விடுகதை






| | |
|---|---|
| அடித்தால் விலகாது, அணைத்தால் நிற்காது. அது என்ன? | தண்ணீர் |
| நடக்கத் தெரியாதவன், நட்டுவனுக்கு வழி காட்டுகிறான் அவன் யார்? | கைகாட்டி |
| தலையில் கீரீடம் வைத்த தங்கப்பழம் அது என்ன? | அன்னாசிப்பழம் |
| ராஜா, ராணி உண்டு நாடு அல்ல. இலைகள் பல உண்டு, தாவரம் இல்லை! அது என்ன? | காட்ஸ் |
| கந்தல் துணிக்காறி முத்துப் பிள்ளைகள் பெற்றாள் அவள் யார்? | சோளப்பொத்தி |
| மூன்றெழுத்துப் பெயராகும். முற்றும் வெள்ளை நிறமாகும் அது என்ன? | பஞ்சு |

# ஜோக்ஸ்





**தத்துவம்**

ஏழு பரம்பரைக்கு உட்கார்ந்து சாப்பிடுற அளவுக்கு சொத்து இருந்தாலும் பாஸ்ட் புட்க்கு போனா நின்று தான் சாப்பிடணும்.

------------------------------------------------------------------

**தோழிகள் இருவர் பேசிக் கொள்கிறார்கள்**

ராதா: நேத்து உன் லவ்வரை பார்க்க கூஷநநஉh-க்கு போறதா சொன்னியே! என்ன ஆச்சு?

கீதா: அட! அத ஏண்டி கேக்குறா? வாத்தியாரை லவ் பண்ணது தப்பா போச்சு!

ராதா: ஏன்! என்ன ஆச்சு?

கீதா: கொஞ்ச நேரம் லேட்டா போனேன். அதுக்காக படகு மேல ஏறி நிற்க சொல்லிட்டாருடி!

ராதா: ஹா! ஹா! ஹா!

----------------------------------------------------

**முத்தம்**

கணவன்: டார்லிங்! நான் இந்த மாச சம்பளத்துக்கு பதிலா 500 முத்தம் தரலாம்-னு நினைக்கிறேன். என்ன டிம தானே?

மனைவி: எனக்கொன்னும் பிரச்சினை இல்லை. நானும் அப்படியே கேபிள் காரனுக்கு 30 முத்தம், பால்காரனுக்கு 50 முத்தம், பேப்பர் காரனுக்கு 20 முத்தம், மளிகை கடைகாரனுக்கு 150 முத்தம். அவுஸ் ஓனருக்கு 250 முத்தம் கொடுத்துடுறேன் என்ன? ஓ.கே. தானே?

கணவன்: ???

----------------------------------------------------

**தொலைக்காட்சி விளம்பரம்**

வரும் சனிக்கிழமை இரவு பத்து மணிக்கு... உங்கள் அபிமான தொலைக்காட்சியில்... அற்புதமான ஹாலிவுட் திரைப்படம்... தமிழில்

சிலந்தி அண்ணாச்சி (Spiderman)

உங்களின் விடுமுறை நாளை குதூகலமாக கொண்டாட ஞாயிற்றுகிழமை மதியம் 2 மணிக்கு

சூப்பர்ஹிட் ஹாலிவுட் திரைப்படம்

"அம்மாச்சி திரும்ப வந்தாச்சு" (Mummy Returns)

முற்றிலும் தமிழில்... காணத்தவறாதீர்கள்!!!

# தெய்வீக அருள் தரும் ஆன்மிகம்

## நாகலீலா

நாகலீலா என்பது ஶ்ரீகிருஷ்ணரின் அபூர்வமான திவ்ய லீலைகளில் ஒன்று. யமுனை நதியில் விஷ மூட்டிய நாகராகனான காளியா வாழ்ந்து வந்தான். அந்த விஷத்தால் மனிதர்களும் மிருகங்களும் பெரிதும் துன்பப்பட்டனர். மக்கள் வேண்டிக்கேட்டு, அப்பாவியான பாலகக் கிருஷ்ணன் அந்த நதிக்குள் இறங்கி, காளியனை அடக்கி உலகை காத்தார்.

ஶ்ரீகிருஷ்ணரின் காளிய மர்த்தன லீலையை அழகாகச் சொல்வது.

கோபாலகிருஷ்ணர் அதிகாலை நேரத்தில் யமுனை நதிக்குச் செல்கிறார். அங்கு விஷ நாகராஜன் காளியன் தன் விஷ சக்தியால் நதியையே கொடியதாக மாற்றி வாழ்ந்து வருகிறான்.

கிருஷ்ணன் நாகராஜனின் வாசஸ்தலத்திற்கு செல்வதைக் கண்டு, நாகினி அவனை எச்சரிக்கிறாள்:

"இது ஆபத்தான இடம், என் கணவன் விழித்தால் உன்னை கொன்று விடுவான்."

அவள் கிருஷ்ணனின் அழகைக் கண்டு கருணை கொண்டு, ஆபரணங்களையும் செல்வங்களையும் கொடுத்து

"இவற்றை எடுத்துக்கொண்டு போய் விடு"

என்று வேண்டுகிறாள்.

ஆனால் கிருஷ்ணன்:

"நான் நந்தகோபனின் மகன். பயப்பட நான் வந்ததில்லை,"

என்று பதில் அளிக்கிறார்.

நாகினி பூஜை செய்து காளியனை எழுப்புகிறாள்.

காளியன் கிருஷ்ணனைத் தாக்க முயன்றாலும், கிருஷ்ணன் அவன் பலம், விஷம், அகம்பாவத்தைக் களைந்து, அவன் பல உடல்களின்மேலும் தெய்வீக நடனம் ஆடி அவனை அடக்குகிறார்.

காளியன் தோற்றவுடன், அவனும் அவன் மனைவியும் கருணைக்காக கிருஷ்ணரிடம் சரணடைந்து விடுதலை பெறுகின்றனர்.

பாடலின் இறுதியில் பரமாத்மாவின் லீலைகளைப் புகழ்கிறது:

ராவணனை அழித்தவர்
காளியனை அடக்கியவர்
கம்சனை வீழ்த்தியவர்
உலகை காக்கப் பிறந்தவர்

முடிவில்:

"சூரதாஸ் உன் புகழைப் பாடுகிறார்;
நானும் உன் திருவடியில் சரணடைந்துள்ளேன்"

என்று பக்தி நிறைந்த முடிவை வழங்குகிறது.



## சுந்தர காண்டத்தின் மகிமை

வாழ்க்கையில் பிரச்சனைகள், மனச்சோர்வு, துக்கம் போன்றவை வந்தால், சுந்தர காண்ட பாராயணம் செய்வதால் அவை விலகும் என நம்பப்படுகிறது. இதனை மனம் ஒன்றியபடி படிப்பது பாராயணம் எனப்படுகிறது. சுந்தர காண்டம் முழுவதையும் படிப்பது ராமாயணத்தை முழுமையாக படிப்பதற்குச் சமம் என கூறப்படுகிறது.


வால்மீகி எழுதிய சுலோகங்களை சமஸ்கிருதத்தில் படிப்பதே வழக்கம். ஆனால் சமஸ்கிருதம் அறியாதோர் தமிழ் எழுத்தில் அவற்றை வாசித்தாலும் அதே பலன் கிடைக்கும் என்று நம் முன்னோர் கூறியுள்ளனர்.

சுந்தர காண்டத்தில் அனுமனின் பயணம்

அனுமன் சீதையை தேடி இலங்கைக்கு செல்கிறார். பல தடைகள், சோதனைகள், சுரசை, சிம்ஹிகை போன்றவற்றை எதிர்கொண்டு, இறுதியில் சீதையைக் காண்கிறார். அவளிடம் ராமனின் செய்தியை தெரிவித்து, தைரியம் அளிக்கிறார். பின்னர் ராவணனிடம் ராமரின் தூதராக சென்று பேசுகிறார். அவரது வாலில் தீ வைத்தபின், இலங்கையை தீயால் சூழ்ந்துவிட்டு, திரும்பி ராமனிடம் சீதையைக் கண்டதாகச் சொல்லுகிறார். இதுவே சுந்தர காண்டத்தின் மையப் பகுதி.

ஏன் "சுந்தர காண்டம்" என்று பெயர்?

ராமாயணத்தில் எந்த காண்டத்திற்கும் கதாநாயகனின் பெயர் இல்லை. ஆனால் வால்மீகி அனுமனின் பெருமைமிகு செயல்களை நினைத்து, அவரின் பெயரில் ஒரு பகுதி இருக்கவேண்டும் என விரும்பினார். அதற்கு அனுமன் தாழ்மையுடன் மறுத்ததால், வால்மீகி அவரது அன்னை அஞ்சனை அழைத்த பெயரான "சுந்தரா" என்ற பெயரிலிருந்து "சுந்தர காண்டம்" என வைத்தார்.



"சுந்தரம்" என்றால் அழகு என்பதோடு, அது "அரசனின் தூது" என்பதையும் குறிக்கும். அனுமன் ராமனின் தூதராகச் செயல்பட்டதாலே அந்தப் பெயர் சிறந்தது.

வால்மீகி மற்றும் அனுமனின் நன்றிக்கடன்

வனவாசம் முடிந்த பிறகு, வால்மீகி இமயமலையில் நடந்தபோது பாறைகளில் அழகாக எழுதப்பட்ட ராமாயணத்தின் சில பகுதிகளை கண்டார். அவை தமது எழுத்துகளை விட நயமானதாக இருந்ததால் ஆச்சரியப்பட்டார். அதை எழுதியவர் அனுமன் என அறிந்தார்.

அனுமன், "இது எனது ராமாயணம். ராமரை சந்தித்தது முதல் பட்டாபிஷேகம் வரை நான் அனுபவித்த நிகழ்ச்சிகள் இதிலுள்ளது" என்றார்.

அதனை வாசித்த வால்மீகி, "உன் எழுத்து என் காவியத்தை மிஞ்சிவிடும்" எனக் கூறியபோது, அனுமன் உடனே தன் எழுதியதை வாலால் அழித்துவிட்டார். இதைக் கண்ட வால்மீகி மிகுந்த உணர்ச்சியடைந்தார்.

அனுமனின் அந்த தியாகத்திற்கும், தன்னுடைய நன்றிக்கடனுக்கும் நினைவாக வால்மீகி, அந்தப் பகுதியை சுந்தர காண்டம் எனப் பெயரிட்டார்.


சுந்தர காண்டம் பாராயணத்தின் பலன்கள்

சுந்தர காண்டம் பாராயணம் செய்யும் ஒருவர்:

துன்பங்களில் இருந்து விடுபடுவர்
மன உறுதி, நம்பிக்கை, அமைதி கிடைக்கும்
ஆரோக்கியம், துணிச்சல், வெற்றி, திருமண வாழ்வு ஆகியவை சிறக்கும்
ஶ்ரீ ராமர் கூறியபடி,
"சுந்தர காண்டம் பாராயணம் செய்பவரை தீமை அண்டாது, நன்மை நிலைத்திருக்கும்" என அருளப்பெற்றது.

## பாகவத நாமம்

ஒரு புனித குரு மூலமாகத்தான் நாம் கடவுளை அணுக வேண்டும் என்று கடவுளே விரும்புகிறார். பகவான் கிருஷ்ணர் தனது பகவத் கீதையில் கூறியபடி, "அசுரர்களில் நான் வலிமையான பிரகலாதன். அவரை யார் வணங்குகிறார்களோ, அவர் எனது சிறந்த பக்தராக கருதப்படலாம்". அதுபோலவே முனிவர்களின் உள்ளத்தில் இறைவன் வாசம் செய்கிறான். முனிவர்கள் பெரும் சக்திகளைக் கொண்டுள்ளனர், மேலும் மகா ஶ்ரீ விஸ்வாமித்திர முனிவர் தனது ஆன்மீக சக்திகளால் தனது பக்தனான திரிசங்குவுக்கு ஒரு தனி சொர்க்கத்தையே உருவாக்கினார்.



பாகவதர்கள், கடவுளின் உண்மையான பக்தர்கள், அவர்கள் தங்கள் வாழ்க்கையை பக்தியுடனும் உன்னத முறையிலும் வாழ்ந்தனர். அவர்களின் நாவு எப்போதும் கடவுளின் மகிமைகளையே உச்சரிக்கும், அவர்கள் நல்லதும் கெட்டதும் சமமாகக் கருதினர், மேலும் தங்கள் வாழ்க்கையில் எந்த வகையான சவால்களையும் எதிர்கொள்ளும் மன உறுதியைக் கொண்டிருந்தார்கள்.

தெய்வ பக்தியால் மட்டுமே இதைப் பெற்ற அவர்கள், வாழ்க்கையில் பல இன்னல்களை எதிர்கொண்டும் நிம்மதியாக வாழ முடிந்தது. ஆனால் தற்சமயம் சில நிமிடங்கள் மட்டுமே இறைவனை வழிபட்டால் நம் வேண்டுதல்கள் அனைத்தும் நிறைவேறும் என எதிர்பார்க்கிறோம். ஆனால் பாகவதர்கள் தங்களுக்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்வதில்லை, உலகிலுள்ள உயிர்களின் நலனுக்காக மட்டுமே இறைவனிடம் பிரார்த்தனை செய்து வந்தனர்.

"ஓம் ஶ்ரீ பக்த பிரகலாதாய நமஹ" என்ற மந்திரத்தை பல ஆண்டுகளாக உச்சரித்து வருகிறேன், அதன் காரணமாக, பிரகலாதனின் அவதாரமான குரு ராகவேந்திரரின் அருளால் எப்படியோ என் வாழ்க்கையை நகர்த்த முடிகிறது. எனவே பாகவதர்களிடம் பக்தியை அதிகப்படுத்தி, அவர்களின் நாமங்களை வாழ்நாள் முழுவதும் உச்சரித்துக் கொண்டே இருப்போம், இதனால் ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கை நமக்கு கிடைக்கும்.

## மகான்களின் பொன்மொழிகள்

**ரமண மகரிஷி அவர்களின் போதனைகள்**

அருளின் உயர்ந்த வடிவம் மௌனம். வலிமையற்ற மனம் படைத்தவர்களால் மௌனமாக இருக்க முடியாது. "நான் யார்?" என்று உங்களையே கேளுங்கள். பதிலைத் உங்களுக்குள்ளேயே தேடுங்கள். இதுவே பிறவியைத் தவிர்க்கும் வழி. குப்பையை ஆராய்வதால் பயனில்லை. அதுபோல, பிரபஞ்சத்தை ஆராய்ந்தாலும் பயனில்லை. நமக்குள் இருந்து இயக்கும் ஆண்டவனைத் தேடுங்கள். இறைவன் நமக்குள் இருக்கிறான் என்று உணர்ந்தவர்கள் தவறு செய்வதில்லை. செய்தாலும் வருந்தி திருத்திக் கொள்வார்கள். அகந்தை இருக்கும் இடத்தில் ஆண்டவன் ஒரு நொடிகூட இருக்க மாட்டான். "நான்", "எனது" என்று எண்ணுபவர்கள் இறைவனை அடையவே முடியாது. ரயில் ஓடும்போது சுமையை நாம் தூக்க வேண்டியதில்லை. அதுபோல, ஆண்டவனிடம் நம்மை ஒப்படைத்தபின் உலகியல் பிரச்சனைகள் நம்மைத் தீண்டாது. அரைகுறையாக ஆண்டவனை நம்புவதால் பயனில்லை. முழுமையான சரணாகதி அடைந்தால் மட்டுமே அவன் பார்வை நம்மீது விழும்.

**காஞ்சிப் பெரியவரின் அருள்மொழிகள்**

உபநிடதம் நம்மை குழந்தையாக இருக்கச் சொல்கிறது. குழந்தையின் மனதில் கள்ளம் கபடம் இல்லை. தேவைகளை அதிகரிப்பதால் திருப்தி பெற முடியாது. தேவையானதை மட்டும் வாங்குவது நல்லது. மனம் எதை தீவிரமாக நினைக்கிறதோ அதுவாகவே மாறும். அதனால் தூய்மையான, உயர்ந்த சிந்தனைகளை மட்டும் நினையுங்கள். எடுத்துச் சொல்வதை விட, எடுத்துக்காட்டாக வாழ்வதே அதிக சக்தி வாய்ந்தது. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் கடவுளே இருக்கிறார். ஒருவரை வணங்கும்போது அவருக்குள் இருக்கும் கடவுளையே வழிபடுகிறோம். சுவரில் எறிந்த பந்து திரும்பி வருவது போல, நிறைவேறாத ஆசைகள் கோபமாகத் திரும்பி நம்மைத் தாக்கும். ஓடி ஓடி சம்பாதித்தாலும் மறுபிறவிக்கு அவை துணை வராது. நியாயமான வழியில் பொருள் தேடி தேவைகளை நிறைவேற்றி மகிழுங்கள். பொம்மலாட்டப் பொம்மை போல சகல உயிர்களுக்கும் உள்ளிருந்து கடவுளே அவற்றை ஆட்டி வைக்கிறார். வழியில் கிடக்கும் முள்ளையோ, கண்ணாடியையோ அகற்ற பணம் தேவையில்லை. சிறிய உதவிகளை யார் வேண்டுமானாலும் செய்யலாம்.



**வேதாத்திரி மகரிஷியின் வழிகாட்டுதல்**

எல்லோருக்கும் நன்மை உண்டாக வேண்டும் என்று எண்ணுவதே நல்லவர்களின் குணம். உள்ளதைச் சொல்லுங்கள், நல்லதை எண்ணுங்கள், நல்லதைச் செய்யுங்கள், நல்லவனாகவே வாழுங்கள். மனிதன் முழுமை பெற பரம்பொருளோடு ஒன்றுவதே வழி. நல்ல பண்புகளை படிப்படியாகத்தான் பழக முடியும். ஒரே நாளில் எதையும் கற்றுவிட முடியாது. மனத்தூய்மை, சத்துள்ள உணவு, அளவான உழைப்பு, முறையான ஓய்வு நல்வாழ்க்கைக்கு அடிப்படை. துன்பம் இல்லாத மகிழ்ச்சியை மட்டுமே பெற நினைக்கிறோம். ஆனால் அதற்கான வழிகளை அறிவதில்லை. கோபமின்றி வாழ்வதே உயர் வாழ்வின் அடிப்படை குணம். சினமில்லாதவன் ஞானப் பாதையில் பயணிக்கத் தொடங்குவான்.

**குரு மகராஜ் ஶ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் உபதேசங்கள்**

இறைவனே உலகம் என்ற நம்பிக்கை உறுதியானால் எல்லா பிரச்சனைகளும் தீரும். எவன் இறைவனைக் காண ஏங்கி அழுகிறானோ அவன் மீது இறைவனின் கருணை விழும். உலக இன்பங்களில் மயங்குபவன் எந்தப் பிறவியிலும் இறைவனை அடைய முடியாது. பணத்தின் மீதான மோகம் பைத்தியமாக்கும். காமம் இறைவனிடமிருந்து பிரிக்கும். படிப்பதைக் காட்டிலும் கேள்வி ஞானம் உயர்ந்தது. கேட்பதை விட நேரில் காண்பது சிறந்தது. இறைக்காட்சி கிடைத்த பின்பே அறியாமை அகலும். மன வலிமை படைத்தவர்களால் மட்டுமே உலக ஆசைகளைத் துறக்க முடியும். கடவுள் நமக்கு முதலாளி, நாம் அவர் வேலைக்காரர்கள். அவருக்கு பணிவிடை செய்வதே பிறவிப்பயன். மனித வாழ்வின் சாரமே பக்தி. பக்தி இல்லாத வாழ்வு அர்த்தமற்றது. நீங்கள் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யுங்கள். அதே நேரத்தில் மனதை ஆண்டவனிடம் வையுங்கள்.

## பால் அபிஷேகம்: புனிதமான பாரம்பரியத்தின் அரிய அனுபவம்

இறைவனின் அருளால் நம் வாழ்வு அழகாக அமைய வேண்டுமானால், அவரது திருவடிகளைப் பின்பற்றுவதோடு மட்டுமல்லாமல், அவருக்கு அர்ப்பணிக்கப்படும் சிறு சிறு சடங்குகளிலும் மனதை ஈடுபடுத்த வேண்டும். அத்தகைய புனிதமான சடங்குகளில் ஒன்றே பால் அபிஷேகம். இது வெறும் வழிபாட்டின் ஒரு பகுதியல்ல; இறைவனின் குளிர்ச்சியான அருளை நம் மனதில் ஊற்றும் தெய்வீகமான அனுபவம். பசுவின் தூய பாலால் செய்யப்படும் இந்த அபிஷேகம், கோடி ஜென்மங்களின் பாவங்களையும் துடைத்தெறியும் சக்தி கொண்டது. ஆனால், இதைச் செய்வது அவ்வளவு எளிதானதா? சிந்தித்துப் பாருங்கள்!

பால் அபிஷேகத்தின் சரியான நடைமுறை: தூய்மையும் பக்தியும் முதன்மை

இன்றைய வேகமான வாழ்க்கையில், பலர் பால் அபிஷேகத்தை எளிய சடங்காகவே கருதுகின்றனர். ஆனால் இது குறிப்பிட்ட பாரம்பரியத்துடன் இணைந்து செய்யப்பட வேண்டிய புனித செயல். ஒரு கன்றுள்ள, நன்கு பராமரிக்கப்பட்ட பசுவைத் தேர்ந்தெடுத்து, வெள்ளிக்கிழமைகளில் கோபூஜை செய்வது அவசியம்.

அதிகாலையில் எழுந்து, காலைக்கடன்களை முடித்து, குளித்து, மதச் சின்னங்களை அணிந்து, தூய சிந்தனைகளுடன் பசுவுக்கு வாழைப்பழம் அல்லது புல், வைக்கோல் போன்றவற்றை அர்ப்பணிக்க வேண்டும்.

பின்னர், கன்றை முதலில் தாய்ப்பசுவின் பாலை குடிக்க அனுமதிக்க வேண்டும். பசு அதை நக்கத் தொடங்கும் போது, கன்றை முன்புறமாகக் கட்டி, தூய்மையான பாத்திரத்தில் மெதுவாக பாலை கறக்க வேண்டும் இயந்திரத்தில் கறப்பது போல அல்ல! கன்றுக்கு மீண்டும் சிறிது பால் குடிக்க வழிவகுத்து, அரைமணி நேரத்திற்குள் அந்தப் பாலால் இறைவனுக்கு அபிஷேகம் செய்ய வேண்டும்.

இந்த சடங்கில் ஒரே ஒரு பசுவின் பாலே பயன்படுத்தப்படுகிறது. இவ்விதமாக செய்யப்படும் பால் அபிஷேகம்தான் உண்மையானதும் பலனும் மிகுந்ததும். இதைச் செய்ய முடியாதவர்களுக்கு கூட அதை காண்பதே புனிதமான பாக்கியம் அது இப்பிறவி பாவங்களையும் துடைக்கும் என்று நம்பப்படுகிறது.

பால்குடம் எடுத்தல்: மனதின் தூய்மையும் வெற்றியின் வழி

அம்மன் அல்லது முருகன் கோவில்களில் விசேஷ நாட்களில் பக்தர்கள் பால்குடம் எடுத்துச் செல்வது வழக்கம். இதன் சாரம் என்ன? மனதை ஒருநிலைப்படுத்தி, முழு பக்தியுடன் இறைவனைச் சிந்திப்பதே.



பால் வெள்ளை நிறமுடையது என்பதால், வெள்ளை மனம் தூய மனம் என்பதைக் குறிக்கிறது. இறைவனைப் பாலால் குளிர்வித்து அர்ச்சனை செய்தால், அவரது அருளும் நம் மனதை குளிர்த்தி, நினைத்த காரியங்கள் நிறைவேற உதவும். மனிதர்கள் எல்லாம் நம்பிக்கையாலேயே வாழ்கின்றோம். தன்னம்பிக்கையும் தெய்வநம்பிக்கையும் ஒன்றாக இணையும் இடமே பால்குடம் எடுத்தல் என்ற வழிபாடு. தம்மை மறந்து ஆலயத்தை நோக்கிச் செல்லும் அந்தப் பயணம் தான் உண்மையான ஆன்மிக அனுபவம்.

பால் அபிஷேகத்தின் பலன்கள்: ஏழு சமுத்திரங்களின் அருள்

இந்து சமயத்தில் ஒவ்வொரு அபிஷேகத்திற்கும் தனித்தனி பலன்கள் உள்ளன.

பால் அபிஷேகம் — நீண்டாயுள்
தயிர் அபிஷேகம் — புத்திரபாக்யம்
நெய் அபிஷேகம் — மோட்சம்
பஞ்சகவ்ய அபிஷேகம் — ஆன்மீக வளர்ச்சி

புராணங்களின்படி, பசுவின் முலைகளில் ஏழு சமுத்திரங்களின் தத்துவம் இருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே பசுப்பாலால் செய்யப்படும் அபிஷேகம், இறைவனை ஏழு சமுத்திரங்களால் அலங்கரிப்பதற்குச் சமமானது. இது உடல் வழிபாடு மட்டுமல்ல; ஆன்மாவின் உயர்வுக்கான பாதை.

திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் கோவிலில் நடைபெறும் பால் அபிஷேகம் பற்றி பெரியவர்களிடமிருந்து பல அரிய அனுபவங்களை நான் கேட்டுள்ளேன். அப்போது கோவில் இன்றுள்ள அளவுக்கு கூட்டம் இல்லாமல், சோமவார அபிஷேகதினங்களில் 50-60 பக்தர்கள் மட்டுமே சாட்சியாய் இருந்ததாக அவர்கள் பகிர்ந்தனர். அந்த அமைதியான சூழலும், இரவு பாயச நிவேதனத்தின் பவித்திரமும், பக்தர்களின் மனதில் ஆழமான ஆன்மிக அனுபவத்தை உருவாக்கியதாகக் கூறப்படுகிறது.

இன்று, பெரிய கோவில்களில் மட்டுமே பால் அபிஷேகம் தினசரி நடைபெறுகிறது; மற்ற கோவில்களில் விசேஷ நாட்களில் மட்டும் அனுசரிக்கப்படுகிறது. உண்மையில், இந்தப் பாக்கியம் கிடைப்பது சிலருக்கே — அதைக் காண்பதே கூட ஒரு அரிய அருளாகவே கருதப்படுகிறது.

சிந்தனைக்கு ஒரு அழைப்பு

இந்தக் காலத்தில் பல புதிய கட்டுப்பாடுகள், பாதுகாப்பு விதிகள் இருந்தாலும், பால் அபிஷேகத்தின் புனிதத்தை நாம் இழக்கக் கூடாது. நீங்கள் செய்ய முடியாவிட்டால் கூட, அதை காண்பதற்கே முயற்சியுங்கள் அதிலும் இறைவனின் அருள் நிறைந்துள்ளது.

நம் வாழ்வில் இத்தகைய பாரம்பரியங்களைத் தொடர்ந்து, பக்தியுடன் வாழுங்கள். இறைவன் அருள் என்றென்றும் உங்களை வழிநடத்தும்!

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## விஷேச திருமஞ்சனம்..!



**வந்தவாசி, பிப். 06:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தென்னாங்கூர் ஸ்ரீ பாண்டுரங்கன் ருக்மாயி திருக்கோயிலில் நேற்று வியாழக்கிழமை குருவாரம் விஷேச திருமஞ்சன சேவை பாகவதர்கள் நாம சங்கீர்த்தனத்துடன் வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

**பா. சீனிவாசன்**
**வந்தவாசி.**

## ஸ்ரீகூரத்தாழ்வான் உத்ஸவம் திருத்தேர்



கூரம் (அவதார ஸ்தலம்) ஸ்ரீகூரத்தாழ்வான் உத்ஸவம் திருத்தேர் ஒன்பதாவது திருநாள்

## ஸ்ரீஆமருவியப்பன் மஹா ஸம்ப்ரோக்ஷணம்



தேரழுந்தூர் ஸ்ரீஆமருவியப்பன் மஹா ஸம்ப்ரோக்ஷணம் இன்றைய யாகசாலை திவ்ய அலங்கார சேவை.






## கோவை கே.எம்.சி.எச் நிறுவனத்துக்கு விருது



இந்திய மருத்துவ சேவை வழங்குநர்கள் சங்கத்தின் உலக உச்சி மாநாட்டில் கோவை கே.எம்.சி.எச் மருத்துவக் கல்வி, ஆராய்ச்சி நிறுவனத்துக்கு சிறந்த ஆராய்ச்சி மற்றும் புதுமை விருது வழங்கப்பட்டது.

## உதவித்தொகைக்கான ஆணை



நாகர்கோவிலில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ்விண்ணப்பித்த பயனாளிகளுக்கு கலெக்டர் அழகுமீனா, சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உதவித்தொகைக்கான ஆணைகளை வழங்கினார்.உடன் மாநில உணவு ஆணையத் தலைவர் சுரேஷ்ராஜன், மேயர் மகேஷ், டிஆர்ஒ பூங்கோதை, துணை மேயர் லதா உள்ளனர்.

## மயிலாடுதுறை மாவட்ட காங்கிரஸ் தலைவருக்கு வாழ்த்து



**மயிலாடுதுறை , பிப் , 06:** மயிலாடுதுறை காமராஜர் மாளிகையில், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியால் மயிலாடுதுறை மாவட்ட காங்கிரஸ் தலைவராக புதிதாக நியமனம் செய்யப்பட்ட கொள்ளிடம் வி.ஆர்.எஸ்.பானுசேகர் அவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. விழாவில் தமிழ்நாடு காங்கிரஸ் இலக்கிய அணியின் மாநில பொதுச் செயலாளர் மயிலாடுதுறை கவிஞர். எஸ். ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு மயிலாடுதுறை மாவட்ட காங்கிரஸ் புதிய தலைவர் பானுசேகர் அவர்களுக்கு கதராடை அணிவித்து வாழ்த்துக்கள் கூறினார்.

## உங்கள் குரல் எங்கள் செயல்



கோவையில் மக்கள் குறைகளை பதிவு செய்யும் 'உங்கள் குரல் எங்கள் செயல்' என்ற இணையதளத்தை மாவட்ட பாஜக தலைவர் ரமேஷ்குமார் முன்னிலையில், தமிழக பாரதிய ஜனதா கட்சி மேலிட பொறுப்பாளர் சுதாகர் ரெட்டி நேற்று அறிமுகம் செய்தார்.

## தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்



கரூர் சட்டமன்ற தொகுதி தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று நடந்தது. இதில் முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் பேசினார்.

## அதிமுக முதல்கட்ட தேர்தல் வாக்குறுதிகள் அடங்கிய துண்டு பிரசுரம்



தூத்துக்குடியில் அதிமுக முதல்கட்ட தேர்தல் வாக்குறுதிகள் அடங்கிய துண்டு பிரசுரத்தை தெற்கு மாவட்ட செயலாளர் எஸ்.பி. சண்முகநாதன் வழங்கி பிரசாரம் செய்தார்.

## பாரம்பரிய சிறுதானிய திருவிழா



ராமேசுவரம் அருகே கும்பரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் பாரம்பரிய சிறுதானிய திருவிழா நடந்தது.

## அங்கன்வாடி பணியாளர்கள் மூன்றாவது நாளாக போராட்டம்



செங்கல்பட்டு கலெக்டர் அலுவலகம் அருகே அங்கன்வாடி பணியாளர்கள் 10 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி மூன்றாவது நாளாக நேற்று போராட்டம் நடத்தினர்.

## அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்கள் கைது




காலமுறை ஊதியம்கோரி கோவையில் நேற்று 3வது நாளாக மறியல் செய்த ஐநூறுக்கும் மேற்பட்ட அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்கள் கைது செய்யப்பட்டனர்.

## பெண்கள் தீர்த்தக்குடம் சுமந்து ஊர்வலம்



சேலம் உத்தமசோழபுரம் கரபுரநாதர் சுவாமி கோயில் கும்பாபிஷேகம் வரும் 8ம் தேதி நடக்கிறது. இதையொட்டி நேற்று பெண்கள் தீர்த்தக்குடம் சுமந்து ஊர்வலம் வந்தனர்.

## அதிநவீன தானியங்கி பால் பண்ணை திறப்பு விழா



நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் அதிநவீன தானியங்கி பால் பண்ணை திறப்பு விழாவில் ராஜேஸ்குமார் எம்.பி. பேசினார்.

## பொதுமக்கள் குறை தீர்வு சிறப்பு மனு விசாரணை முகாம்



திருவண்ணாமலைமாவட்ட காவல் அலுவலகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.M. சுதாகர் இ. கா. ப. அவர்கள் தலைமையில் பொதுமக்கள் குறை தீர்வு சிறப்பு மனு விசாரணை முகாம் நடைபெற்றது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## என்.எஸ்.கிருஷ்ணன் திருவுருவச் சிலை



சென்னை கலைவாணர் அரங்க வளாகத்தில் புதுப்பிக்கப்பட்ட கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் திருவுருவச் சிலையை முதலமைச்சர் ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

## தேர்தல் வாக்குறுதிகள் அடங்கிய துண்டு பிரசுரம்



அதிமுகவின் முதல்கட்ட தேர்தல் வாக்குறுதிகள் அடங்கிய துண்டு பிரசுரத்தை திருவண்ணாமலை மத்திய மாவட்ட கழகச் செயலாளர் ஜெயசுதா பொதுமக்களிடம் வழங்கி பிரச்சாரம் மேற்கொண்டார்.

## இஸ்கான் திருக்கோவிலில் பாஜக மாநிலத் தலைவர்



சேலத்தில் இஸ்கான் திருக்கோவிலில் பாஜக மாநிலத் தலைவர் நயினார்நாகேந்திரன் தரிசனம் செய்தார்.

## நடிகர் சிவகார்த்திகேயன், குடும்பத்தினருடன் சுவாமி தரிசனம்



திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் நேற்று நடிகர் சிவகார்த்திகேயன், குடும்பத்தினருடன் சுவாமி தரிசனம் செய்தார்.

## போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள்



தஞ்சாவூரில் நடைபெற்ற 21-வது மாநில அளவிலான மூத்தோர் பாரா தடகள சாம்பியன்ஷிப் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் விருதுகள் நேற்று வழங்கப்பட்டன.

# சுற்றுலா: நீங்கள் வாழ்நாளில் ஒருமுறையாவது செல்ல வேண்டிய 2 இடங்கள்!

ரயில் பயணங்கள் என்பது பொதுவாக குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோருக்கும் பிடித்தமான ஒன்றுதான். குறைந்த விலையில் குடும்பத்தோடு நாடு முழுக்க சுற்ற ஏற்றது ரயில் பயணங்கள்தான். அந்த வகையில், 3 நாடுகளில் ஆயிரக்கணக்கான மைல்கள் கடந்து ஒரு ரயில் அழைத்துச்செல்கிறது என்பது பற்றி தெரியுமா?




டிரான்ஸ்-சைபீரியன் ரயில் பாதை 9,289KM தொலை தூரம் வரை அமைத்துள்ளது. ரஷ்யாவின் தலைநகரான மாஸ்கோவில் இருந்து கிழக்கில் இருக்கும் விளாடிவோஸ்டாக் நகரம்வரை செல்கிறது. உலகின் மிக நீளமான ரயில் பாதை இது. ஒரே ரயில் பாதையான இது ஐரோப்பிய ஆசியக் கண்டங்களை இணைக்கிறது. டிரான்ஸ்-சைபீரியன் ரயில் ரஷ்யாவின் மேற்கே தொடங்கி சீனாவின் எல்லை மற்றும் ஜப்பானின் எல்லையைத் தொடுகிறது.

இந்த ரயிலில் பயணம் செய்தால் உலக வரைபடத்தில் பாதியைக் கடக்கலாம். வருடம் முழுவதும் இந்த ரயில் செயல்படுகிறது. மாஸ்கோவில் இருந்து விளாடிவோஸ்டாக் வரை செல்ல 3 வகுப்பு பயணச்சீட்டின் விலை 13,982 ரூபாய். 2 வகுப்பு பயணச்சீட்டின் விலை 17,018 ரூபாய் ஆகும்.

டிரான்ஸ்-சைபீரியன் ரயில் 18 நிலையங்களில் கடந்து 8 நேர மண்டலங்களை தாண்டி செல்கிறது. மாஸ்கோ - விளாடிவோஸ்டாக், மாஸ்கோ - உலன்படோர், மாஸ்கோ - பெய்ஜிங் என்று மூன்று பிரிவுகளை இணைக்கிறது.

அதில் நீங்கள் எந்த வழியில் பயணம் செல்ல விரும்புகிறீர்களோ அதற்கான விசாவை பெறவேண்டும். இந்த ரயிலில் ரஷ்யாவில் இருந்து தொடங்கி சீனா செல்ல வேண்டுமென்றால் ரஷ்யா மற்றும் சீனா நாட்டிற்கான விசாவை வாங்கவேண்டும். இதற்கான பயணச்சீட்டை மாஸ்கோவில் உள்ள ரயில் நிலையத்திலேயே எடுத்துக்கொள்ளலாம். மேலும் இணையம் வழியாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.



### உலகில் மிக மெதுவாக செல்லும் ரயில்;

சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள கிளேசியர் இரயில் உலகின் மெதுவான இரயில் என்று கூறப்படுகிறது. இதற்கு பனிப்பாறை எக்ஸ்பிரஸ் இரயில் என்றும் இன்னொரு பெயர் உண்டு. பொதுவாக சுற்றுலா தளங்களுக்குச் செல்வதற்குத்தான் இரயில் பயணங்களைத் தேர்ந்தெடுப்பார்கள். ஆனால், இந்த இரயிலில் செல்வதற்காகவே சுற்றுலாவைத் திட்டமிடுகின்றனர் பயணிகள். அப்படி என்ன ஸ்பெஷல் இருக்கிறது இந்த இரயிலில் என்ற ஆர்வம் உங்களுக்கும் அதிகரிக்கிறது அல்லவா!

சுவிட்சர்லாந்தின் ஆல்ப்ஸில் இருந்து ஆண்டர்மாட் வழியாகச் செல்லும் கிளேசியர் இரயில், ஜெர்மாட் மற்றும் செயிண்ட் மோரிட்ஸ் ஆகிய இரண்டு பகுதிகளை இணைக்கின்றன. மொத்தம் 291 கி.மீ. தொலைவைக் கடக்க இந்த இரயில் 8 மணி நேரத்தை எடுத்துக் கொள்கிறது. இரயில் செல்லும் வழியெல்லாம் பள்ளத்தாக்குகள், பனிப்பாறைகள், அழகிய கிராமங்கள் மற்றும் நீண்ட நெடிய குகைகள் போன்ற இயற்கை காட்சிகளை ரசித்துக்கொண்டே மெதுவான பயணத்தை நாம் நிச்சயமாக அனுபவிக்கலாம்.

பயணத்தில் எண்ணற்ற பாலங்களின் மேல் பறந்தும், சுரங்கங்களுக்குள் புகுந்தும் இரயில் செல்வதெல்லாம் ஆச்சரியத்தின் உச்சமாக இருக்கின்றன. இயற்கையின் அழகை ரசித்தபடியே பயணிக்க பெரிய அகலமான ஜன்னல்கள் இந்த இரயிலில் உள்ளன.

# வேலைவாய்ப்பு கார்னர்

## வங்கியில் அதிகாரி பணியிடங்கள்

எஸ். பி.ஐ.,-யில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சர்க்கிள் ஆபிசர் பிரிவில் பெங்களூரு, கோல்கட்டா, லக்னோ தலா 200, காந்திநகர் 194, சென்னை 165 உட்பட மொத்தம் 2050 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பட்டப்படிப்பு வயது: 21-30 (31.12.2025ன் படி) அனுபவம்: 2 ஆண்டு பணி

தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, நேர்முகத்தேர்வு.

தேர்வு மையம்: சென்னை, கோவை, மதுரை உட்பட 14 இடங்கள். விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம் : ரூ. 750. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.

கடைசிநாள்: 18.2.2026 விவரங்களுக்கு: sbi.bank.in

## தமிழக தபால் நிலையத்தில் 2019 காலியிடங்கள்



ஜி.டி.எஸ்., எனும் கிராம தபால் பணியாளர் (கிளை போஸ்ட் மாஸ்டர், உதவி போஸ்ட் மாஸ்டர்) பிரிவில் சென்னை 18, செங்கல்பட்டு 60, கடலூர் 56, கோவை 30, மதுரை 47, திருநெல்வேலி 50 உட்பட மொத்தம் 2019 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பத்தாம் வகுப்பு வயது: 18-40 (16.2.2026ன் படி) தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ.100 பெண்கள், எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை. கடைசிநாள்: 16.2.2026 விவரங்களுக்கு: app.indiapost.gov.in/gdscandidate

# "காலச்சூழலுக்கு ஏற்ப திறமைகளை மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்" - மயில்சாமி அண்ணாதுரை அறிவுரை




சென்னை, பிப்.6:

அண்ணா பல்கலைக்கழகத்தின் 46-வது பட்டமளிப்பு விழா சென்னையில் நேற்று நடைபெற்றது. பல்கலைக் கழக வேந்தரும் தமிழக ஆளுநருமான ஆர்.என்.ரவி தலைமை வகித்தார். பல்கலைக்கழக அளவில் முதலிடம் பிடித்த மாணவ-மாணவிகளுக்கு ஆளுநர் பதக்கங்களையும் பட்டங்களையும் வழங்கினார். பிஇ, பிடெக்., எம்இ, எம்டெக். உள்ளிட்ட படிப்புகளில் 1 லட்சத்து 50,595 பேருக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. இவ்விழாவில் இஸ்ரோ செயற்கைக்கோள் மைய முன்னாள் இயக்குநர் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை பேசியதாவது: நாம் அடைவதை விரும்புவதும் வெற்றிதான்.

பள்ளிக்காலம் தொட்டு நான் விரும்பியவை எனக்கு கிடைக்கவில்லை. கிராமத்து அரசு பள்ளியில் படித்தேன். எனக்கு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணியில் சேர ஆசை. ஆனால், இஸ்ரோவில் செயற்கைக்கோள் திட்டத்தில் பணி கிடைத்தது. விரும்பிச் செய்ததால், நிலவுக்கு வெற்றிகரமாக அனுப்பப்பட்ட சந்திரயான்-1 விண்கலத் திட்டத்துக்கு தலைமை தாங்கி வழி நடத்தினேன். நாம் விரும்புவது கிடைக்காவிட்டாலும் கிடைப்பவற்றை விரும்பிச் செய்தால் அதுவும் வெற்றிதான். எனவே கிடைக்கின்ற வாய்ப்புகளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

விண்வெளித்துறை சாதனையாளர்களில் 90 சதவீதம் பேர் அரசு பள்ளியில் அதுவும் தமிழ்வழியில் படித்தவர்கள் தான். மாறிவரும் காலச்சூழலுக்கு ஏற்ப புதிய திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொண்டே இருக்க வேண்டும். உலகப் பொருளாதார மன்ற ஆய்வின் படி 2030-க்குள் கோடிக்கணக்கான வேலை வாய்ப்புகள் காணாமல் போகும். அதேநேரம் அதே அளவுக்கான புதிய வேலைவாய்ப்புகளும் உருவாகும். எனவே, புதிய பணிகளுக்கு நம்மை தகுதிப்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம். இவ்வாறு கூறினார்.

விழாவில், பல்கலைக்கழக பதிவாளர் வி.குமேரசன், தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் பி.சக்திவேல் மற்றும் பேராசிரியர்கள், மாணவ-மாணவிகள், பெற்றோர்கலந்துகொண்டனர். பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர் நியமனத்தில் தமிழக அரசுக்கும் ஆளுநருக்கும் இடையே மோதல் போக்கு நீடித்து வரும் நிலையில், இணைவேந்தரும், உயர் கல்வி அமைச்சருமான கோவி.செழியன் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பங்கேற்காமல் புறக்கணித்தார்.

# ராமேசுவரம் - சென்னை இடையிலான வந்தே பாரத் ரயில் அடுத்த மாதம் தொடங்கும்

ராமேசுவரம், பிப்.6:

சென்னை-ராமேசுவரம் இடையிலான வந்தே பாரத் ரயில் சேவை அடுத்த மாதம் தொடங்க வாய்ப்புள்ளதாக தெற்கு ரயில்வே பொது மேலாளர் ஆர்.என்.சிங் கூறினார்.

ராமேசுவரம் ரயில் நிலையத்தில் ரூ.90.20 கோடி மதிப்பிலான மேம்பாட்டுப் பணிகள் 2022 மே மாதம் முதல் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை நேற்று ஆய்வு செய்த தெற்கு ரயில்வே பொது மேலாளர் ஆர்.என்.சிங், பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ராமேசுவரம் ரயில் நிலையம் மேம்படுத்தப்பட்ட ரயில் நிலையமாக மாற்றப்பட்டு, கட்டுமானப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.



பயணிகளுக்குத் தேவையான வாகன நிறுத்துமிடம், குளிரூட்டப்பட்ட ஓய்வறை, உணவகம் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் கிடைக்கும் வகையில் பணிகள் நடக்கின்றன. இன்னும் ஒன்றரை மாதத்தில் பணிகள் முடிவடைந்து, மக்கள் பயன்பாட்டுக்கு ரயில் நிலையம் கொண்டு வரப்படும்.

ராமேசுவரத்திலிருந்து அடுத்த மாதம் வந்தே பாரத் ரயில் சேவை தொடங்க வாய்ப்பு உள்ளது. பாம்பன் கடலில் அமைந்துள்ள பழைய ரயில் பாலத்தின் மையப் பகுதியில் உள்ள இரும்பு தூக்குப் பலத்தை அகற்றும் பணி நடந்து வருகிறது.

தூக்குப் பாலத்தை பாதுகாப்பான முறையில் அகற்றி, அதை ராமநாதபுரம் அருகே பொதுமக்கள் பார்வையிடும் வகையில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ராமேசுவரம்-தனுஷ்கோடி இடையே ரயில் பாதை அமைப்பதற்கான பணிகளைத் தொடங்க மாநில அரசின் சுற்றுச்சூழல் அனுமதி கிடைப்பதில் சிக்கல்கள் உள்ளன. அனுமதி கிடைத்த பின்னர் ரயில் பாதை அமைக்கும் பணிகளைத் தொடங்குவது குறித்து முடிவு செய்யப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# துணை வேந்தர்கள் நியமனம்: தமிழக அரசின் சட்டத்துக்கு உயர் நீதிமன்றம் விதித்த தடை ரத்து!

புதுடெல்லி, பிப்.6:

தமிழக பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்கி இயற்றப்பட்ட சட்டப் பிரிவுக்கு சென்னை உயர் நீதிமன்றம் விதித்த தடையை உச்ச நீதிமன்றம் புதன்கிழமை ரத்து செய்துள்ளது.

தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்கி தமிழக அரசு நிறைவேற்றிய சட்டத் திருத்த மசோதாவுக்கு உச்சநீதிமன்றம் தனது சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி கடந்தாண்டு ஒப்புதல் அளித்தது.

இந்தச் சட்டத் திருத்தத்தை எதிர்த்து தாக்கல் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன் மற்றும் லட்சுமி நாராயணன் அமர்வு, துணைவேந்தர்களை நியமிக்கும் வேந்தரின் அதிகாரத்தை அரசுக்கு வழங்கி நிறைவேற்றப்பட்ட சட்டப் பிரிவுக்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டனர்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவுக்கு எதிராக தமிழக அரசு தரப்பில் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த் மற்றும் நீதிபதிகள் ஜயமால்ய பாக்சி, விபுல் எம். பஞ்சோலி ஆகியோர் அடங்கிய அமர்வு, சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுக்கு தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.

அப்போது இந்த வழக்கில் உத்தரவு பிறப்பிக்க விடுமுறை கால அமர்வு இவ்வளவு அவசரம் காட்டியது ஏன்? என்று உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு கேள்வி எழுப்பியது.

மேலும், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு தெரிவித்ததாவது, "இந்த வழக்கில் மாநில அரசின் வாதத்தை முன்வைக்க உரிய காலஅவகாசம் வழங்கப்படாத ஒரே காரணத்துக்காக மேல்முறையீட்டு மனு அனுமதிக்கப்படுகிறது. சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ரத்து செய்யப்படுகிறது.

இந்த வழக்கை மீண்டும் சென்னை உயர்நீதிமன்றத்துக்கு அனுப்புகிறோம். மாநில அரசு பதிலளிக்க உரிய காலஅவகாசம் அளித்து சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு மீண்டும் விசாரிக்க வேண்டும்" என்று உத்தரவிட்டது.

மேலும், உயர் நீதிமன்றத்தில் விசாரணை முடியும் வரை துணை வேந்தர்களை நியமிக்கக் கூடாது என்று தமிழக அரசுக்கு உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

# தோல்வி பயத்தால் தவெகவை விமர்சிக்கிறார் இபிஎஸ்! - செங்கோட்டையன்

சென்னை, பிப்.6:

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, தோல்வி பயத்தாலேயே தவெகவை விமர்சிக்கிறார் என தவெக நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

அதிமுகவை தவெக தலைவர் விஜய் விமர்சித்த நிலையில், 'விஜய்க்கு ஒன்றும் தெரியாது, அவர் முதலில் செய்தியாளர்களைச் சந்திக்கட்டும்' என எடப்பாடி பழனிசாமி கூறியிருந்தார்.

இந்நிலையில் கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களுடன் பேசிய செங்கோட்டையன் இதுபற்றி, "அவர்கள் தோல்வி பயம் ஏற்பட்டால் மட்டும்தான் இதுபோன்ற கருத்துகளைப் பரிமாறிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் திமுகவின் 'பி' டீமாக யார் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும். அவர்போல நானும் கருத்து சொல்ல விரும்பவில்லை, அவர் என்னவேண்டுமானாலும் சொல்லட்டும்.

ஆனால், தோல்வி பயம் ஏற்பட்ட காரணத்தினால்தான் இபிஎஸ் அவ்வாறு பேசிக்கொண்டிருக்கிறார்.

தேர்தல் அறிக்கை மொத்தமாக கொடுக்கப்பட வேண்டியது. ஆனால், தினமும் சிந்தித்து சிந்தித்து தேர்தல் அறிக்கை வெளியிடும்போதே அவர்கள் எவ்வளவு தோல்வி பயத்தில் இருக்கிறார்கள் என்பதை தெரிந்துகொள்ள வேண்டும்" என்றார்.

# திருப்பதி தேவஸ்தான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க சிபிஐ பரிந்துரை




புதுடெல்லி, பிப்.6:

ஆந்திரத்தில் ஜெகன்மோகன் ரெட்டி தலைமையிலான ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் ஆட்சியில் (2019-2024), திருப்பதி ஏழுமலையான் கோயில் லட்டு தயாரிப்பில் விலங்கு கொழுப்பு கலப்படம் இருந்ததாக, கடந்த 2024-ஆம் ஆண்டு மாநில முதல்வரும், தெலுங்கு தேசம் கட்சியின் தலைவருமான சந்திரபாபு நாயுடு குற்றஞ்சாட்டினார்.

இந்த விவகாரம் தொடர்பாக 15 மாதங்கள் விசாரணை மேற்கொண்ட சிபிஐ-எஸ்ஐடி திருப்பதி லட்டு தயாரிப்பில் விலங்கு கொழுப்பு பயன்படுத்தப்படவில்லை என்றும் தரம் குறைந்த நெய், பாமாயில் உள்ளிட்டவை மூலம் திருப்பதி லட்டுகள் தயாரிக்கப்பட்டதாகவும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது.

இந்த மோசடியில் தேவஸ்தான அதிகாரிகள் 9 பேர் உள்பட 36 பேர் ஈடுபட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், ஆந்திர அரசுக்கு சிபிஐ-எஸ்ஐடி எழுதிய கடிதத்தில், 'விதிகளை முறையாக பின்பற்றாமல் லட்டு தயாரிப்பு தொடர்பான ஒப்பந்தப்புள்ளிக்கு திருமலை திருப்பதி தேவஸ்தான அதிகாரி ஓ.பாலாஜி, முன்னாள் கூடுதல் செயல் அதிகாரி ஏ.வி. தாமா ரெட்டி, முன்னாள் செயல் அதிகாரி அனில் குமார் சிங்கால் ஆகியோர் ஒப்புதல் அளித்துள்ளனர். இதன் காரணமாக போலே பாபா, வைஷ்ணவி மற்றும் மல்கங்கா போன்ற திறனற்ற நிறுவனங்களிடமிருந்து குறைந்த தரத்திலான நெய் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கூறிய அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்துகிறோம்' எனத் தெரிவிக்கப்பட்டது.

# "அரசியலில் இருந்து ஒருபோதும் பின்வாங்க மாட்டேன்" - அண்ணாமலை உறுதி

மதுரை, பிப்.6:

பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை மதுரையில் செய்தியாளர்களிடம் இன்று கூறியதாவது: "நடிகர் விஜய்யையும், தவெகவையும் இன்னும் அடிக்க ஆரம்பிக்கவே இல்லை. இனிதான் அடிப்பேன். விஜய் அரசியலுக்கு வந்த போது வரவேற்றேன். அவர், அவர் பாதையில் போகட்டும். விஜய் எங்களுடன் கூட்டணி சேரவில்லை என்பதற்காக அவரை தாக்கி பேசமாட்டேன். அதே நேரத்தில் டப்பா இன்ஜின் எனக் கூறினால் தக்க பதிலடி கொடுப்பேன். அதற்கு விஜய்க்கு அல்லு சில்லறைகளை வைத்து பதிலளித்தால் அதே பாணியில் தரம் தாழ்ந்தும் பதிலடி கொடுப்பேன். நாகரீகமாக பேசினால் என் பதிலும் நாகரீகமாக இருக்கும். ஏப்ரல் மாதம் நடைபெறும் தேர்தலில் அவர்கள் நினைப்பது பிரதிபலிக்கும். தேசிய ஜனநாயக கூட்டணி



வெற்றிக்காக கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கிறோம். இந்த நேரத்தில் அவர்களுக்கு பதிலளித்தால் எல்லையில்லாமல் போகும். இதைஎச்சரிக்கையாககூட அவர்கள் எடுத்துக்கொள்ளட்டும். விஜய் கைதட்டு பெற தவெக கூட்டத்தில் எப்படி வேண்டுமானாலும் பேசலாம். அவரின் பேச்சு வாக்காளர்களை சிந்திக்க வைக்கும் பேச்சாக தெரியவில்லை. இதனால் அவரது பேச்சை கடந்து போய்விட வேண்டும்.

கரூரில் சட்டவிரோத குவாரி தொடர்பாக செய்தி சேகரிக்க சென்ற ஊடகத்தினரை திமுக எம்எல்ஏ தாக்கியது கண்டிக்கத்தக்கது. இதில் தமிழக முதல்வர் நேரடியாக தலையிட வேண்டும். எம்எல்ஏ மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் ஊடகத்தினர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளாக பார்க்கும் போது தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படுத்துவதே திமுகவினராக தான் உள்ளனர். சட்டம் ஒழுங்கு அதளபாதாளத்திற்கு சென்றுள்ளது.

திருப்பரங்குன்றம் விவகாரத்தில் மாவட்ட ஆட்சியர் மன்னிப்பு கோரியுள்ளார். மாவட்ட ஆட்சியர் மன்னிப்பு கோரியதை தமிழக அரசு மன்னிப்பு கோரியதாகவே பார்க்க வேண்டும். ஆட்சியர், மாநகர காவல் ஆணையர் பலியாடாக ஆக்கப்பட்டுள்ளனர். ஆட்சியருக்கு 144 தடையாணை பிறப்பிக்க சொன்னது யார் என்பதை ஆய்வு செய்ய வேண்டும். 144 பிறப்பித்தது மோசடி என மேல்முறையீட்டு வழக்கில் இரு நீதிபதிகள் அமர்வு கூறியுள்ளது. தமிழக அரசு நீதிமன்றத்தில் வெட்கி தலை குனிந்துள்ளது. கலவரம் நடத்த முயன்றது யார்? அந்த பழியை பாஜகவினர் மீது போடுகின்றனர்.

ஓபிஎஸ் உட்பட யாரும் தனித்து விடப்படவில்லை. காலம் இருக்கிறது. அனைவரும் ஒரே அணிக்கு வருவார்கள். திமுக ஆட்சி தூக்கி எறியப்படும். சேகர்பாபு போல் அண்டி பிழைக்கும் ஆண்டி நான் இல்லை.

தேர்தல் பொறுப்பாளர் பணி என்பது கட்சியின் அமைப்பு பணி. அதற்கு நல்ல திறமையான தலைவர்கள் உள்ளனர். இந்த வேலை ஆத்மார்த்தமான வேலை. தொகுதியில் தங்கியிருக்க வேண்டும். அதற்கு நேரம் கொடுக்க முடியாத நிலையில் உள்ளேன். இதனால் அதிலிருந்து விலகியுள்ளேன். மற்றபடி அரசியலில் இருந்து பின்வாங்க போவதில்லை. யாரை எங்கு பயன்படுத்த வேண்டும் என்பது கட்சிக்கு தெரியும். 2026 தேர்தலில் ஆட்சிக் கட்டிலில் இருந்து திமுகவை இறக்க வேண்டும் என்பதில் என்டிஏ தெளிவாக உள்ளது. என்னை எங்கு போட்டியிடச் சொல்கிறதோ அங்கு போட்டியிடுவேன் என்றார்.

## க்ரைம் கார்னர்

### பாதி விலையில் தங்கம்: கோடிக்கணக்கில் மோசடி தலைமறைவாக இருந்த 3 பேர் கைது

சென்னை, பிப்.6:

முகப்பேர் பகுதியை தலைமையிடமாகக் கொண்டு 'ஏ ஆர் டி ஜுவல்லரி' என்ற பெயரில் நகைக்கடை இயங்கி வந்தது. இந்த நிறுவனத்தினர் பாதி விலையில் தங்கம் தருவதாகவும், முதலீட்டு பணத்துக்கு வாரம் 3 சதவீதம் வட்டி தருவதாகவும் கவர்ச்சிகரமான பல்வேறு திட்டங்களை விளம்பரம் செய்தனர். இதை நம்பி ஏராளமானவர்கள் கோடிக்கணக்கான பணத்தை முதலீடு செய்தனர். இதையடுத்து, இந்த நிறுவனம் தமிழகமெங்கும் கிளைகளை நிறுவியது. சில நாட்கள் வட்டியை வழங்கி வந்த இந்த நிறுவனம், பின்னர் உறுதியளித்தபடி நடந்துகொள்ளாமல் இழுத்தடித்தது. அது மட்டுமல்லாமல் உரிமையாளர்கள் மற்றும் நிர்வாகிகள் என ஒவ்வொருவராக தலைமறைவாகினர். இது தொடர்பாக சென்னை அசோக் நகரில் உள்ள பொருளாதார குற்றப்பிரிவு போலீஸில் புகார் அளித்தனர். அதன்படி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். இதில் பண மோசடி நடைபெற்றது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து முதல் கட்டமாக நிறுவன உரிமையாளர்கள், நிர்வாகிகள் என 14 பேர் அடுத்தடுத்து கைது செய்யப்பட்டனர். இதன் தொடர்ச்சியாக தலைமறைவாக இருந்த இந்நிறுவன நிர்வாகிகள் அந்தோணி விமல் ராஜ் (34), கள்ளக்குறிச்சியைச் சேர்ந்த ஷமீர் அகமது (28), கொரட்டூரைச் சேர்ந்த பிரேமாவதி (62) ஆகிய 3 பேரை கைது செய்து சிறையில் அடைத்தனர். தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

### பெண் அதிகாரி புகைப்படத்தை 'ஏஐ' மூலம் ஆபாசமாக சித்தரித்து வெளியிட்ட முன்னாள் பெண் ஊழியர் கைது

சென்னை, பிப்.6:

சென்னை வளசரவாக்கத்தில் பிரபலமான தனியார் நிறுவனம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவன பெண் அதிகாரியின் ஆபாசப் புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் அண்மையில் வைரலானது. அதிர்ச்சி அடைந்த அந்த பெண் நிர்வாகி இது தொடர்பாக மாநில சைபர் க்ரைம் போலீஸாரிடம் புகார் தெரிவித்தார். அதன்படி, அப்பிரிவு டிஜிபி சந்தீப் மித்தல் மேற்பார்வையில் உதவி ஆணையர் லிசா தலைமையிலான போலீஸார் விசாரணை நடத்தினர். இதில் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சம்பந்தப்பட்ட பெண் அதிகாரியின் புகைப்படத்தை ஆபாசமாக சித்தரித்து பரப்பியது இளம் பெண் ஒருவர் என்பதும், அவர் அதே நிறுவனத்தில் கடந்தாண்டு அக்டோபரில் வேலையை ராஜினாமா செய்துள்ளார் என்பதும், தனது இந்த நிலைக்கு சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பெண் அதிகாரியே காரணம் என நினைத்து அவரது புகைப்படத்தை ஏஐ உதவியுடன் ஆபாசமாக சித்தரித்து சமூக வலைதளங்களில் வெளியிட்டதும் தெரியவந்தது. இதையடுத்து அந்த முன்னாள் பெண் ஊழியரை போலீஸார் கைது செய்தனர்.

### கடன் தவணையை செலுத்த தவறியதால் தனியார் வங்கி ஊழியர்கள் மிரட்டல்: பாஜக நிர்வாகி தற்கொலை

பொன்னேரி, பிப்.6:

பொன்னேரி, பர்மா நகர் பகுதியை சேர்ந்தவர் அரி (35). கார் ஓட்டுநரான இவர், பொன்னேரி நகர பாஜக இளைஞரணி தலைவராக இருந்து வந்தார். அரிக்கு சுபலட்சுமி என்ற மனைவியும், 2 வயது மற்றும் 1 வயதில் என, 2 ஆண் குழந்தைகள் உள்ளனர். இந்நிலையில், அரி நேற்று முன் தினம் மாலை வீட்டின் கதவை உள்பக்கமாக தாழ்பாள் போட்டு தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டது உறவினர்கள் மற்றும் சுபலட்சுமிக்கு தெரிய வந்தது. இந்நிலையில், அரியின் உறவினர்கள், அவரது கையில் அலைபேசி எண் ஒன்று எழுதப்பட்டிருந்ததை பார்த்துள்ளனர். ஆகவே, அவர்கள் அரியின் மொபைல் போனை ஆய்வு செய்தபோது, இரு சக்கர வாகன கடன் தவணை செலுத்த தவறியதால் தனியார் வங்கி ஊழியர்கள் அரியை அவதூறாக பேசி, கொலை மிரட்டல் விடுத்தது தெரிய வந்ததாக கூறப்படுகிறது. மன உளைச்சல் காரணமாக அரி தற்கொலை செய்து கொண்டுள்ளார். எனவே, தனியார் வங்கி ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என பொன்னேரி காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். தொடர்ந்து, அரியின் உடலை மீட்ட போலீஸார், பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பிறகு, போலீஸார் வழக்கு பதிவு செய்து, விசாரித்து வருகின்றனர்.

## விளையாட்டு செய்திகள்

### 3 தேசிய சாதனைகள் படைத்த மணிப்பூர் வீராங்கனை மீராபாய் சானு!



புதுடெல்லி, பிப்.6:

இந்திய வீராங்கனை மீராபாய் சானு (31 வயது) தேசிய பளு தூக்குதலில் மூன்று தேசிய சாதனைகளை படைத்து அசத்தியுள்ளார்.

தேசிய பளு தூக்கும் போட்டிகள் பிப்.3 முதல் பிப்.14ஆம் தேதி வரை நடைபெறுகின்றன. மகளிருக்கான 48 கிலோ எடைப் பிரிவில் மீரா பாய் சானு முதலில் ஸ்நாட்ச் பிரிவில் 86, 89 கிலோ எடையைத் தூக்கினார். 91 கிலோவை தூக்கும் முயற்சி தோல்வியில் முடிந்தது. இருந்தும், இந்தப் பிரிவில் 89 கிலோ எடையைத் தூக்கி புதிய தேசிய சாதனையை நிகழ்த்தினார். அடுத்ததாக க்ளீன் & ஜெர்க் பிரிவில் 116 கிலோ எடையைத் தூக்கி புதிய தேசிய சாதனையை நிகழ்த்தினார். 48 கிலோ மகளிருக்கான எடைப் பிரிவில் மொத்தமாக (89 + 116) 205 கிலோ எடையைத் தூக்கி மூன்று சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.

### டபிள்யுடிடி சென்னை கன்டென்டர்: இந்திய வீரர், வீராங்கனைகளுக்கு வைல்ட் கார்ட்

புதுடெல்லி, பிப்.6:

டபிள்யுடிடி கன்டென்டர் சென்னை 2026 தொடரில், இந்தியாவின் அனுஷா குடும்பலே, பிரியானுஜ் பட்டாச்சார்யா ஆகியோர் வைல்ட் கார்ட் பெற்றுள்ளனர். இதன் மூலம் ஒட்டுமொத்தமாக அனைத்து பிரிவிலும் 23 இந்திய வீரர், வீராங்கனைகள் பிரதான டிராவில் இடம் பெறுகின்றனர். இப்போட்டி வரும் பிப். 10 முதல் 15 வரை சென்னை மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ளது. இத்தொடரை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், அல்டிமேட் டேபிள் டென்னிஸ், சரத் கமல் அகாதெமி, ஸ்டுபா ஸ்போர்ட்ஸ் ஏஜ ஆகியவை இணைந்து நடத்துகின்றன. மகளிர் ஒற்றையர் பிரிவில் 4 வைல்டு கார்டு வாய்ப்புகளும் இந்திய வீராங்கனைகளுக்கே வழங்கப்பட்டுள்ளது. அனுஷா குடும்பலே, சாயலி வாணி, காவ்யா பட் மற்றும் தனிஷா கோடேச்சா ஆகியோரும். ஆடவர் பிரிவில் அனிர்பன் கோஷ் மற்றும் திவ்யான்ஷ் ஸ்ரீவஸ்தவா ஆகியோர் பிரியனுஜுடன் பிரதான சுற்றுக்குத் தகுதி பெற்றனர். சென்னையில் 2-ஆவது முறையாக நடத்தப்படும் இத்தொடரின் மொத்த பரிசுத் தொகை சுமார் ரூ.2.90 கோடி ஆகும். கடந்த ஆண்டு இந்தத் தொடரின் போது தொழில்முறை டேபிள் டென்னிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற இந்திய டேபிள் டென்னிஸ் ஜாம்பவான் அச்சந்த சரத் கமல் இயக்குநராகப் பணியாற்ற உள்ளார். ஆடவர் ஒற்றையர் பிரிவில், மானவ் தக்கர், மனுஷ் ஷா, அனுபவம் வாய்ந்த ஜி. சத்யன் மற்றும் ஹர்மீத் தேசாய் ஆகியோரும் பிரதான சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

## மும்பை - புனே நெடுஞ்சாலையில் லாரி கவிழ்ந்து விபத்து: 12 மணி நேரமாக காத்திருந்த வாகனங்கள்

புனே, பிப்.6:

மகாராஷ்டிர மாநிலத் தலைநகர் மும்பையிலிருந்து 120 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள புனே நகருக்கு அதிவேக நெடுஞ்சாலை அமைக்கப்பட்டு உள்ளது. இந்த சாலையில் பயணிக்க வேண்டுமானால் சுங்கக் கட்டணம் செலுத்த வேண்டும்.

இந்நிலையில் மும்பை - புனே நெடுஞ்சாலையில் ராய்காட் மாவட்டம் ஆதோஷி சுரங்கப்பாதை அருகே நேற்று முன் தினம் ஒரு காஸ் டேங்கர் லாரி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. லாரியில் புரோப்பிலீன் என்ற காஸ் அடைக்கப்பட்டு இருந்தது. இதனால் காஸ் கசியும் அபாயம் இருந்ததால் வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. இதையடுத்து அந்த லாரியின் பின்னால் வந்த வாகனங்கள் வரிசையாக அணிவகுத்து நின்றன. சாலையில் இருந்த காஸ்



டேங்கர் லாரியை அப்புறப்படுத்த நெடுஞ்சாலை ஊழியர்களும், தீயணைப்புப் படை வீரர்களும் பெரும் முயற்சி செய்தனர். ஆனால் அதை அகற்றுவதற்கு சிரமம் நீடித்தது. இந்த விபத்து மாலை 4.45 மணிக்கு ஏற்பட்டது. மாலை 5 மணி முதல் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு சுமார் 12 கிலோ மீட்டர் தொலைவுக்கு வாகனங்கள் நீண்ட வரிசையில் அணிவகுத்து நின்றன. விபத்து நடந்த இடம் வனப்பகுதியாகும். நள்ளிரவு வரை இந்த நிலை நீடித்தது. இதையடுத்து போக்குவரத்து போலீஸார், எதிரே வரும் வழியில் வாகனங்களை ஒருபக்கமாக செல்ல அனுமதித்தனர். இருந்தபோதும் போக்குவரத்து நெரிசல் குறையவில்லை.

இதனால் வாகன ஓட்டிகள் பெரும் அவதிக்குள்ளாயினர். தாங்கள் அளித்த சுங்கக் கட்டணத்தை தங்களுக்குத் திருப்பித் தர வேண்டும் என்று அவர்கள் சுங்கச்சாவடி அதிகாரிகளிடம் கோஷமிட்டனர். அப்பகுதியில் போதுமான குடிநீர், கழிப்பறை உள்ளிட்ட எந்தவித அடிப்படை வசதியும் இல்லாததால் வாகன ஓட்டிகள் அவதிப்பட்டனர்.

## கடந்த ஜனவரி மாதம் டெல்லியில் 15 நாட்களில் 807 பேர் மாயம்; கெஜ்ரிவால் அதிர்ச்சி

புதுடெல்லி, பிப்.6:

ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் டெல்லியின் முன்னாள் முதல்-மந்திரியான கெஜ்ரிவால் கூறும்போது, ஜனவரி 1-ந்தேதி முதல்15-ந்தேதிவரைடெல்லியில் பெண்கள், குழந்தைகள் என 807 பேரை காணவில்லை. அப்படியென்றால், நாளொன்றுக்கு 54 பேர் காணாமல் போயுள்ளனர்.

அவர்களில் பலர் இளம் சிறுமிகள். நாட்டின் தலைநகர் டெல்லியில், மக்களின் பாதுகாப்புகேள்வியாகஉள்ளது. இது அச்சமூட்டும் வகையில் உள்ளது. ஆனால், பா.ஜ.க. அரசுதூங்கிகொண்டிருக்கிறது.





டெல்லியில் குற்றவாளிகள் தெருக்களில் கொலைகளை செய்து விட்டு தப்பி செல்கின்றனர். ஆனால், டெல்லி போலீசின்தலைவரானஅமித்ஷா எதுவும் செய்வதில்லை. 4 என்ஜின் கொண்ட அரசு 420 அரசியலில்பரபரப்பாக இயங்கி கொண்டிருக்கிறது. டெல்லி மக்களோ அச்சத்தின் நிழலில் வசிக்கின்றனர் என கூறினார்.

டெல்லியில் சட்டம் ஒழுங்கு ஐ.சி.யு.வில் உள்ளது என கூறிய அவர், டெல்லி மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். உங்களுடைய குழந்தைகளைநீங்களேகவனம் கொண்டு பாதுகாத்திடுங்கள் என்றும் கூறினார்.

## நீட் முதுநிலை தேர்வு கட்-ஆஃப் மதிப்பெண் குறைப்பு: வாரியம் பதில் அளிக்க உத்தரவு

புதுடெல்லி, பிப்.6:

நீட் முதுநிலை தேர்வு கட்-ஆஃப் மதிப்பெண் குறைப்பை எதிர்த்து தொடரப்பட்ட பொதுநல மனுவுக்கு, தேசிய தேர்வுகள் வாரியம் பதில் அளிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


நீட் முதுநிலை தேர்வு கட்-ஆப் மதிப்பெண் குறைக்கப்பட்டதை எதிர்த்து, சமூக ஆர்வலர் ஹரிசரண் தேவ்கான் உள்ளிட்ட நால்வர் சார்பில் வழக்கறிஞர் நீமா பொதுநல மனு தாக்கல் செய்தார்.

அதில்,"தேசிய தேர்வுகள் வாரியம் கடந்த மாதம் 13ம் தேதி வெளியிட்ட அறிவிக்கையில், நீட் முதுநிலை தேர்வு கட் -ஆஃப் மதிப்பெண்ணைபூஜ்ஜியத்துக்கும் கீழே குறைத்துள்ளது. இதனால் மருத்துவ கல்வித் தரம் பாதிக்கப்படும். எனவே இந்த அறிவிக்கையை ரத்து செய்ய வேண்டும்" என கோரப்பட்டிருந்தது.

இந்த மனுவை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.எஸ். நரசிம்மா, ஆலோக் ஆராதே ஆகியோர் அடங்கிய அமர்வு, பொதுநல மனுவுக்கு பதில் அளிக்குமாறு தேசிய தேர்வுகள் வாரியத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

## வணிகச் செய்திகள்

### தங்கம் விலை பவுனுக்கு ரூ.4,640 குறைந்தது!



சென்னை, பிப்.6:

சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை (பிப்.5) கிராமுக்கு ரூ.580 குறைந்து, ஒரு கிராம் ரூ.14,320-க்கு விற்பனை ஆகிறது. நேற்று ஒரே நாளில் பவுனுக்கு ரூ.4,640 குறைந்து, ஒரு பவுன் ரூ.1,14,560-க்கு விற்பனை ஆகிறது.

24 காரட் சுத்த தங்கம் பவுனுக்கு ரூ.5,072 குறைந்து, ஒரு பவுன் ரூ.1,24,976-க்கும் விற்பனை ஆகிறது. 18 காரட் தங்கம் பவுனுக்கு ரூ.4,000 குறைந்து, ஒரு பவுன் ரூ.98,000-க்கும் விற்பனை ஆகிறது. இதேபோல வெள்ளி விலையும் நேற்று சரிந்துள்ளது. வெள்ளி கிராமுக்கு ரூ.20 குறைந்து, ரூ.300-க்கும், கட்டி வெள்ளி கிலோவுக்கு ரூ.20,000 குறைந்து, ரூ.3,00,000-க்கும் சந்தையில் விற்பனை ஆகிறது.

கடந்த ஜனவரி 29-ம் தேதி ஒரு கிலோ வெள்ளி ரூ.4,25,000-க்கு விற்பனையானது குறிப்பிடத்தக்கது. பிளாட்டினம் விலை கிராமுக்கு ரூ.653 என விலை குறைந்து ஒரு கிராம் ரூ.5,961-க்கு விற்பனையாகி வருகிறது.

## திருப்பதி லட்டு பிரசாத விவகாரம் - விசாரணை கமிஷன் அமைக்கிறது ஆந்திர அரசு

அமராவதி, பிப்.6:

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் நடைபெற்ற கலப்பட நெய் விவகாரம் தற்போது விஸ்வரூபம் எடுத்துள்ளது. இதில் உண்மையான குற்றவாளியை கண்டுபிடிக்க விசாரணை கமிஷனை அமைக்க ஆந்திர அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

கடந்த 2019-ம் ஆண்டு முதல் 2024-ம் ஆண்டு வரை திருமலை திருப்பதி தேவஸ்தானத்தில் கலப்பட நெய் உபயோகப்படுத்தி, பிரசாதம் தயாரிக்கப்பட்டதாக 2024-ல் சந்திரபாபு நாயுடு ஆட்சிக்கு வந்ததும் பகிரங்கமாக அறிவித்தார். ஜெகன் மோகன் ரெட்டியின் ஆட்சி காலத்தில் நடந்த இந்த மாபெரும் குற்றத்தை கண்டுபிடிக்க முதலில் ஆந்திர அரசு சிறப்பு புலனாய்வு குழுவை (எஸ்ஐடி) அமைத்தது. ஆனால், இக்குழு பாரபட்சமாக விசாரணை நடத்தும் என்பதால் சிபிஐ விசாரணை தேவை என ஒய்எஸ்ஆர் காங்கிரஸார் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். இதனை தொடர்ந்து சிபிஐ அதிகாரிகள் தலைமையில் சிறப்பு புலனாய்வு குழு அமைக்கப்பட்டது. இந்த சிறப்பு புலனாய்வு குழு, இதுவரை 14 பேரை கைது செய்துள்ளது. இவர்கள் அனைவரையும் நெல்லூரில் உள்ள லஞ்ச ஒழிப்பு மற்றும் சிபிஐ நீதிமன்றங்களில் ஆஜர் படுத்தியது. இதில் பல்வேறு பால் உற்பத்தி நிறுவனத்தை சேர்ந்தவர்கள் உள்ளனர். மேலும், ஏ-34 குற்றவாளியாக திருப்பதி தேவஸ்தான அதிகாரியான விஜயபாஸ்கர் ரெட்டி கைது செய்யப்பட்டார்.

அப்போது அவர் புலனாய்வு குழுவுக்கு கொடுத்த வாக்குமூலத்தில், "கலப்படம் செய்த நெய்யை பரிசோதனை செய்ததும் அதில் கலப்படம் உள்ளது என்பதை அறிந்தேன். இதனை அந்தந்த நிறுவனங்களுக்கு எடுத்துக் கூறினேன். ஆனால், அவர்கள், எனக்கு லஞ்சம் கொடுத்து நெய்யை தொடர்ச்சியாக விநியோகம் செய்து வந்தனர். இதன் மூலம் திருமலை திருப்பதி தேவஸ்தானத்துக்கு ரூ.118 கோடி நஷ்டம் ஏற்பட்டது. 2023-ல் போலே பாபா நெய் நிறுவனத்தில் இருந்து ரூ.75 லட்சம், பிரீமியர் நிறுவனத்தில் இருந்து ரூ.8 லட்சமும் லஞ்சமாக வாங்கினேன்" என வாக்கு மூலம் அளித்தார். இது தற்போது ஆந்திர அரசியலில் பெரும் அரசியல் புயலை வீச தொடங்கி உள்ளது. இந்நிலையில், நேற்று அமராவதியில் முதல்வர் சந்திரபாபு நாயுடு தலைமையில் நடைபெற்ற அமைச்சரவை குழுவில், கலப்பட நெய் விவகாரம் குறித்து சரிவர புலனாய்வு விசாரணை நடக்க வில்லை என்பதால், உண்மையான குற்றவாளி யார் என விசாரிக்க விரைவில் விசாரணை கமிஷன் அமைக்க ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதையடுத்து, ஆந்திர அரசியலில் 'கலப்பட நெய்' விவகாரம் பூதாகரமாகி மீண்டும் விஸ்வரூபம் எடுத்துள்ளது. இதன் மூலம் பல பெரிய 'தலை'கள் சிக்கும் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# இந்திய - அமெரிக்க வர்த்தக ஒப்பந்த கூட்டறிக்கை 5 நாட்களில் வெளியாகலாம்: பியூஷ் கோயல்



புதுடெல்லி, பிப்.6:

இந்தியாவுக்கும் வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சிலுக்கும் (GCC) இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான விதிமுறைகள் இறுதி செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக இரு தரப்பு பேச்சுவார்த்தைக்குழு தலைவர்கள் இன்று கையெழுத்திட்டனர்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பியூஷ் கோயல் பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர், “இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் குறித்த கூட்டறிக்கை தயாராக உள்ளது. அது இன்னும் 4-5 நாட்களில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சட்டப்பூர்வமான இரு தரப்பு வர்த்தக ஒப்பந்தம் மார்ச் மாத மத்தியில் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டறிக்கை வெளியான பிறகு, இந்திய பொருட்களுக்கான இறக்குமதி வரியை 18% ஆக குறைப்பதற்கான அரசாணையை அமெரிக்க அரசு பிறப்பிக்கும்” என தெரிவித்துள்ளார்.

முன்னதாக, ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்துவதற்கும், அமெரிக்காவிடம் இருந்து 500 பில்லியன் டாலர் அளவுக்கு பொருட்களை கொள்முதல் செய்யவும் பிரதமர் நரேந்திர மோடி உறுதி அளித்துள்ளதாக அமெரிக்கா தெரிவித்திருந்தது.

வெள்ளை மாளிகையில் செவ்வாய் கிழமை (பிப். 3) செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க பத்திரிகைச் செயலாளர் கரோலின் லெவிட், “அதிபர் டொனால்டு ட்ரம்ப், இந்திய பிரதமர் மோடியுடன் சிறப்பான ஒரு தொலைபேசி உரையாடலை நடத்தினார்.

அதன்மூலம், இந்தியாவுடன் சிறந்த வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளார்.

பிரதமர் மோடியுடன் அவர் நேடியாகப் பேசினார். அவர்கள் ஒருவருக்கு ஒருவர் நல்ல உறவை கொண்டிருக்கிறார்கள். அதிபர் ட்ரம்ப், பிரதமர் மோடியுடனான உறவை மிகவும் விரும்புகிறார், பிரதமர் மோடி மீதும் இந்தியா மீதும் மிகுந்த மரியாதை வைத்துள்ளார்.

ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதை நிறுத்துவதோடு மட்டுமல்லாமல், அமெரிக்காவிடம் இருந்தும், வெனிசுலாவிடமிருந்தும்கூட எண்ணெய் வாங்க இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது. இது அமெரிக்காவுக்கும் அமெரிக்க மக்களுக்கும் நேரடி பலன்களைத் தரும்.

வெனிசுலாவின் வர்த்தகத்தையும், அதன் எண்ணெய் விற்பனையையும் அதிபர் ட்ரம்ப்பும் அவரது தேசிய பாதுகாப்புக் குழுவும் நேரடியாக தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள்.

எரிசக்தி, போக்குவரத்து, விவசாயப் பொருட்கள் ஆகியவற்றை 500 பில்லியன் டாலர் அளவுக்கு அமெரிக்காவிடம் இருந்து கொள்முதல் செய்ய மோடி உறுதி அளித்துள்ளார்.

## மரணமடைந்த 2.5 கோடி பேரின் ஆதார் எண்கள் செயலிழப்பு - மத்திய அரசு நடவடிக்கை

புதுடெல்லி, பிப்.6:

மக்களவையில் இதுகுறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு, மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் ஜிதின் பிரசாதா எழுத்துப் பூர்வமாக தாக்கல் செய்த பதிலில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

உலகிலேயே மிகப்பெரிய பயோமெட்ரிக் அடையாள அமைப்பு, நமது ஆதார்தான். ஏறத்தாழ 134 கோடி பேர் ஆதார் வைத்துள்ளனர். உயிரிழந்தோரின் ஆதாரை செயலிழப்பு செய்யும் வழக்கமான நடவடிக்கை போல, இந்திய தனித்துவ அடையாள ஆணையம் இதுவரை 2.5 கோடி ஆதார் எண்களை செயலிழப்பு செய்துள்ளது.

ஒருவர் இறந்து விட்டால், அவரின் ஆதார் எண் செயலிழப்பு செய்ய வேண்டியது அவசியமாகும். அரசின் நலத் திட்ட உதவிக்காக தவறாக பயன்படுத்தப்படுவதை தடுக்கவும், அடையாள மோசடிக்கு பயன்படுத்தப்படுவதை தவிர்க்கவும் இதுபோல செய்யப்படுகிறது. அடையாள மோசடி உள்ளிட்டவற்றுக்கு ஆதார் பயன்படுத்தப்படாமல் தடுக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதில் பயோமெட்ரிக் தகவலை வெளிப்படையாக வைப்பது, அல்லது மறைத்து வைக்கும் வசதியும் அடங்கும். ஆதாரை அடிப்படையாக வைத்த க்யுஆர்கோடு, இ-ஆதார் ஆகியவற்றை பிரபலப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது. இவ்வாறு அந்தப் பதிலில் ஜிதின் பிரசாதா குறிப்பிட்டுள்ளார்.

## இண்டிகோவுக்கு எதிராக சிசிஐ விரிவான விசாரணைக்கு உத்தரவு

காசியாபாத், பிப்.6:

புதிய விமானப் பணி நேரக் கட்டுப்பாட்டு விதிகள் காரணமாக விமானிகள், விமானப் பணிப்பெண்கள் உள்ளிட்டோர் அடங்கிய பணிக் குழுவுக்கு ஏற்பட்ட பற்றாக்குறையால், கடந்த ஆண்டு டிசம்பரில் இண்டிகோ விமான சேவைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இதனால் நாட்டின் பல்வேறு நகரங்களில், அந்த நிறுவனத்தின் ஏராளமான விமானங்கள் தொடர்ந்து ரத்து செய்யப்பட்டதால், ஆயிரக்கணக்கான பயணிகள் பெரும் அவதிக்குள்ளாகினர்.

விமான சேவையில் ஏற்பட்ட குளறுபடிக்காக இண்டிகோ நிறுவனத்துக்கு விமானப் போக்குவரத்துத் தலைமை இயக்குநரகம் ரூ.22.2 கோடி அபராதம் விதித்தது. இந்நிலையில், சிசிஐ புதன்கிழமை வெளியிட்ட உத்தரவில், ‘ஆயிரக்கணக்கான விமானங்களை ரத்து செய்து, தனது சேவைகளை நிறுத்தியதன் மூலம், விமானங்கள் கிடைப்பதில் செயற்கையான பற்றாக்குறையை இண்டிகோ உருவாக்கியது. விமானப் போக்குவரத்தில் ஆதிக்கம் செலுத்தும் ஒரு நிறுவனத்தின் இந்த நடவடிக்கை, தொழில் போட்டிச் சட்டத்தின் 4 (2)(பி)(ஐ) பிரிவுக்கு எதிரானது (அந்தச் சட்டத்தின் 4-ஆவது பிரிவு என்பது மற்ற நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில், ஒரு நிறுவனம் தமக்கு உள்ள ஆதிக்க நிலையைத் தவறாகப் பயன்படுத்துவதுடன் தொடர்புள்ள பிரிவாகும்).

எனவே இந்த விவகாரம் தொடர்பாக சிசிஐ தலைமை இயக்குநரின் விரிவான விசாரணைக்கு உத்தரவிடப்படுகிறது’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போலி ஆவண வழக்கில் அல் ஃபலாஹ் பல்கலை தலைவர் கைது!







புதுடெல்லி, பிப்.6:

டில்லி குண்டுவெடிப்புக்குப் பிறகு, பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி) அளித்த புகாரின் பேரில், மோசடி மற்றும் முறைகேடுகள் தொடர்பான இரண்டு தனித்தனி முதல் தகவல் அறிக்கைகளின் அடிப்படையில், அல் ஃபலாஹ் பல்கலைக்கழகத்தின் தலைவரான ஜாவத் அகமது சித்திக்கியை தில்லி காவல்துறை குற்றப்பிரிவு போலீஸார் வியாழக்கிழமை கைது செய்துள்ளதாக காவல்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த விவகாரத்தில் அமலாக்க இயக்குநரகம் நடவடிக்கைகளைத் தொடங்கியதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது கூறப்படுகிறது. கடந்த ஆண்டு நவம்பர் 10 ஆம் தேதி செங்கோட்டை அருகே நடந்த குண்டுவெடிப்புக்குப் பிறகு, ஹரியாணாவின் ஃபரிதாபாத் மாவட்டத்தில் உள்ள அல் ஃபலாஹ் பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகள் தொடர்பான முறைகேடுகள் மற்றும் போலி ஆவணங்கள் குறித்து குற்றப்பிரிவு போலீஸார் வழக்குகள் பதிவு செய்துள்ளனர்.

பல்கலைக்கழகத்தின் தலைவர் ஜாவத் அகமது சித்திக் உள்ளூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். நீதிமன்றம் அவரை நான்கு நாட்கள் போலீஸ் காவலில் வைத்து விசாரிக்க குற்றப்பிரிவு குற்றப்பிரிவு போலீஸாருக்கு அனுமதி வழங்கியுள்ளதாக காவல்துறை அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். சித்திக்கின் ரூ.140 கோடி மதிப்பிலான சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 10 ஆம் தேதி ஜம்மு-காஷ்மீர், ஹரியாணா மற்றும் உத்தரபிரதேசம் முழுவதும் பரவியிருந்த ‘வெள்ளை காலர் பயங்கரவாத குழுவை’ போலீஸார் முறியடித்தனர். 2,900 கிலோகிராம் வெடிபொருட்களை பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் மூன்று மருத்துவர்கள் உள்பட 8 பேரை கைது செய்யப்பட்டனர். இவை நடந்து சில மணி நேரங்களுக்குப் பிறகு, தில்லியின் செங்கோட்டை மெட்ரோ நிலையத்திற்கு அருகே மெதுவாக நகரும் கார் மீது அதிக தீவிரம் கொண்ட வெடிப்பு ஏற்பட்டது, இதில் 13 பேர் உயிரிழந்தனர் மற்றும் பலர் காயமடைந்தனர்.

## எஸ்.ஐ.ஆர். வழக்கு: உச்சநீதிமன்றத்தில் நேரில் வாதிட்டார் மம்தா பானர்ஜி

புதுடெல்லி, பிப்.6:

மேற்கு வங்கத்தில் தேர்தல் ஆணையத்தால் மேற்கொள்ளப்படும் எஸ்.ஐ.ஆர். பணிகளை எதிர்த்து மம்தா பானர்ஜி வழக்குத் தொடுத்துள்ளார். அதன் மீதான விசாரணை உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி சூர்ய காந்த் தலைமையிலான அமர்வில் புதன்கிழமை நடைபெற்றது. இதில் மனுதாரரான மம்தா பானர்ஜி ஆஜராகி முன்வைத்த வாதம்:

எஸ்.ஐ.ஆர். பணிகளில் மேற்கு வங்கம் வேண்டுமென்றே குறிவைக்கப்படுகிறது. மேற்கு வங்கத்தில் கடைப்பிடிக்கப்படும் கெடுபிடிகள், அஸ்ஸாமில் கடைப்பிடிக்கப்படவில்லை. இது ஏன்? மேற்கு வங்கத்துக்கு எங்கும் நியாயம் கிடைக்கவில்லை. இதுதொடர்பாக தேர்தல் ஆணையத்துக்கு நான் ஆறு முறை கடிதம் எழுதியுள்ளேன். மேற்கு வங்கத்தில் எஸ்.ஐ.ஆர். பணிகளின்போது ஆதாரை தேர்தல் ஆணையம் ஏற்காமல் வேறு ஆவணங்களைக் கோரியது. ஏராளமான மக்கள் உயிருடன் இருந்தபோதிலும், இறந்துவிட்டதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இந்த விவகாரத்தில் தேர்தல் ஆணையம் கேட்ட அனைத்தையும் மாநில அரசு அளித்துள்ளது. எஸ்.ஐ.ஆர். பணிகள் இதே கோணத்தில் மேற்கு வங்கத்தில் தொடர்ந்தால், ஏராளமானோர் வாக்குரிமையை இழப்பார்கள். இது ஜனநாயகத்தின் அடிப்படை மீதான தாக்குதலாகும். ஆதலால் உச்சநீதிமன்றம் இந்த விவகாரத்தில் தலையிட்டு ஜனநாயகத்தை காக்க வேண்டும். எனக்கு வாதிட அனுமதி அளித்த உச்சநீதிமன்றத்துக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார் மம்தா பானர்ஜி.

## ரயிலை சுத்தமாக பராமரிக்க பயணிகளிடம் கூடுதல் கட்டணம் வசூலிப்பா? - மத்திய அரசு மறுப்பு

புதுடெல்லி, பிப்.6:

ரயில்பெட்டிகளை சுத்தமாக பராமரிப்பதற்கு பயணிகளிடம் கூடுதல் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படவில்லை என்று மத்திய அரசு மறுப்புத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மக்களவை யில் எழுப்பப்பட்ட கேள்விக்கு ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் எழுத்துப் பூர்வமாக பதில் தாக்கல் செய்துள்ளார். அதில் அவர் தெரிவித்திருப்பதாவது: ரயில் பெட்டிகளை சுத்தமாக வைத்திருக்கவும், சுகாதாரத்தை பேணவும், அதை உறுதி செய்யவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்திய ரயில்வே எடுத்து வருகிறது.

இதில் ரயில் பெட்டியின் உள்பகுதி, வெளிப்புற பகுதி மற்றும் கழிப்பறைகளை சுத்தமாக வைத்திருப்பதும் அடங்கும். இந்த பணிக்காக ஓடும் ரயிலில் ஊழியர் ஒருவர் இருப்பார். அவர் ஓடும் ரயிலில் சுத்தத்தை பராமரிப்பதுடன், அதுதொடர்பான பயணிகளின் குறைகளையும் கேட்டறிவார். இதுமட்டுமின்றி, குறிப்பிட்ட ரயில் நிலையங்களிலும் ரயிலை சுத்தப்படுத்தும் பணி நடைபெறுகிறது.

ரயில் பெட்டிகளில் இருந்து மனித கழிவுகள் வெளியே தண்டவாளத்தில் விழாமல் இருக்கும் வகையில், பயோ கழிப்பிட வசதியும் செய்யப்பட்டுள்ளது. இந்த பணிகள் அனைத்தும் தொடர்ந்து ஆய்வுகள் மூலமும், ரயில் மதாத், ரயில் ஒன் செயலி, பயணிகள் தெரிவிக்கும் கருத்துகள் அடிப்படையில் கண்காணிக்கப்படுகிறது. ரயிலை சுத்தமாக வைத்திரு க்கவும், ரயில் நிலையங்களில் சுகாதாரத்தை பேணவும் தனியாக நிதி ஒதுக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. இதற்காக பயணிகள் கட்டணத்துடன் சேர்த்து கூடுதல் தொகை வசூலிக்க ப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

## இந்தி மொழியில் யுனானி மருத்துவக் கல்வி: மத்திய பிரதேசத்தில் முதன்முறையாக அமல்



புதுடெல்லி, பிப்.6:

ஆங்கில மருத்துவத்தை அடுத்து, யுனானி மருத்துவக் கல்வி இந்தியில் போதிக்கப்பட உள்ளது. நாட்டில் முதன்முறை யாக மத்திய பிரதேச மாநிலத் தில் இது அமலாக உள்ளது.

பாஜக ஆளும் ம.பி.யில் ஆங் கில மருத்துவக் கல்வி இந்தியில் துவக்கப்பட்டது. அந்தவகை யில் யுனானி மருத்துவ கல்வி இந்தியில் தொடங்கப்பட உள் ளது. யுனானி மருத்துவத்தை இந்தியில் போதிக்க அதன் பாடங்களை ம.பி. அரசு தயார் செய்து வருகிறது.

இந்நிலையில், அம்மாநிலத்தின் ஆயுஷ் துறை உருது புத்தகங்களை இந்தியில் மொழி பெயர்த் துள்ளது. பியுஎம்எஸ் எனும் இளங்கலை மருத்துவக் கல் வியின் முதல் ஆண்டில் ஏழு பாடங்கள் உள்ளன. இவற் றில் ஐந்து பாடங்களுக்கான உருது புத்தகங்கள் இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இரண்டு பாடங்களுக்கான புத் தகங்கள் உருது மற்றும் அரபு மொழிகளில் உள்ளன. உடற் கூறியல் மற்றும் உடலியல் புத் தகங்களின் மொழிபெயர்ப்புப் பணியை மருத்துவக் கல்வித் துறை மேற்கொண்டது.

யுனானி மருத்துவத்திற்கான பாடத்திட்டம் ஒரே மாதிரி யாக இருப்பதால், அதே புத் தகங்கள் இங்கும் பயன்படுத் தப்படும். இந்திய மருத்துவ முறைக்கான தேசிய ஆணை யமும் இதற்கு ஆதரவாக உள் ளது. அந்த ஆணையம் இந்தி யில் ஒரு பாடத்திட்டத்தை தயாரித்துள்ளது. இதற்கிடை யில், ம.பி.யின் மருத்துவப் பல் கலைக்கழகம் உருது மற்றும் ஆங்கிலத்துடன் இந்தியிலும் வினாத்தாள்களைத் தயாரித்து வருகிறது.

சமீப ஆண்டுகளுக்கு முன் ஆங்கில மருத்துவமானது இந் தியில் போதிக்கப்படத் துவங் கியது. அதன் பாடங்களும் இந் தியில் மொழி மாற்றம் செய் யப்பட்டன.

இதையடுத்து சமீப ஆண்டுகளாக உருது மொழி பாடங்கள் கொண்ட யுனானி மருத்துவத்தின் விரிவுரைகள் இந்தியில் போதிக்கப்பட துவங் கின. இப்போது அதன் உருது மற்றும் அரபி மொழிப் பாடங் களும் இந்தியில் மொழிபெயர்க் கப்பட்டுள்ளன.

எனவே, யுனானி மருத்து வக் கல்வியும் இனி இந்தியில் போதிக்கப்பட உள்ளது.

## பிரதமர் சூரிய மின்சக்தி திட்டத்தில் 28 லட்சம் வீடுகள் பயன்: ரூ.16,000 கோடி நிதியுதவி



புதுடெல்லி, பிப்.6:

இது தொடர்பாக மத்திய புத்தாக்க, மரபுசாரா எரிசக்தித் துறை இணையமைச்சர் ஸ்ரீபாத யசோ நாயக் எழுத்து மூலம் அளித்த பதிலில், ‘சர்வதேச அமைப்புகள், நிறுவனங்களுடன் கைகோத்து சூரிய மின்உற்பத்தித் திட்டத்தை மத்திய அரசு வலுப்படுத்தி வருகிறது. கடந்த 2024-ஆம் ஆண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டதில் இருந்து நாடு முழுவதும் 22,65,521 இடங்களில் கூரைகளின் சூரிய மின் உற்பத்தி தகடுகள் நிறுவப்பட்டுள்ளன. இதில் 28,24,518 வீடுகள் பயனடைந்துள்ளன. அவர்களுக்கு ரூ.16,061 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. ஒரு கோடி வீடுகளில் நிறுவி 1 லட்சம் கோடி யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்வதும், கரியமிலவாயு வெளியேற்றத்தை 72 கோடி டன் குறைப்பதும் இலக்காகும். ஒவ்வொரு சூரிய மின் உற்பத்தித் தகடும் சுமார் 25 ஆண்டுகள் வரை செயல்படும். அந்த காலகட்டத்துக்குள் இலக்கு எட்டப்படும் என்று தெரிவித்துள்ளார்.

## சபரிமலை: கேரள உயர்நீதிமன்றம் திருப்தி

திருவனந்தபுரம், பிப்.6:

சபரிமலை தங்கக் கவச முறைகேடு வழக்கை சிபிஐ வசம் ஒப்படைக்கக் கோரி, மாநில பாஜக தலைவர் ராஜீவ் சந்திரசேகர் உள்ளிட்டோர் தாக்கல் செய்த மனுக்கள் மீது உயர்நீதிமன்ற நீதிபதிகள் ராஜா விஜயராகவன், கே.வி.ஜெயகுமார் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் புதன்கிழமை விசாரணை நடைபெற்றது. அப்போது, ‘சபரிமலை தங்கக் கவச வழக்கை விசாரிக்கும் எஸ்ஐடி, திறமையான அதிகாரிகளை உள்ளடக்கிய சிறந்த பிரிவாகும்; அவர்களின் பணியை கேள்விக்கு உட்படுத்துவதன் மூலம் அவர்களை மனச்சோர்வுக்கு ஆளாக்க மாட்டோம். எஸ்ஐடி விசாரணையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இப்போதைய நிலையில், சிபிஐ விசாரணைக்கு அவசியமில்லை’ என்று நீதிபதிகள் தெரிவித்தனர். ஜாமீன் மனு மீது உத்தரவு ஒத்திவைப்பு: சபரிமலை ஐயப்பன் கோயில் கருவறைக் கதவுகளின் தங்கக் கவச முறைகேடு வழக்கில் ஏற்கெனவே ஜாமீன் பெற்ற உண்ணிகிருஷ்ணன் போற்றி, துவாரபாலகர் சிலை வழக்கிலும் ஜாமீன் கோரியிருந்தார். அந்த மனு மீதான உத்தரவை கொல்லம் நீதிமன்றம் புதன்கிழமை ஒத்திவைத்தது.

## மத்திய அரசின் பாரத் டாக்ஸி! 30% குறைந்த கட்டணத்தில் கார், ஆட்டோ, பைக் பயணம்..!



புதுடெல்லி, பிப்.6:

ஓலா, உபர் போன்ற செயலிகளுக்கு போட்டியாக பாரத் டாக்ஸி செயலியை மத்திய கூட்டுறவுத் துறை அறிமுகம் செய்யவுள்ளது.

இந்த செயலி மூலம் கார், ஆட்டோக்களை இயக்கும் ஓட்டுநர்கள் பெறும் தொகையில் எந்த பிடித்தமும் (கமிஷன்) செய்யப்படாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

டில்லியில் பாரத் டாக்ஸி செயலியை மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா இன்று தொடங்கிவைக்கவுள்ளார்.

முதல்கட்டமாக 2.5 லட்சம் வாகனங்கள் இந்த செயலியில் பதிவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஓலா, உபர், ரேபிடோ செயலிகளைப் போலவே பாரத் டாக்ஸி செயலியிலும் பைக், ஆட்டோ மற்றும் கார்களை புக் செய்யலாம். உள்ளூர், வெளியூர் மற்றும் ரவுண்ட் டிரிப் வசதிகளும் உள்ளன.

### கமிஷன் கிடையாது

பாரத் டாக்ஸியை பயன்படுத்தும் ஓட்டுநர்கள் கமிஷன் அடிப்படையில் இல்லாமல் அவர்களே உரிமையாளர்களாக உள்ளனர். வாடிக்கையாளர்களிடம் இருந்து பெறும் தொகையில் எந்த கமிஷனும் பிடித்தம் செய்யப்படாது.

அதற்கு பதிலாக செயலி பராமரிப்புக் கட்டணமாக ஓட்டுநர்கள் நாளொன்றுக்கு ரூ. 30 செலுத்தினால் போதும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள ஓலா, உபர் போன்ற செயலிகளை விட பாரத் டாக்ஸி 30 சதவீதம் குறைந்த கட்டணத்தில் இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியார் செயலிகள் ஒரு பயணத்துக்கு ரூ. 30 முதல் 50 வரை ஓட்டுநரிடமிருந்து கமிஷன் பெறுகிறார்கள். ஆனால், பாரத் செயலியைப் பயன்படுத்தும்போது அந்த கட்டணம் குறையும்.

இந்த செயலியில் உள்ளமைக்கப்பட்ட பாதுகாப்பு அம்சங்களும், பிரத்யேக உதவி எண்ணும் உள்ளன. கூடுதலாக, பயணிகளின் புகார்களை விரைவாகத் தீர்க்க தில்லி காவல்துறையுடன் இணைந்து 35 சிறப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தத் தளத்தில் உள்ள ஓட்டுநர்களின் விவரங்கள் சரிபார்க்கப்பட்டிருக்கும்.

இந்த செயலி கடந்தாண்டு டிசம்பரில் டில்லி மற்றும் குஜராத்தில் சோதனை முறையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த சோதனையில், நாள்தோறும் சராசரியாக 5,500 பயணங்களைப் பதிவு செய்தது. இதில் 4,000 விமான நிலையப் பயணங்களும் அடங்கும். மேலும், 1.4 லட்சத்துக்கும் மேற்பட்ட ஓட்டுநர்கள் ஏற்கனவே பதிவு செய்துள்ளனர்.

# பலுசிஸ்தானில் 216 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை - பாகிஸ்தான் ராணுவம் தகவல்



**இஸ்லாமாபாத், பிப்.6:**

பாகிஸ்தானின் தென்மேற்கே அமைந்த இயற்கை வளங்கள் நிறைந்த பெரிய மாகாணம் பலுசிஸ்தான். அங்கு வாழும் ஒரு பகுதி மக்கள் பாகிஸ்தான் அரசிடம் இருந்து தங்களுக்கு விடுதலை வேண்டும் என போராடி வருகின்றனர். மேலும், பலுச் விடுதலைப்படை அமைப்பை சேர்ந்தவர்கள் வெடிகுண்டு தாக்குதல் உள்ளிட்ட பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையில் ஆப்கானிஸ்தானில் செயல்பட்டு வரும் தலிபான்களின் கிளை அமைப்பான தெஹ்ரிக்-இ-தலிபான் அமைப்பை சேர்ந்தவர்கள் பலுசிஸ்தானில் பதுங்கி இருப்பதாக பாகிஸ்தான் அரசு குற்றம்சாட்டி வருகிறது. இதையடுத்து, பாகிஸ்தான் ராணுவம் பலுசிஸ்தானில் தொடர்ந்து பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், கடந்த ஜனவரி 26-ந்தேதி பாகிஸ்தான் பாதுகாப்பு படையினர் 'ஆபரேஷன் ராட்-உல்-பிட்னா' என்ற பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையை தொடங்கினர். அதன்படி முதற்கட்டமாக பன்ஜ்குர் மற்றும் ஹர்னாய் ஆகிய மாவட்டங்களில் தீவிர தேடுதல் வேட்டை நடத்தினர்.

அப்போது பாதுகாப்பு படையினருக்கும், பயங்கரவாதிகளுக்கும் இடையே துப்பாக்கி சண்டை வெடித்தது. இந்த தாகுதலில் 41 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக பாகிஸ்தான் ராணுவம் தெரிவித்தது. தொடர்ந்து பலுசிஸ்தான் மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் பாகிஸ்தான் ராணுவத்தினர் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இந்த நிலையில், 'ஆபரேஷன் ராட்-உல்-பிட்னா' தற்போது முடிவுக்கு வந்துள்ளதாகவும், இந்த நடவடிக்கை மூலம் இதுவரை 216 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாகவும் பாகிஸ்தான் ராணுவம் தெரிவித்துள்ளது.

அதே சமயம், பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 22 பாதுகாப்பு படை வீரர்கள் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈரான் விமானம் மீது அமெரிக்கா தாக்குதல்

**வாஷிங்டன், பிப்.6:**

அமெரிக்க கடற்படை ஈரானின் உளவு விமானத்தை சுட்டு வீழ்த்தியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இரு நாடுகளுக்கும் இடையே மோதல் போக்கு நீடித்து வரும் நிலையில் யுஎஸ்எஸ் ஆபிரகாம் லிங்கன் விமானம் தாங்கி போர்க்கப்பலை ஈரான் மீது தாக்குதல் நடத்தும் வகையில் மத்திய கிழக்கு கடற்பகுதியில் அமெரிக்கா நிலை நிறுத்தியுள்ளது. இந்நிலையில் இருநாடுகளுக்கும் இடையே போரைத் தவிர்ப்பதற்கான முக்கியத் தூதரகப் பேச்சுவார்த்தைகள் விரைவில் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சூழலில் இந்தச் சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## வரலாறு காணாத பனிப்பொழிவு: ஜப்பானில் 35 பேர் உயிரிழப்பு

**டோக்கியோ, பிப்.6:**

ஜப்பானின் வடக்குப் பகுதிகளில் கடந்த இரண்டு வாரங்களாக நீடித்து வரும் வரலாறு காணாத கடும் பனிப்பொழிவு காரண மாக நாடு முழுவதும் இதுவரை 35 பேர் உயிரி ழந்துள்ளதாகவும் 393 பேர் காயமடைந்துள்ள தாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. பனியை அகற்றும்போது ஏற்பட்ட விபத்துகள், உடல்நலக் குறைவு ஆகியவையே இந்த உயிரிழப்புகளுக்கு முக்கியக் காரணமாகக் கூறப்படுகிறது. ஜப்பா னின் 15 மாகாணங்கள் இந்த அதீத பனிப்பொழிவால் பாதிக்கப்பட்டுள்ளன. பல பகுதிகளில் சுமார் 2 மீட்டர்உயரத்திற்குப் பனி குவிந்துள்ளது.

## ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக்கரையில் 37,000 பாலஸ்தீனர்கள் வெளியேற்றம்



**காசா, பிப்.6:**

இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனத்தின் மேற்குக்கரை பகுதியில் கடந்த 2025-ஆம் ஆண்டில் மட்டும் 37,000-க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் வீட்டை விட்டு துரத்தப்பட்டுள்ளனர். அதேபோல பாலஸ்தீன மக்களின் நிலத்தை ஆக்கிர மிக்கும் இஸ்ரேல் குடிமக்களின் வன்முறைகளின் அளவும் முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரித்துள்ளதாகவும் ஐநா பொதுச்செயலாளர் அந்தோணியோ குட்டரெஸ் கவலை தெரிவித்துள்ளார். மேலும் 2026-ஆம் ஆண்டுக்குள் நுழையும்போது, அமைதிக்கான நேரம் மிக வேகமாக முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது என்றும் எச்சரித்துள்ளார்.

## பிரான்ஸ்: லெ பென் மீதான தடையை நீட்டிக்க கோரிக்கை

பிரான்ஸ் நாட்டின் தீவிர வலதுசாரியும் முக்கிய எதிர்க்கட்சித் தலைவருமான லெ பென் மீதான தடையை நீட்டிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடாளுமன்ற நிதியை மோசடி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் அவர் பொதுப் பதவிகளை வகிக்க 5 ஆண்டு காலத் தடை விதிக்கப்பட்டது. இத்தடையை மேலும் நீட்டிக்க வேண்டும் என்று அரசுத் தரப்பு வழக்கறி ஞர்கள் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர். இத்தடை உறுதி செய்யப்பட்டால், 2027-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர் தலில் அவர் போட்டியிட முடியாத நிலை ஏற்படும்.

## புடினுக்கு டிரம்ப் பாராட்டு

கடந்த ஒரு வாரமாக உக்ரைன் - ரஷ்யா எரிசக்தி நிலையங்கள் மீதான தாக்குதலை நிறுத்தி வைக்க தற்காலிக போர் நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டது. அரபு அமீரகத்தில் அமெரிக்கா தலைமையில் மீண்டும் அமைதிப் பேச்சுவார்த்தை நடக்கும் நிலையில், பிப்.3 ஆம் தேதியுடன் இந்த தற்காலிக அமைதி ஒப்பந்தம் முடிவுக்கு வந்தது. இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய டிரம்ப், 'ரஷ்ய ஜனாதிபதி புடின் போரை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று விரும்புகிறேன். ஒருவாரம் தாக்குதலை நிறுத்தி வைப்பதாக அவர் கொடுத்த வாக்கை காப்பாற்றினார்' என கூறியுள்ளார்.

## வருந்துகிறேன், மன்னிப்பு கோருகிறேன்! எப்ஸ்டீன் குறித்து பில்கேட்ஸ் விளக்கம்!



**வாஷிங்டன், பிப்.6:**

ஜெஃப்ரி எப்ஸ்டீனுடன் தான் செலவிட்ட ஒவ்வொரு நிமிடத்திற்கும் வருந்துவதாகவும், மன்னிப்புக் கோருவதாகவும் பில்கேட்ஸ் தெரிவித்துள்ளார்.

எப்ஸ்டீன் கோப்புகளில் வெளியான தகவல்கள் குறித்து மைக்ரோசாஃப்ட் நிறுவனர் பில்கேட்ஸ் விளக்கம் அளித்துள்ளார்.

ஆஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்த ஆங்கில ஊடகத்துக்கு புதன்கிழமை பேட்டியளித்த பில்கேட்ஸ் தெரிவித்ததாவது:

"எப்ஸ்டீன் குறிப்பிட்டது போன்ற மின்னஞ்சலை நான் ஒருபோதும் அனுப்பவில்லை. அந்த மின்னஞ்சல் போலியானது. அவருடைய உள்நோக்கம் என்னவாக இருந்தது என்பது எனக்குத் தெரியவில்லை. ஏதேனும் ஒரு வகையில் என் மீது தாக்குதல் நடத்த முயற்சித்திருக்கிறார்.

2011 ஆம் ஆண்டு முதல்முறையாக எப்ஸ்டீனைச் சந்தித்தேன். அதன்பிறகு மூன்று ஆண்டுகளில் பலமுறை அவருடன் இரவு விருந்தில் கலந்துகொண்டேன்.

ஆனால், அவருடைய கரீபியன் தீவுக்கு ஒருபோது சென்றதில்லை, பெண்களுடன் எந்த உறவும் வைத்துக் கொள்ளவில்லை" என்று விளக்கம் அளித்துள்ளார்.

## வங்கதேசத்துக்கு ஆதரவு; இந்தியாவுக்கு எதிரான போட்டியைப் புறக்கணிக்கிறோம்: பாக். பிரதமர்



**மாஸ்கோ, பிப்.5:**

பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப் வங்கதேசத்துக்கு ஆதரவாக, டி20 உலகக் கோப்பையில் இந்தியாவுக்கு எதிரான போட்டியைப் புறக்கணிப்பதாகக் கூறியுள்ளார்.

வங்கதேசத்துக்கு மாற்றாக ஸ்காட்லாந்து அணியை டி20 உலகக் கோப்பையில் இணைத்த ஐசிசியின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப் கூறியதாவது:

டி20 உலகக் கோப்பையில் மிகவும் தெளிவான நிலைப்பாட்டை எடுத்துள்ளோம். அது என்னவென்றால், இந்தியாவுக்கு எதிரான போட்டியில் விளையாட மாட்டோம். ஏனெனில் களத்தில் எந்த விதமான அரசியலும் இருக்க வேண்டாம் என நினைக்கிறோம்.

நாங்கள் முழுமையாக வங்கதேசத்துக்கு ஆதரவாக நிற்கிறோம். இதுதான் சரியான முடிவு என்றும் நினைக்கிறோம். நாங்கள் வங்கதேசத்துடன் நிற்கிறோம் எனக் கூறியுள்ளார்.

அயர்லாந்து உடனான பாகிஸ்தானின் பயிற்சி ஆட்டம் மழையினால் கைவிடப்பட்டது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டி20 தொடரை 3-0 என வென்ற பாகிஸ்தான் நல்ல ஃபார்மில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## ரஷியா - அமெரிக்கா ஒப்பந்தம் முடிவு! மீண்டும் ஓர் அணு ஆயுதப் போட்டியா?



**வாஷிங்டன், பிப்.6:**

ரஷியா - அமெரிக்கா இடையிலான அணு ஆயுத ஒப்பந்தம் இன்றுடன் முடிவடைந்தது.

ரஷியா - அமெரிக்கா ஆகிய இரு நாடுகளும் அணு ஆயுதங்களைக் கட்டுப்படுத்தும் அல்லது குறைக்கும் நோக்கில், 2010 ஆம் ஆண்டில் நியூஸ்டார்ட் என்ற ஒப்பந்தம் செய்துகொண்டன. இதன்படி, இரு நாடுகளும் தலா 1,550 அணு ஆயுதங்களை மட்டுமே வைத்துக்கொள்ள முடியும். இந்த ஒப்பந்தம் 2021-ல் காலாவதியாகவிருந்த நிலையில், மேலும் 5 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் நீட்டிக்கப்பட்டது. இந்த நிலையில், இரு நாடுகளிக்கிடையேயான இந்த ஒப்பந்தம் நேற்றுடன் முடிவடைந்தது. இந்த ஒப்பந்தத்தை மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்க ரஷியா கோரிக்கை விடுத்தபோதிலும், அதற்கு அமெரிக்கா பதிலேதும் தெரிவிக்கவில்லை. இதனிடையே, சீனா அணு ஆயுத வளர்ச்சியில் கவனம் செலுத்தி வருவதால், அமெரிக்காவும் தனது ஆயுதக் கிடங்கை அதிகரிக்க முயல்வதாகவும் கூறப்படுகிறது.

இதனையடுத்து, மீண்டும் ஓர் அணு ஆயுதப் போட்டி உருவாகுமா என்ற கேள்வியும் உலக நாடுகளிடையே எழுந்துள்ளது.

## லிபியா முன்னாள் அதிபர் கடாபியின் மகன் சுட்டுக் கொலை

**திரிபோலி, பிப்.6:**

வட ஆப்பிரிக்க நாடான லிபியாவில் கடந்த 1969-ம் ஆண்டு முதல் மொம்மர் கடாபி ஆட்சி செய்து வந்தார். பல்வேறு அடக்குமுறைகளால் பாதிக்கப்பட்ட மக்கள் கடந்த 2011-ம் ஆண்டு உள்நாட்டுக் கலவரத்தில் ஈடுபட்டனர். அப்போது சர்வாதிகார அதிபர் கடாபி பட்டப்பகலில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதன் மூலம் 40 ஆண்டுகளுக்குப் பிறகு லிபியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. கடாபியின் 2-வது மகன் சைப் அல் இஸ்லாம் கடாபி (53). இவர் லிபியாவின் ஜின்டான் நகரில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வந்தார். கடாபிக்கு எதிராக மக்கள் கலவரத்தில் ஈடுபட்ட போது மனித குலத்துக்கு எதிராக பல்வேறு கொடுமைகளை செய்ததாக சைப் அல் இஸ்லாம் மீது குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இதையடுத்து இவரை தேடப்படும் குற்றவாளியாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அறிவித்தது. இந்நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை வீட்டின் தோட்டத்தில் சைப் அல் இஸ்லாம் இருந்தபோது, 4 மர்ம நபர்கள் திடீரென வீட்டுக்குள் புகுந்தனர். வீட்டில் இருந்த சிசிடிவி கேமராக்கள் அனைத்தையும் செயலிழக்க செய்தனர். பின்னர் சைப் அல் இஸ்லாம் மீது சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றனர். இதில் சைப் உயிரிழந்தார். இத்தகவலை சவுதியின் அல் அரேபியா தொலைக்காட்சி வெளியிட்டது. அவரை சுட்டுக் கொன்றவர்கள் யார் என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை என்று வழக்கறிஞர் ஒருவர் தெரிவித்தார்.

## 'இந்தியாவுக்கு முழு சுதந்திரம் உள்ளது' - கச்சா எண்ணெய் விவகாரத்தில் ரஷ்யா கருத்து

**மாஸ்கோ, பிப்.6:**

"உலக நாடுகளில் எங்கிருந்து வேண்டுமானாலும் தங்களுக்கு தேவையான கச்சா எண்ணெயை இந்தியா பெறுவதற்கான முழு சுதந்திரம் உள்ளது" என ரஷ்யா தெரிவித்துள்ளது.

இந்தியா மற்றும் அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், இந்தியா இனி ரஷ்ய கச்சா எண்ணெயை வாங்காது என அமெரிக்க தரப்பு தெரிவித்து வருகிறது. இத்தகைய சூழலில் இந்த விவகாரம் தொடர்பாக புதன்கிழமை அன்று ரஷ்ய செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் கூறியதாவது:

"இந்தியாவுக்கு தேவையான கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலியம் பொருட்களை ரஷ்யா மட்டுமே தனியொரு தேசமாக விநியோகிக்கவில்லை. இதை ரஷ்யா உட்பட உலக அளவில் எண்ணெய் வளம் மிக்க சர்வதேச நாடுகள் நன்கு அறியும். ஏனெனில் இந்தியா பல்வேறு நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் வாங்கி வருகிறது. அதனால் இதில் புதிது எதுவும் இல்லை என நாங்கள் பார்க்கிறோம். உலக நாடுகளில் எங்கிருந்து வேண்டுமானாலும் தங்களுக்கு தேவையான கச்சா எண்ணெயை இந்தியா பெறுவதற்கான முழு சுதந்திரம் உள்ளது" என அவர் தெரிவித்தார்.

## சீன, ரஷ்ய அதிபர்கள் வீடியோ அழைப்பில் பேச்சு



**பெய்ஜிங், பிப்.6:**

ரஷ்யாவுக்கு ஆதரவளிப்பதை சீனா நிறுத்த வேண்டும் என ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். ஆனால், சீனா, ரஷ்யாவுடன் தொடர்ந்து வர்த்தகம் செய்து வந்தது. இதனால் மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவுக்கு பொருளாதார தடைவிதித்தும், எந்த பலனும் இல்லை. தற்போது ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் சீனாவுடன் உறவை மேம்படுத்தி வருகின்றனர். இங்கிலாந்து மற்றும் கனடா பிரதமர்கள் சீனாவுக்கு கடந்த மாதம் சென்றனர். ஜெர்மன் அதிபரும் இந்த மாதம் சீனா செல்லவுள்ளார்.

இந்நிலையில் சீன அதிபர் ஜி ஜின்பிங்கும், ரஷ்ய அதிபர் புதினும் நேற்று வீடியோ அழைப்பில் பேசினர். ரஷ்யா- உக்ரைன் இடையேயான போர் தொடர்பாக சீனாவின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்பதை உறுதி செய்வதற்காக இவர்கள் பேசியிருக்கலாம் என கூறப்படுகிறது.

ரஷ்ய பாதுகாப்பு கவுன்சில் செயலாளர் செர்கே சோய்கு, கடந்த வாரம் பெய்ஜிங் சென்று, சீன வெளியுறவுத் துறை அதிகாரி வாங் யீயை சந்தித்தார். உலகளவில் நிச்சயமற்ற சூழல் நிலவும் நிலையில், இரு நாடுகளும் நெருங்கிய உறவை பராமரிக்க அவர்கள் ஒப்புக் கொண்டனர்.

## 40 ஆண்டுகளில் இல்லாத வகையில் உலகளவில் ஜனநாயகம் வீழ்ச்சி




**வாஷிங்டன், பிப்.6:**

கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு உலகம் முழுவதும் ஜனநாயகம் வீழ்ச்சியடைந்து வருகிறது என 'ஹ்யூமன் ரைட்ஸ் வாட்ச்' அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும் டொனால்டு டிரம்ப் அமெரிக்காவை ஒரு சர்வாதிகார நாடாக மாற்றி வருவதாகவும் அது தெரிவித்துள்ளது. வாஷிங்டன் நகரை தலைமை இடமாகக் கொண்ட அமெரிக்காவுக்கு ஆதரவாக இயங்கி வருகின்ற மனித உரிமை கண்காணிப்பு அமைப்பான 'ஹ்யூமன் ரைட்ஸ் வாட்ச்' தனது ஆண்டறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் மனித உரிமைகள் மீது நடத்தப்பட்டு வரும் தாக்குதல்கள் குறித்துப் பல்வேறு அதிர்ச்சிகர தகவல்களைப் பகிர்ந்துள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது: சட்ட விதிகளின் அடிப்படையில் இயங்கும் சர்வதேச ஒழுங்கு முறை தற்போது நசுக்கப்பட்டு வருகிறது. டிரம்ப் மீண்டும் அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப் பேற்ற பிறகு ஒரு உலகளவில் மனித உரிமைகள் ஆபத்தான சரிவைச் சந்தித்துள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்நாட்டிலேயே மனித உரிமைகளை மதிக்காமல் தொடர்ந்து அப்பட்டமான மீறல்க ளில் டிரம்ப் ஈடுபட்டு வருகிறார். குறிப்பாக, போதிய ஆவணங்கள் இன்றி அமெரிக்காவில் குடியிருக்கும் வெளி நாட்டினரை கைது செய்ய, முகமூடி அணிந்து கொண்டு ஆயுதம் ஏந்தி வரும் இமிக்ரே ஷன் மற்றும் கஸ்டம்ஸ் என்போர்ஸ்மென்ட் (ICE) குழுவினரால் நூற்றுக்கணக்கான வன் முறைகள் அரங்கேற்றப்படுகின்றன. சர்வாதிகாரத்தை நோக்கி அமெரிக்கா இனம் மற்றும் இன ரீதியான மக்களைப் பலிகடா ஆக்குவது. அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் தேசிய பாதுகாப்புப் படையினரை (NATIONAL GUARD) உள்நாட்டில் நிலைநிறுத்துவது. அரசியல் எதிரிகள் மற்றும் தன்னை விமர்சிக் கும் முன்னாள் அதிகாரிகள் மீது பழிவாங்கும் நடவடிக்கைகளை எடுப்பது. ஜனநாயக ரீதியான செக் அண்ட் பேலன்ஸ் (CHECKS AND BALANCES) முறையைச் சிதைத்து, நிர்வாக அதிகாரத்தைத் தன்னிச்சையாக விரி வாக்க முயல்வது. இவை அனைத்தும் அமெரிக்கா சர்வாதிகாரத்தை நோக்கி நகர்வதை உறுதிப்படுத்துகின்றன என அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

சர்வதேசச் சட்டத்தின்படி குற்றமாகக் கருதப் படும் "கட்டாயமாக காணாமல் ஆக்குதல்" (ENFORCED DISAPPEARANCES) என்ற செயலில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது என்பதனை மீண்டும்ஒருமுறைஅவ்வமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. 252 வெனிசுலா புலம்பெயர்ந்தோரை எல்சால்வடாரில் உள்ள ஒரு சிறைக்கு அனுப்பிய சம்பவத்தை இதற்கு உதாரணமாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.